உ
முருகன் துணை.

பெரிய

# வைத்திய அரிச்சுவடி.

இரண்டாம் பாகம்

இஃது
மதுரை, சோதிடம்

தம்புசாமி நாயுடவர்கள் குமாரர்

ஸ்ரீ. த. குப்புசாமி நாயுடவர்கள்

பல ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு
திரட்டி எழுதியது.

காப்பி ரைட்] 1930 [விலை ரூ 1

உ

முருகன் துணை.

பெரிய

# வைத்திய அரிச்சுவடி

## இரண்டாம் பாகம்.

---

இஃது

மதுரை, சோதிடம்

தம்புசாமி நாயுடவர்கள் குமாரர்,

**ஸ்ரீ: த. குப்புசாமி நாயுடவர்கள்**

பல ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு

திரட்டி எழுதி,

---

மதுரைத் தமிழ் வித்வான்

ஸ்ரீ: நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள்

பரிசோதித்தது.

மதுரை, புஸ்தக வியாபாரம்,

**இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்**

அவர்களால்

மதுரை,

எக்ஸெல்ஸியர் பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

---

Copy Right] 1930. [விலை 1-0-0

P33-5339



# சாற்றுக் கவிகள்.

தமிழ்ச்சங்க வித்வானும்,

மதுரை எக்ஸெல்ஸியர் பிரஸ் மானேஜருமாகிய

## ஸ்ரீ: நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள்

## இயற்றியவை.

விருத்தம்.

நாட்டாறு சாத்திரமும் நன்னூலும் தொல்காப்பி
யமுந்தான் நன்கு
கேட்டாருக் கியம்பிவரு மொருபுலவன் அரசரெலாங்
கேள்வி கண்ட
கோட்டாறு செய்குதம்பிப் பாவலனோ டினிதிருந்து
கூடிப் பன்னூல்
எட்டார்வ தாய்ந்துபிழை திருத்தியுயர் பதிப்பினிலெட்
டிசை சால் வல்லோன்;
முத்தமிழ் நடையும் முழுதறி புலவன் முயன்றுமுன்
னூலுரை மொழிந்த
புத்தகம் பலதும் போற்றிடப் பதித்தோன் பொன்னெனப்
பனுவலும் புகல்வோன்
வித்துவான் மதுரைத் தம்புசா மியின்சேய் விளம்பிடுங்
குப்புசா மியொரு
சுத்தவைத் தியநூ லரிச்சுவ டியெனத் தொகுத்தனன்
தொடங்குநர்க் காமால்.

வெண்பா.

மாதிடத்தைக் கல்லாத மானுடரே வைத்தியத்தைச்
சோதிடத்தைப் பொய்யென்று சொல்லிடுவர் — ஓதிடத்தாம்
ஐயைக் திருபானைந் தாமெனக்கல் லான்கணக்கைப்
பொய்யென்று கூறுவான் போன்று.

முருகன் றுணை

# முகவுரை

தமிழ்நாட்டில் முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் எனமூன்று சங்கங்கள் முறையே தென்மதுரை, கவாடபுரம், மதுரை, என்றநகரங்களில் சற்றேறக்குறையப் பன்னீராயிரம் ஆண்டு தொட்டுநிகழ்ந்து வந்தன.

முதற்சங்க காலமுதல் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் இலட்சணங்களும், உலகு, உயிர், இறைவன் என்ற முப்பொருள்களைப் பற்றிய அறிவு நூல்களும், கலைகளும், பலவிருந்தன. இப்பொழுதும் இருக்கின்றன. எல்லா நூல்களுக்கும், இறைவன் முதல் ஆசிரியனுயினமைபோல வைத்தியம், வாதம், மந்திரம், கற்பம், யோகம் பற்றிய தமிழ் நூல் ஒன்று எழு லட்சம் பாட்டிற்கூறி அவைகட்கும், முதலாசிரியராயினுர். அம்முதல்நூலைப் பின்பற்றி அம்மையார், பிள்ளையார், முருகவேள், நந்தி, சனகர், சனுதனர், சனற்குமாரர் திருமூலர், பதஞ்சலி, அகத்தியர், புலத்தியர், புசுண்டர், காலாங்கி, போகர் கொங்கணர், கருவூரார், தன்வந்திரி, சட்டமுனிவர், தேரையர், யூகிமுனி முதலிய சித்தர்கள் இலட்சக்கணக்கான சித்துநூல்கள் தமிழ் மொழியிற் செய்தருளினுர்கள்.

சித்தர்கள் நோய் நீக்கற்கு, மணி, மந்திரம், மருந்து என மூன்று வழிகளை ஏற்படுத்தினுர்கள். அவற்றில், மணி என்பது இரசமணி, மந்திரம் என்பது பல தேவதைகளின் மனுக்கள்,மருந்து என்பது ஔடதம்.இவற்றுள் மருந்து என்பது காப்பு, நீக்கம், நிறைப்பு என மூவகைப்படும். காப்பு என்பது நோய்வராமற்காக்கும் மருந்துகள். நீக்கம் என்பது வந்தநோய்களைப் போக்கும் மருந்துகள். நிறைப்பு என்பது குறைந்த சத்துக்களை உண்டாக்கி நிறைத்துக் குணம் செய்யும் மருந்துகள். இம்மருந்து முறைகள் அனைத்தும் மிக்க விரிவாகத் தமிழ்ச் சித்த வைத்தியம் ஒன்றில் தான் நிறைந்துள்ளன.

மருந்துகளின் இயல்பு கூறுமிடத்து ஒப்புறை, எதிருறை கலப்புறை என நோய்களைப் போக்கும் மருந்துகளின் முறைகளை விளக்கியிருக்கின்றனர். அவற்றுள் ஆங்கில வைத்தியம் எதிருறை என்று அழைக்கப்படும்.ஆனுல் அம் முறையிலேயே முற்றும் நிலைப்பதில்லை. பிரஞ்சு, ஜெர்மனி வைத்தியம் ஒப்புறையாம். சமஸ்கிருத ஆயுள்வேத வைத்தியம் எதிருறை. தமிழ்ச்சித்த வைத்தியமோ அவ்விரண்டும் கலப்புறை என்ற மூன்ருவது முறையுடையது.

உப்புவகை 25 பாஷாணவகை 64. உலோகங்கள் 9. உலோக வகைகளாகிய சத்துகள் 120. மூலிகைவகை 1008-களில் நின்று அற்புதமான மருந்து முறைகளெல்லாம், சித்த வைத்தியத்திலன்றி வேறு வைத்தியங்களிற் சொல்லவில்லை. சமஸ்கிருத ஆயுள்வேத நூல்களில் கரைகண்ட வட இந்தியாவிலுள்ள கவிராஜர் என்ற ஆயுள்வேத வைத்தியத் தலைவர் ஒருவர் 'தென்னுட்டிலுள்ள சித்த முறைகளே எவற்றினும் மிகச் சிறந்தது. அவைகளையே நாம் கற்றுக்கொள்ளவேண்டும்'' என்று கூறுகின்றனர்.

திருவள்ளுவநாயனர் "நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்று கூறியிருத்தலால் நோய் அறிதற்கு நாடி, கண், நா, உடல், மலம், நீர், தொடல், ஒலி என எட்டுவகைப் பரீட்சைகளைச் சித்தர் விரித்துரைத்திருக்கின்றனர். பின்னும் நாயனர் "உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென், றப்பானாற் கூற்றே மருந்து" என்ற நோயாளன் மருத்துவன்-உழைச்செல்வான் மருந்து என்ற நான்கையும் விளக்கியுள்ளார். அதனால் 2000 ஆண்டுகட்கு முன்னரே தமிழ் மருத்துவ சாலைகளில் உழைச்செல்வான் என்னப்பட்ட (நர்சு) இருந்ததாலும், தேரையர் மருத்துவ சாலை இலக்கணம் கூறியிருப்பதாலும், தமிழர் 32 அறங்களில் ஆதுலர்க்குச் சாலை ஓதுவார்க்குணவு என்ற தருமங்கள்போல "நோய்க்கு மருந்து" என்று கூறியிருப்பதாலும், முற்காலத்தில் தமிழ் மருத்துவ சாலையும் பெரிய தருமமாக நடந்து வந்ததாய்த் தெரிய வருகிறது. இக்காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ்த் தாய் தந்தைக்குப் பிறந்து தமிழ் மொழிபேசுந்தமிழர் பலர்க்குத் தமிழ் மொழியிலும் தமிழ்நூல்களிலும் அபிமானம் குறைந்திருத்தல் போலவே உலகிற் சிறந்த முறைகளையுடையதும் தீராதநோயென்று பிற வைத்தியர்களால் கை விடப்படும் நோய்களைத் தீர்ப்பதும் அவமிருத்துக்கள் வாராமல் தடுப்பதும். ஆயுளை விருத்திசெய்வதும், காய சித்தியைத் தருவதுமான அபூர்வசக்தி வாய்ந்துள்ள மருந்துகளைப் பகரும் தமிழ் மருத்துவ நூலிலும், அபிமானம் குறைந்திருக்கிறது ஓர் ஆச்சரியமன்று.

இனிமேலாவது தமிழர் தாம் முற்பட்ட சீர்திருத்தமும், கல்வியும், நல்லொழுக்கமும், தூய தமிழ்மொழியு முடையார் என்பதை மனத்திலூன்றியறிந்து நமது மொழியையும், நெறியையும் மருத்துவத்தையும் ஊக்கத்தோடு வளர்க்க முன்வருவார்கள் என்று நம்புகிறேன்.

இனி நான் என் அனுபவத்தில் கண்டறிந்தபடி எனது நண்பர் மதுரைத் தமிழ்வித்வான் ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் நந்தமிழ்ப் பாஷையில் இலக்கியத்துறையிலும், இலக்கணத்துறையிலும், வேதாந்த நூலாராய்ச்சி முறையிலுந் தான் ஒரு நுணுக்க ஆராய்ச்சி வல்லுநர் என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். சில சோதிட வைத்திய நூல்களை மதுரைப் புத்தக வர்த்தகப் பிரமுகர் ஸ்ரீமான் இ. மா. கோபால கிருஷ்ணக் கோனர் அவர்களுக்கு நான் உரிமைபெறத் தந்ததிலிருந்தும் அவற்றை அவர் நாயுடவர்கள் பார்வையின் மீது அச்சிட்டு வெளிப்படுத்தியதிலிருந்தும் நாயுடவர்கள் சோதிடத்துறையிலும் வைத்தியத்துறையிலுங்கூட நுணிகிச்செல்லும் நுண்ணறிவுடையவர் என்று கண்டு இறும்பூது கொள்கின்றேன். எனது நூல்களுக்கு அவர் செய்துவரும் பேருதவி நான் என்றும் மறக்கற்பாலதன்று.

இங்ஙனம்

☞ த. குப்புசாமி நாயுடு,
வாத வைத்திய யோக ஞான சோதிட
நூலாராய்ச்சிப் புலவர், மதுரை.

உ

பரமபதி துணை.

உமாபதி உமையவளுக்குபதேசித்ததைச்
சித்தாதிகள் தெரிந்தெடுத்துத் திரட்டிய

பெரிய

# வைத்திய அரிச்சுவடி

## இரண்டாம் பாகம்.

நாடியே வியாதியைக்காணப் பிரதானம்
அவற்றுள் முதற் பாகத்திற் கூறாத சில நாடிகளை
இங்ஙனங் கூறுவோமாக.

### நந்திதேவர் நாடி சாஸ்திரம்.

ஆதிபரா பரமாகி யகண்டமான
அந்திவண்ண னெண்டோளன் அந்நாள்வாம
பாதியிடத் தபிராம வல்லியென்னும்
பார்வதியாள் தனக்குகந்து பகர்ந்தநாடி
பூதலத்தோ ரிதையறிந்து நன்றாய்த்தேர்ந்து
பூதவகை நோய்வகைக ளுளவிற்காண
நீதலத்திற் சொல்லெனவே எனக்குச்சொன்னாள்
நேர்ந்துரைப்பேன் நாடியது மூலந்தானே. (1)

மூலமெழு பத்திரா யிரமாம் நாடி
முளைத்தெழுந்து வலைபோல முடிந்ததோடே
கோலமாய்ப் பதிமூவா யிரநரம்பு
கோர்வையாய்ச் சூழ்ந்திருக்குங் கூட்டிற்குள்ளே
காலமாம் நாடிபத்து வாய்வுபத்து
கதித்ததெல்லாம் முக்கோர்வைப் பகையினாலே
நாலநா லாயிரத்து நானூற் றோடு
நவில்நாற்பத் தெண்ணோபாய் நாட்டலாமே. (2

நாட்டிலுள்ள மானிடர்க்கு வருநோய்கண்டு
நாடிபத்து வாயுபத்தின் குறியுங்கண்டு
கூட்டிலுள்ள பிணிதீர்க்க அவிழ்தங்கண்டு
கொடுப்பதற்குச் சாத்தியம்சாத் தியமுங்கண்டு
ஏட்டிலுள்ள நூல்முறைகை முறையுங்கண்டு
எண்ணரிய வயித்தியராய்ப் புகழும்பெற்றுத்
தேட்டமுள்ள சுகிர்தகுண முடையோனுயுஞ்
சிறை மீட்டிப் பிழைக்கவைத்தா லவனேதாதா. (3)

தாதாவென் றுரைப்பதற்குத் தகுமோ விந்தச்
சாஸ்திரத்தை யிகழ்ச்சிக்குஞ் சண்டா ளர்க்கே
மாதாபி தாவினுட மனங்கோ ணுமல்
மகாபெரியோ ருரைக்கின்ற மொழிமீ றுமல்
வேதாந்த மூர்த்திகளை யறிந்து போற்றி
மேதைமிகு நீதிகளும் விளங்கத் தோற்றிக்
காதாரக் குருவினுப தேசங் கேட்டுக்
கைசிகிச்சை பெற்றவனே யோகசித்தன். (4)

சித்தன்றிப் பலநூலும் பார்த்துக்கொண்டு
சிந்தையுழல் வயித்தியரே அவிழ்தஞ்செய்து
குத்தமொடு கொடும்பாவஞ் செய்திடாமற்
குருமுறையா யவிழ்தங்கள் முடித்துக் கொண்டு
முத்தன்றிக் கொலைமுதல்மா பாவஞ்செய்து
முரணுகு மெழுநரகில் விழுந்திடாமல்
கத்தனடி கண்டுபிணி தீர்க்கத்தானே
கண்டிதமாய்ப் பண்டிதத்தைக் கருதிப்பாரே. (5)

பாரப்பா நோயினுட பருவநேர்மை
பகைத்துவந்த நாட்பிணியைக் கூர்ந்தறிந்து
தீரப்பா அவனிடத்திற் குறையுண்டானல்
திருவுளத்தை நோக்கியறஞ் செய்யவைத்து
சேரப்பா பகைவரைச்சி நேகமாக்கித்
தெளிவதா யிர்மனதோர் மனமதாக
நேரப்பா அவிழ்தங்கள் கையாலீய
நிச்சயமாய்ச் சித்திக்கு மிதுவேநீதி. (6)

நீதியா யவிழ்தங்கள் சேர்க்கும்போது
நிர்மலமாய்ச் சரக்குகளைச் சுத்திசெய்து
ஆதிமங் களவாரம் முகுர்த்தங்கோலி
அளவுடனே அவிழ்தங்க ளரைத்தபின்பு
ஓதுதெய்வம் நமசிவய மென்றிறைஞ்சி
உயிரெழுத்தை யுருவேற்றி யுருண்டைபண்ணிப்
பாதியா யவிழ்தங்க ளீயும்போது
பரிகாரம் நடத்தைதனக் குறுதிகேளே. (7)

## வயித்தியருக்கு வேண்டியது.

கேளப்பா வயித்தியர்க்கு யோகம்வேண்டும்
கேட்குமுன்னே சொல்லமெத்தக் கல்விவேண்டும்
தாளப்பா சரக்குவைப்புக் குணமுங்கட்டும்
க்ஷணப்பொழுதில் நீத்துமுப்பூ அறியவேண்டும்
சூளப்பா வியாதிகண்டு அவிழ்தமீயச்
சூட்சுமமாம் புத்திதந் திரமும்வேண்டும்
நாளப்பா ஜீவர்கள்மே லிரக்கம்வேண்டும்
நற்குணமாம் வாதிமகன் கிரிகையிதே. (8)

வாதிமகன் வயித்தியன்றன் குணத்தையாயில்
வாகாகக் கைபார்த்து முகத்தைப் பார்த்துச்
சோதியுடன் மலசலத்தின் பரிட்சைபார்த்துச்
சொல்லிடுவான் வியாதிகளை யறிந்துநன்றாய்
சேதிகடா னவனுக்குத் தெம்புசொல்லித்
தேகத்தைத் தொட்டுமெள்ளப் பார்த்துக்கொள்வான்
நீதியுடன் கடவுளைத்தான் பணிந்துகொண்டு
நிச்சயமாய் அவிழ்தவகை யீவான்கண்டாய். (9)

## நாடிபார்க்க.

கண்டாயா டவர்க்குவலக் கரமுமாகும்
கருத்துளபெண் களுக்குமிடக் கரமாமென்றும்
மிண்[illegible]டக் கையைவலக் கையாலேந்தி
மேல்வலது கையையிடக் கையாலேந்தி
கொண்டாடக் கைதேய்த்து நெட்டிவாங்கி
கூட்டுமூ விரலுக்கு விரலண்டா[illegible]
அண்டாமல் நெல்லிடைக்குள் விட்டுப்பார்க்க
அசைவ[illegible] வாதபித்தம் †ஐயமாமே. (10)

† ஐயம்=என்பது—சேத்துமம்—சிலேத்துமம்.

ஆமென்ற புலனுடைய வாதந்தானே
அப்பனே கோழியுட நடைபோலாகும்
ஏ மென்ற உயிருடைய பித்தந்தானே
இமையேயுங் காக்கைமட நடைபோலாகும்
ஒ மென்ற சதமுடைய ஐயந்தானே
ஒட்டமிலா மந்தியுட நடைபோலாகும்
நாமென்ற வாதபித்த சிலேற்பனத்தின்
நடையிவ்வா றென்றுண்மை நாட்டுங்காணே. (11)

காணப்பா வாதமுன்னும் பித்தம்பின்னும்
கடையாக ஐயமது தோற்றவேண்டும்
பேணப்பா கைத்தாதிப் படியே கண்டால்
பிணிதீர்ந்து போச்சுதென்று புகழ்ச்சிகூறு
ஊணப்பா மூவருமே வரிசைதப்பி
ஊணில்லாப் பறவையைப்போ லுயர்ந்துநின்றால்
தானப்பா விப்படியே கண்டோர்க் கெல்லாம்
சத்தியமாய் சிவிக்குந் தப்பாதுண்மை. (12

உண்மையுள்ள மூவருமே ஒடுக்கமாகி
ஒப்பில்லா வாதமது உலாவிநின்றால்
தண்மைவினை யகற்றிடவே செயலுண்டாகிச்
சன்மித்து வயிறதனிற் பித்தம் நின்று
ஒண்மையாய்க் கனல்மூட்டித் தெளிவுதந்து
உயர்வான சிவமயம தாக்கிவைக்கும்
வண்மைமனங் கலங்காமற் றுணிவுகொண்டு
வலுவான அவிழ்தங்க ளறிந்துமூட்டே. (13)

மூட்டியே மூவருமே மூடமானால்
மூதண்டச் சன்னியுட மூர்க்கமாகும்
ஆட்டியே மூவருமே அணுகிநின்றால்
அத்தோஷம் ஜெனிக்கின்ற முறமையாகும்
கோட்டிலே வாதமது குளிர்ந்து நின்றால்
குணமில்லை மரணமதின் கூறதாகும்
வாட்டியே வாதமது மழுங்கி நின்றால்
மரிபடா மரணமென்று மதிக்கலாமே. (14)

மதிக்கலாம் மூவருமுன் னிட்டுதைத்தால்
வந்தநோய் தீர்ந்துவிடும் மரணமில்லை
பதிக்கலாம் மூவரும்பின் னிட்டுதைத்தால்
பழியாகப் பிணிமீறும் பகைத்துக்கொல்லும்
குதிக்கலாம் வாதமது கொதித்துநின்றால்
கொடுமைசெயுஞ் சுரங்களுட கூறதாகும்
விதிக்கலாம் வாதமது மெலிந்துநின்றால்
வேகமாய் நின்றுசுரம் விட்டுப்போச்சே. (15)

போச்சுதப்பா நல்லோர்க்கு வந்தநோய்கள்
பொல்லாத பாவிகட்குத் தீராதப்பா
ஏச்சுதப்பா பகைத்துவந்த நோய்க்குணங்கள்
இதமறியா வயித்தியரின்[illegible]ரிமைகண்டு
வாச்சுதப்பா இந்நூல்தான் வயித்தியர்க்கு
வகைதொகையாய்[illegible]ரைச் செயிக்கத்தானே
ஆச்சுதப்பா [illegible]சொன்ன இருநூற் றைந்தும்
ஆமிந்த நூலுக்கு ஆதிமூலம். (16)

மூலமெழு பத்திரா யிரமாம் நாடி
மூளைத்தெழுந்து சுழித்திடத்தை மொழியொண்ணாது
தாலமீ திடருகின்ற நோய்கட் கெல்லாம்
சார்புடனே சுழியிருத்த கையினுள்ளே
காலையிலே வாதமது உதிக்கவேண்டும்
கடுமதியம் பித்தமது தோன்றவேண்டும்
மாலையிலே ஐயமது கதிக்கவேண்டும்
வளமான நாடியென்று மதிக்கலாமே. (17)

காலையிலே வாதமது மெலிந்து நின்றால்
கதிர்சாயும் பொழுதிலந்தி மரணமாகும்
பாலையிலே நடுப்பித்தம் மெலிந்துநின்றால்
பானுவுதை யந்தனிலே மரணமாகும்
மாலையிலே ஐயமது மெலிந்து நின்றால்
மரணமில்லை வந்தநோய் மாய்ந்துபோகும்
கோலையிலே இப்படியே பகுத்து நன்றாய்க்
குறிப்பறிந்து கொள்வாரா ரியருமாமே. (18)

ஆமாகே ளடிதுடிதா னசைந்து தைத்தால்
அசைவாகக் கடைதுடிதான் புதைத்துதைத்தால்
பூமாகே ளவிழ்தமிட வியாதிதீர்ந்து
புணர்ப்பாக வுணர்த்துகின்ற நாடியாகும்
ஓமாகே ளடிதுடிதான் குறைந்துதைத்தே
உறமாகக் கடைதுடிதான் சுரந்துதைத்தால்
வீமாகேள் மணிமந்த்ர வவிழ்தத்தாலும்
மீளாது விதிமுடிந்த நாடியாகும். (19)

ஆகமுற்றும் நாடிபத மொத்து வீழ்ந்தால்
அவிழ்தமிடு பிழைப்பார்கள் அதிர்ஷ்டமுண்டு
சோகமுற்றும் நாடிபத மற்று வீழ்ந்தால்
துலையாத மரணமென்று சொல்லலாகும்
ஏகமுற்றும் இருவர்களி லொருவர் நாடி
எழுந்தாலும் நின்றாலும் மரணமில்லை
வேகமுற்றும் நாடிபதம் விழுந்த பின்னே
விழுந்தாலும் நின்றாலும் பிழைப்பதில்லை. (20)

இல்லையாம் பித்தமுன்னும் வாதம் பின்னும்
எழும்பிறு லசாத்தியத்தின் நாடியாகும்
எல்லையாம் வாதமுன்னும் பித்தம்பின்னும்
எழும்பிடவே சாத்தியத்தின் நாடியாகும்
மல்லையாம் வாதமது அமர்ந்து நின்றால்
வயிற்றிலே சோறிருந்து மந்தமாகும்
கல்லையாம் வாதமது கதித்துநின்றால்
களைப்புண்டாந் தீபனத்தின் நாடியாகும். (21)

ஆகமாஞ் சாஸ்திரத்தின் கூரைக்கண்டு
அறைகுவோம் அவனியதில் மானிடர்க்கு
மாகமாம் வாதத்தின் சரீரக்காரன்
வாலிப்பாய் தேகமுள்ள வடிவனவன்
யோகமாம் பித்தத்தின் சரீரக்காரன்
உறுதியாந் தேகமுள்ள குணவானவன்
பாகமாம் சேத்துமத்தின் சரீரக்காரன்
பருமமாந் தேகமுள்ள திடவானவன். (22)

நாவனும் வாதத்தின் சரீரக்காரன்
நாதமாங் குரல்நீண்டு பேசும்வண்ணம்
பாவனும் பித்தத்தின் சரீரக்காரன்
பதறியே குரல்விண்டு துடியாம்பேச்சு
கோவனும் சிலேட்டுமத்தின் சரீரக்காரன்
குமிறியே குரல்விண்டு இடியாம்பேச்சு
மூவனும் சென்மித்த சத்தமல்லால்
மொழிந்தமற்ற சத்தமெல்லா மபத்தமாமே. (23)

ஆமப்பா வாதசுரம் மலந்தம்பித்து
அங்கமெல்லாம் நொந்துபுண்ணுய்க் குளிருண்டாக்கும்
ஏமப்பா பித்தசுரம் ஜலந்தம்பித்து
ஏற்றபித்தம் தேகமூற்றும் எரிவுண்டாக்கும்
காமப்பா ஐயசுரம் உமிநீ ரற்றுக்
கணுவெலும்பைக் குடைந்துகய நீருண்டாக்கும்
ஓமப்பா விச்சுரமூன் றல்லாதில்லை
ஒட்டுசுரம் வாயுவினு லுதித்தவாறே. (24)

வாறுக மூரிக்கொட் டாவிகொண்டால்
வாதத்தால் வந்தசுரம் வலுத்ததாகும்
பேறுக வ்ாயில்நீர் குழப்பங் கண்டால்
பித்தத்தால் வந்தசுரம் பெலத்ததாகும்
கூறுகச் சளிசெருமல் சினுக்குண்டானுற்
கொடுங்கபத்தால் வந்தசுரங் கோபமாகும்
மூறுக இவையாமுச் சுரங்க ளாகும்
மூர்க்கத்தை யொடுக்கவஃலோ முறையைக்கூறே. (25)

கூறுமே லுரைப்பான கலிக்கம் போட்டாற்
குறைந்துநின்ற சுரம்பாதி யொடுங்கிப்போச்சு
பாருமே வழலைசத்தி வாங்கிப்போட்டால்
பறந்துநின்ற சுரம்பாதி யொடுங்கிப்போச்சு
காருமே ஆக்கிராணப் பொடியைப்போட்டால்
கலந்துநின்ற சுரம்பாதி யொடுங்கிப்போச்சு
திருமே கருமசுத்தி மூன்றுஞ் செய்தால்
ஜெடத்துள்ள நோயையெல்லாந் துறத்துவோமே. (26)

ஓமென்ற மலக்கட்டைக் கழியவைத்தால்
உடலினுள்ள வாதையெல்லா மோடிப்போச்சு
தாமென்ற சிறுநீரைத் தெளியவைத்தால்
சடத்திலுள்ள ரோகமெல்லாந் தணிந்துபோச்சு
கூமென்ற உமிழ்நீரை முறியவைத்தால்
கூட்டிலுள்ள பகையெல்லாங் குலைந்துபோச்சு
கோமென்ற இவைமூன்றுங் களங்கமற்றால்
கொல்லவந்த காலனையும் வெல்லலாமே. (27)

## கல்வத்தினியல்பு.

ஆமேதான் பண்டிதற்குக் கல்வஞ் சொல்வேன்
அருமையுள்ள கண்மணியே அறிவுள்ளோனே
தாமேதான் நீளமது சொல்லக்கேளு
சாற்றுகிறே னங்குலந்தான் பதினாறாகும்
நாமேதான் அகலமது ஆறதாகும்
நாலாகும் உயரமது ஆழஞ்சொல்வேன்
போமேதான் அங்குலமு மிரண்டதாகும்
பொலிவான நன்னியென்ற கல்லுமாமே. (28)

கல்லான கல்லதுதான் சொல்லக்கேளு
கருங்குருந்தை செங்குருந்தை நன்னியாகும்
சொல்லான சுற்றோரம் வரம்புக்கம்பி
சொல்லிலதங் குலமதுதா னென்றேயாகும்
வல்லான புலிமுகமுங் கல்வம் வைத்து
வல்லசித்தர் சொற்படியே சித்தரித்து
நல்லான கல்லமைத்துச் செய்யும் யோகன்
நாட்டிலே தேவவயித் தியனும்முற்றே. (29)

## வேறு சித்தர்கள் விளம்பியது.

### நாடிஸ்தானங்கள்.

தத்துவந் தொண்ணூற் றாறு தனிநிலே வாயு பத்து
மித்ததோர் நாடி பத்து மெய்யுள்ள ஆறு தாரம்
சுத்தமாங் கரணம் நான்கு தோன்றுமண் டலமே மூன்று
இத்தனை யறிய வல்லார் இறையவ ராகுங் கண்டீர். (30)

நாட்டினார் வாதத்தால் எழுந்த ரோகம்
நலமுடைய வாதமொடு வாயு குன்மம்
கூட்டினார் உதிரத்தி லண்ட வாய்வு
சூலைவாய்வு சடைவாய்வு கழுத்துக் குத்து
காட்டினார் விஷகடிபோல் திமிருங் காச்சல்
காதடைப்புக் குத்துவகை கிராணி தோஷம்
மூட்டினார் கெற்பத்தைக் கெடுத்தவாதம்
மூன்றுவகை யறிந்தவனே வயித்ய னாமே. (31)

பாரிந்தப் பித்தத்தா லெழுந்த ரோகம்
பதமுடைய கணையரலே எலும்பைச் சார்ந்து
நேரிந்தச் சுரசூலே சோகை பாண்டு
நெற்றியிடி கண்நோவு நெடுபாண் டோடு
கிரிந்தக் கிறுகிறுப்பு உழலல் தாகம்
கிராணியொடு பிரமேகம் இருமி தோஷம்
சாரிந்த உழல்ரோகம் வெட்டைச் சூடு
சலக்கழிச்சல் மூலமுளை பவுந்த்ரந் தானே. (32)

தானிந்தக் கபமீறி யெழுந்த ரோகம்
சாற்றக்கேள் சிலேத்துமங்கள் தொண்ணூற் றாறு
தேனிந்த இருமலொடு ஈளை காசம்
செலரோகம் கரணிதங்கள் மண்டைச் சூலை
ஊனிந்த வாய்வழியே உழக்கு நீரு
உத்தசயங் கண்ணீரு புலப்பங் காச்சல்
வானிந்த மண்டையிலே அநேக நோவு
வகைவிபரம் இம்மூன்றும் வகுத்தேன் பாரே. (33)

செய்கின்ற நாடிபெரு விரலின் மேலாம்
திருந்திழைமூன் றங்குலத்தின் நடுவ தாகத்
தைகின்ற கோதும்பை யரிசி போலச்
சர்வம்வியா பித்திருக்கும் அதுதான் கூறில்
கைய்டியுங் காலடியும் நாடிநிற்குங்
கன்னியருக் கிடபுறமாம் கணவர்க் கங்கே
மைகின்ற வலப்புறமாம் வாதநாடி
வந்துமுன்னே நடக்குமப்பால் வகைசொல் வேனே. (34)

## வாதபித்த சிலேத்தும நாடியின் நடைகள்.

சொல்லுகின்ற பித்தநாடி தோற்று மப்பால்
தொடர்ந்துசிலேத் துமநாடி தோற்று மப்பால்
அல்லுகின்ற குழலாளே நாடி நின்றால்
ஆச்சரிய நாடியென் றறிந்து சொல்லு
மல்லுகின்ற வாதத்தில் நாடி யங்கே
வக்ரகதி யாய்நடக்குந் தவளை போல
நல்லுகின்ற வா[redacted]யட்டை தொட்டி லாட்டல்
நல்லாயிப் படிநாடி நடக்குந் தானே. (35)

[redacted]

நடக்கும்[redacted]ஞ்சவலைப் பிள்ளைபோலும்
நடனமயில் அன்னம்போற் காகம்போலும்
திடக்குஞ்சிலேத் துப்நாடி யிலங்கும்பட்சி
செய்யபுறு ஊர்க்குருவி கோழிபோல
அடக்கமாய் நடக்குமது மயிலே சொன்னேன்
அவ்வளவே வாதப[redacted]யத்தின்தோற்றம்
மடக்கின்ற காடைபோல் நடத்தும்பின்னை
மஞ்சையென நடக்குமத் தித்துக்கூறே (36)

## அஜீரண நாடி முதலியன.

கூறுகின்ற வாதசிலேத் துமமுங்கூடில்
கோழிபட்சி யெனநடக்கும் அசீர்ணநாடி
தூறுகின்ற மத்தியிரு தயத்தின் நாடி
தூங்குகின்ற காகநடை என்றுசொல்வார்
தேறுகின்ற ஸ்திரீசங்கை யிதுபோல்நின்று
தீவிரமாய் நடக்குமல பந்தநாடி
ஊறுமன்னம் போல்நடக்குஞ் சன்னிவாதம்
உயர்நாடி விதிகளையும் உரைக்கக்கேளே. (37)

## பலவகை நாடிகளின் நடை.

உரைத்தவிற கின்கட்டுக் குள்மூஞ்சூறு
உலவுதல்போ லேநடக்குங் குடிலைவாயு
விரைத்தெழுந்தே மந்தமா யிருந்துபின்னும்
விதமாக நடக்குமது சூட்சுமவாயு
புரைத்தருமை யிவ்வகையின் சன்னிவாதம்
பொருப்பாகக் குவிந்தமுலை போலுங்கொங்கை
முரைத்தெழுந்த சங்கினிகாந் தாரிபின்னே
முறைமையதாம் நாடியென முனிவர்தாமே. (38)

நோய்க்குப் பிரதானம் சுரமாகையால்
அதை இங்ஙனம் கூறுவோமாக.

## நாடிகத சுரபேதம்.

### சுரோற்பத்தி லட்சணம்.

இது உற்பத்தியாகும்போது திமிர் முறுக்குதலுடன் ரோமங்களெல்லாம் சிலிர்த்தல், எந்த வஸ்துகளிலும் விருப்பமில்லாமை, கண்களிற் சலம்ததும்பல், அரோசகம், உடம்பெங்கும் நோகுதல், என்னும் இக்குணங்களுண்டாயின் சுரம்வருமென்று நிதானித்து, அதை வரவொட்டாத உபாயம் செய்யவேண்டும். (அதாவது) நாடோறும் கிரமமாகப் புசிக்கின்ற அன்னபானுதிகளிற் சேருகின்ற புளி, நெய், நல்லெண்ணெய், அப்பியங்கனம், ஸ்திரீபோகம், கோபம், பரிமளதிரவியம் இவைகளை நிவர்த்திக்க வேண்டும். உபவாசமிருப்பதே உத்தமம்.

### சுரம் நிவர்த்தி லட்சணம்.

இதனால் அன்னத்திலிச்சை, சிரசில் நமைச்சல், தும்மல், சரீரம் லேசாகவிருத்தல், நித்திரை பிடித்தல் என்னும் இக்குணங்களுண்டாகும்.

### 1. வாத சுரலட்சணம்.

இதனால் உதடும் முகமும் கறுத்தல், தேகந்தடித்து நோதல், மிகுதாகம் மெய்நடுக்கல், மலபந்தம், ரோமச்சிலிர்ப்பு, குளிர்ச்சி, மார்பு துடித்தல், தலை பிளந்துபோவதுபோ லிருத்தல், வயிறு பொருமல், சூலைகாணல், நித்திரை பிடியாமை, அரோசகம், பற்புளித்தல், புருவந்தெரித்தல், வாய்துவர்த்தல், புளிப்புப்பதார்த்தங்களில் இச்சை, என்னும் இக்குணங்களுண்டாகும்.

### 2. பித்த சுரலட்சணம்.

இதனால் அதிசுரம் மலமூத்திரம் சிவந்தநிறமாக இறங்கல், சகலவஸ்துக்களும் கண்களுக்குப் பச்சைநிறமாகத் தோற்றல், வாய்கசத்தல், பிதற்றல், வாந்திபேதி, கோபம், தேசம்புளகித்தல், விக்கல், தலை சுற்றல், பிரமையென்னும் இக்குணங்களுண்டாகும்.

### 3. சிலேஷ்ம சுரலட்சணம்.

இதனால் தலைபாரம், நாக்கு, மூக்கு, மலம், மூத்திரம், இவை வெளுத்தல், அதி குளிர்ச்சி, கோழை, வாந்தி, மார்நோய், வாய்

துவர்த்தல், அல்லது தித்தித்தல், தினவு, தாகம், மேல்மூச்சு, விக்கல், என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 4. வாதபித்த சுரலட்சணம்.

இதனால் நாக்குக் கறுத்து முள்ளுப் போலிருத்தல், பிரலாபம், நித்திரை, மலபந்தம், சிரோவேதனை, கீல்களில் நோவு, கண்டம் வளரல், அறிவும் நினைவும் கெடுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 5. வாதசிலேஷ்ம சுரலட்சணம்.

இதனால் தேகமுழுதும் வேதனை, குளிர், உரோமச் சிலிர்ப்பு, நடுக்கல் நாக்குத்தடித்து வெண்மையாக விருத்தல், தாகம், மூக்கில் ஜலம் வடிதல், காதடைப்பு, கண்ணொளி மயங்கல், மலபந்தம், வாய் பிதற்றல், பற்கடித்தல், குரல்கம்மல், சுரணையற்றுக் கிடத்தல் இக்குணங்களுண்டாகும்.

### 6. பித்தசிலேஷ்ம சுரலட்சணம்.

இதனால் சகல வஸ்துக்களும் கண்களுக்குப் பச்சை நீலம் என்னும் நிறங்களாகத் தோற்றல், மிகு வியர்வை, நடுக்கல், வாய் உவர்ப்பாகவும் கசப்பாகவும் இருத்தல், மயிர்க்குச்செறிதல், தலையிலும் பிடரியிலும் நோதல் என்னும் இக்குணங்க ளுண்டாகும்.

### நாடிகத சுரபேத சிகிச்சை.

மேற்சொல்லிய அறுவகைச் சுரங்களுக்கும் முதல் நாள் ஆத்திர காதி சுரசத்தைக் காலையில் மாத்திரம் ஒருவேளைக்குக் கொடுத்து மறுநாள் முதல் சாமான்னிய சுரமாக விருந்தால், அதற்குத் தனித் தனியே விதித்திருக்கிற கஷாயங்களில் சுக்கு, மிளகு, திப்பிலி, இம் மூன்றையும் சமமாக நிறுத்து வறுத்துப் பொடி செய்து மூன்று சிட்டிகை தூவித் தேன் ஒரு காசிடை விட்டுக் கலந்து காலையிலும் மாலையிலும் கொடுத்துவரில் தீரும். சுரம் மும்முறமாக விருந்தால் ஷெ கஷாயத்தில் அதன்பின் சொல்லப்பட் டிருக்கிற மாத்திரை களில் எதையாவது ஒன்றைச் சேர்த்துக் கொடுத்துப் புளியில்லாத பத்தியமாவது புனற்பாகக் கஞ்சியாவது கொடுத்துப் பின்பு சுரம் விட்டிருக்கும் குறிப்பை அறிந்து மருந்தை நிறுத்திப் பத்தியமிருந்த நாளளவும் மறுபத்திய மிருக்கச் சொல்லி ஒமஸ்நானம் செய்வித்துப் பின்னுளில் அரக்குத்தயில மாதியாகச் சொல்லப்பட்டிருக்கிற தை

லங்களினால், அப்பியங்கனம் செய்வித்து மறுநாள் மாத்திரம் பேதி மாத்திரையால் பேதிக்குக் கொடுத்து அன்று தொடங்கித் தேகத்துக்கு நன்றாய்ப் பலம் வரும் பரியந்திரம் சீரணமாகத் தக்கதாயும், பளுவில்லாததாயு மிருக்கிற ஆகாரங்களைக் கொடுத்து வரவேண்டும். இவ்வாறு ஆதியோடந்தமாகப் பிசகாது சிகிச்சை செய்யில் மேற்சொல்லிய சுரம் தீரும். அன்றியும் ஷை சிகிச்சையிலுள்ள கஷாயங்களுக்கும் தைலங்களுக்கும் பதிலாக இதர பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கிற ஔஷதங்களையும், தைலங்களையும் சேர்த்துக் கொண்டு சிகிச்சை செய்யில் சர்வ சுரரோகங்களும் நிவர்த்தியாம். மாத்திரைகளும், தைலங்களும் சொல்லப்படாததற்கு இச்சிகிச்சை முற்றும் பொருந்தும். மேற்சொல்லிய சுரசம் ஆதியான ஔஷதங்களுக்கும் பத்தியங்களுக்கும் விபரம் முறையே இதனடியிற் காண்க.

## ஆத்திரகாதி சுரச விபரம்.

இஞ்சி, கடுக்காய்த் தோல், கெண்டுபாரங்கி, சிற்றரத்தை, சுக்கு, மாவிலங்குப்பட்டை இவைகளைச் சமமாகச் சேர்த்துச் சலம் விட்டு அரைத்துப் பிழிந்து மூன்று தடவைப் பொங்கவைத்துத் தேன் காசிடைவிட்டுக் கொடுக்கவும்.

## வாதசுரக் கஷாய விபரம்.

ஆடாதோடைவேர், கண்டங்காரிவேர், நொச்சிவேர், தூதுளை வேர், சிறிய நெரிஞ்சில்வேர், கோரைக்கிழங்கு பற்பாடகம், நிலவேம்பு, கெண்டுபாரங்கி, சுக்கு, திப்பிலி, மிளகு, ஆடாதோடை ஈர்க்கு, நாரத்தை ஈர்க்கு, நெல்லி ஈர்க்கு, வேப்பீர்க்கு, மாயீர்க்கு, என்னும் தினுசுகள் பதினேழும் சமமாக நிறுத்து இடித்துச் சலத்தில் சேர்த்து அஷ்டபாகம்வடித்துத்திரிகடுகுத்தூள் தூவிக் காலையிலும், மாலையிலும், கொடுத்துப் புளியில்லாத பத்தியம் வைக்கவும்.

## பித்தசுரக் கஷாய விபரம்.

தூதுளைவேர், கண்டங்காரிவேர், நிலப்பனங்கிழங்கு, ஆடாதோடைவேர், விஷ்ணுகாந்தி, நிலவேம்பு, கோரைக்கிழங்கு, பற்பாடகம், சீந்திற்றண்டு, செந்தொட்டிவேர், சிற்றாமுட்டிவேர், வேப்பம்பட்டை, முசுமுசுக்கைவேர், மாதளம்வேர், தும்பைவேர், நாய்த்துளசிவேர், பேய்ப்புடல் என்னும் இப்பதினேழையும், சமமாகச் சேர்த்து இடித்துச் சலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

## வாதபித்த சுரக்கஷாய விபரம்.

கொடித்தூவிவேர், தூதுளைவேர், விலாமிச்சவேர், நீர்முள்ளி வேர், கண்டங்காரிவேர், நன்னாரிவேர், விஷ்ணுகாந்தி சமூலம், ஆடாதோடையிலை, சீந்திற்றண்டு, கோரைக்கிழங்கு, கோஷ்டம், செவ்வியம், கொத்துமல்லிவிரை, அதிமதுரம், சுக்கு, லவங்கம், பேய்ப்புடல், பற்பாடகம், ஏலம், திப்பிலிமூலம் என்னும் இருபதும் வகை ஒன்றுச்குப் பலம் காலே அரைக்கால்வீதம் நிறுத்து, இடித்து ஒருபடி ஜலத்திற்சேர்த்து ஆழாக்காய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

## வாதசிலேஷ்மச்சுர கஷாய விபரம்.

தூதுளைவேர், கடுகுவேர், கற்றாழைவேர், கரும்பனைவேர், சிற்றரத்தை, கச்சக்காய்வேர், வால்மிளகு, காயம், இவைகளில் வேர் வகையை இடித்து ஜலத்திலிட்டுக் காயத்தைச் சீலையில் முடிந்துகிழி கட்டித் தொங்கவிட்டுக் காய்ச்சியபின்பு ஷை காயத்தைக் கஷாயத்தில் உரைத்துக் கலக்கிக் கொடுக்கவும்.

## பித்த சிலேஷ்மச்சுர கஷாய விபரம்.

எருக்கம்வேர், கஞ்சாங்கோரைவேர், சுக்கு, கடுகாய்த்தோல், மிளகு, நீலிவேர், நொச்சில்வேர், வில்வவேர், வெள்ளுள்ளிப்பருப்பு, சீரகம், மாவிலிங்குவேர், அரசம்பட்டை இவைகளைச் சமமாகச் சேர்த்து இடித்துச் சலத்திற் போட்டுக் காய்ச்சிக்கொடுக்கத் தீரும்

## வசந்தகுசுமாகர மாத்திரை விபரம்.

அக்கராகாரம், அதிமதுரம், கோஷ்டம், வெண்காரம், லவுங்கம், திப்பிலி என்னும் தினுசுகள் ஆறும் வகை ஒன்றுக்குப் பலம் காலும், ஜாதிலிங்கம் பலம் அரையும், சேர்த்துக் கல்வத்திலிட்டு அத்துடன் குங்குமப்பூ, கோரோசனம், பச்சைக் கருப்பூரம் இம்மூன்றையும், வகை ஒன்றுக்கு விராகனிடை ஒன்றாக நிறுத்துக் கூடப் போட்டு முலைப்பால்விட்டு இரண்டு சாமமும், இஞ்சிச்சாறு விட்டு இரண்டு சாமமும் அரைத்து மெழுகுபதத்தில் வழித்துச் சிறு பயறு பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு இதில் வேளைக்கு மூன்று மாத்திரைகளுக்கு அதிகப்படாமல் தேன், இஞ்சிரசம் முலைப்பால் இவைகளில் இழைத்துக் கொடுத்து வரில் மேற் சொல்லிய ஆறுவகைச் சுரங்களும் தீரும்.

## கெந்திரச மாத்திரை விபரம்.

ரசம், வெண்காரம், நாபி, கெந்தகம், மனோசிலை, தாளகம், ஜாதிலிங்கம், கௌரிபாஷணம், கோரோசனம் என்னும் இவ்வொன்பதுவகைச் சரக்குகளையும் சுத்தி செய்து சமமாக நிறுத்துக் கல்வத்திலிட்டுக் கற்றாழை, சிறுபுள்ளடி, கரிசலாங்கண்ணி என்னும் இம் மூன்றின் ரசங்களையும், தனித்தனியே விட்டு மும்மூன்று ஜாமம் அரைத்து உளுந்துப் பிரமாணமான மாத்திரைகளாகச் செய்து நிழலி லுலர்த்தி வைத்துக் கொண்டு வேளைக்கு ஒவ்வொரு மாத்திரைவீதம் கொடுத்துவரில் மேற்சொல்லிய சுரங்கள் ஆறும் தீரும்.

## சூத மாத்திரை விபரம்.

ரசம், வெண்காரம், மிளகு, திப்பிலி, ஊமத்தம்விரை, இவ்வைந்தையும் சமமாகச்சேர்த்துசுத்திசெய்து கல்வத்திலிட்டு ஊமத்தம் இலைச்சாறுவிட்டு அரைத்து, குன்றி இடைவீதம் மாத்திரை செய்து வைத்துக்கொண்டு எருக்கம்வேர் கஷாயத்திலிழைத்துச் செவ்வியத்தை வறுத்துத் தூள் செய்து தூவிக் கலந்து கொடுக்கவும். பத்தியம் தயிர்விட்டுச் சாதம் போடவும்.

## பண்டித லலாட சிங்கி.

கடுக்காய்த்தோல் பலம் அரையும், ஜாதிலிங்கம், சகஸ்திரபேதி, கருநாபி, இம்மூன்றும் வகை ஒன்றுக்கு விராகனெடை ஒன்று நிறுத்துச்சுத்திசெய்து கல்வத்திலிட்டு அரைத்து வைத்துக்கொண்டு இதில் ஒரு பணவிடை வீதம் எடுத்து இளநீர், தயிர், வெல்லம், கஷாயங்கள் பேயன்வாழைப் பழம் இவைகளில் கிடைத்த ஒன்றில் சேர்த்து காலையிலும் மாலையிலும் கொடுத்துவரவும். பத்தியம் மோர்விட்டுச் சாதம் சாப்பிடவும். சர்வசுரங்களுந்தீரும்.

## பேதி மாத்திரை விபரம்.

சுத்தி செய்த நேர்வாளம், கறுகலாய் வறுத்தது பங்கு இரண்டு இளங்கறுகலாய் வறுத்ததுபங்கு ஒன்றும், சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு, கடுகரோகணி, கடுக்காய்த்தோல், இவ்வாறும் வகை ஒன்றுக்குப் பலம் ஒன்றும் தனித்தனியே நிறுத்து இந்த இடைக்கு ஷை வாளத்தைச் சேர்த்து எலுமிச்சம்பழ ரசம்விட்டு அரைத்து இலந்தைக்காய்ப் பிரமாணமான மாத்திரைகளாகச் செய்து நிழலி

லுலர்த்தி வைத்துக்கொண்டு இதில் ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகளைத் தேகத்துக்குத் தக்கபடி வெந்நீரில் இழைத்துக் கொடுக்க நலபேதியாகும். பின்பு ரசமுஞ் சாதமுங் கொடுக்கவும். இந்த மாத்திரை ஒரு வேளைக்கு மேல் கொடுக்கவேண்டியதில்லை. பேதி அதிகமானால் வடிகஞ்சி சேர்ந்த சாதங் கொடுக்க நிற்கும். அன்றியும் இந்த மாத்திரைகள் ஈளைச்சுரத்தையும் நிவர்த்திக்கும்.

## புனற்பாகக் கஞ்சி விபரம்.

ஒருதரம் வடித்த சாதத்தில் மறுபடியும் வெந்நீர்விட்டு அதில் சுக்கு, மிளகு, லவங்கம் இம்மூன்றையும், சமமாகக் கொஞ்சம் கொஞ்சம் சேர்த்து ஒரு சீலையில் முடிந்து போட்டு தக்க உப்புப் போட்டுச் சாதம் நன்றாய்க் கரையும்படி காய்ச்சி இறக்கி ஆறவைத்து அந்த முடிச்சை எடுத்துவிட்டு வேண்டியமட்டில் கசப்பு நார்த்தங்காய் ஊறுகாய் வெஞ்சனத்தோடும் காய்ந்தாறிய வெந்நீரோடும் குடிப்பித்து வரவும்.

## புளி நீக்கிய ரசத்தின் விபரம்.

மிளகு, மிளகாய், கொத்துமல்லிவிரை, துவரம் பருப்பு, இவைகளைச் சமமாகச் சேர்த்து நெய்விட்டு வறுத்து அரைத்து ஜலத்திற் கரைத்துத் தக்க உப்பிட்டுக் கொதிப்பித்து இறக்கிக் கொஞ்சம் பருப்புஜலம் அல்லது சுத்தஜலம் விட்டு, வெங்காயம், சீரகம், துவரம்பருப்பு இம்மூன்றில் வேண்டிய இஷ்டமான ஒன்றை நெய்விட்டு வறுத்துத் தாளித்துவைத்துக்கொண்டுஉபயோகித்துக்கொள்ளவும்.

## புளி நீக்கிய குழம்பின் விபரம்.

துவரம்பருப்பைத் தேவையான வரையில், குழம்பின் அளவுக்கு வேண்டியமட்டில் ஜலத்திலிட்டு வேகவைத்து வெந்த பின்பு தக்க உப்பிட்டு மிளகாய்த்தூள், மஞ்சள்தூள் இவைகளையும் தேவையான பதார்த்தங்களில் எதையாவது ஒன்றைப் பத்தியத்திற்கான தாய் அறிந்து சேர்த்துக் கொதிப்பித்து வாசனைவரும்போது முன் போலவே தாளித்து வைத்துக் கொள்ளவும்.

புளியில்லாத பதார்த்தங்கள் யாவும் இவ்வாறே சமைத்துக் கொள்வதென் றறிக.

## அரக்குத் தைல விபரம்.

கொம்பரக்கு வராகனெடை கால் நிறுத்துப் பொடி செய்து நல்லெண்ணெய்பலம் பத்திற்றாவிக் காய்ச்சி ஆறவைத்துத் தலைக்குக்

கொஞ்சம் சூடெழும்பும்படி அழுத்தித் தேய்த்து ஸ்நானஞ் செய்வித்தால் வாதசுரம் தீரும்.

சீரகம் பலம் ஒன்று நிறுத்து மேற்சொல்லியபடி நல்லெண்ணெய் பலம் பத்து சீரகம் ஒடியும்பதத்தில் இறக்கி ஆறவைத்து ஸ்நானஞ் செய்வித்தால் பித்தசுரம் தீரும்.

வெண்நொச்சிக் கொழுந்து, பலம் காலே அரைக்கால், மிளகு கஸ்தூரி மஞ்சள், இவ்விரண்டும் வகை ஒன்றுக்குப் பலம் அரைக்காலாகச்சேர்த்துப் பசும்பால்விட்டு அரைத்துப் பில்லைதட்டிப் பத்துப் பலம் நல்லெண்ணெயிலிட்டு வெந்தபின்பு ஆறவைத்து ஸ்நானஞ் செய்வித்தால் சிலேஷ்மசுரந் தீரும்.

## கொம்பரக்குத் தைல விபரம்.

கொம்பரக்கு வீசை (ஒன்று) மெல்லிய சீலையில் பொட்டணமாகக் கட்டிக் குடி நீர்ப்பாண்டத்திற் கிழிகட்டித் தொங்கவிட்டு ஆற்று ஜலங் குறுணிவிட்டு நாலில் ஒன்றாக வடித்த கஷாயத்தையும், குறுந்தொட்டிவேர் அமுக்கிராவேர் இவ்விரண்டும் வகை ஒன்றுக்குப்பலம் அஞ்சாக நிறுத்திடித்துப் பாண்டத்திற்கொட்டிக் குறுணிஜலம்விட்டு முன்போல் வடித்து அத்துடன் தயிர்ஜலம் படி இரண்டும், பசுவின் பால் படி நான்கும், பழயகாடி படி இரண்டும், நல்லெண்ணெய் படி இரண்டும் ஒரு தைலப் பாத்திரத்தில்விட்டு அதில் அமுக்கிராவேர், குறுந்தொட்டிவேர், சதகுப்பை, பொன்மெழுகு, தேவதாருக்கட்டை, சித்தரத்தை பேரேலமாகிய காசா ஏலம், மஞ்சள், ஜாதிக்காய் ஜாதிபத்திரி, கிராம்பு, வெட்டிவேர், விலாமிச்சவேர், பூனைப்புழுக்கவேர், நன்னாரிவேர், தக்கோலம், கோஷ்டம், கோரைக்கிழங்கு, அதிமதுரம், செவ்வள்ளிக்கொடி என்னும் சுற்கதிரவியம் இவ்விருபதும் வகையொன்றுக்குக் களஞ்சி நாலாக நிறுத்து இடித்த தூளை அம்மியிலிட்டு ஷை கஷாயம் தயிர்ஜலம், காடிஜலம், இம்மூன்றையும் சமமாகச் சேர்த்து விட்டு அரைத்துக் கரைத்து எல்லாம் ஒன்று படக்கலந்து அடுப்பேற்றித் துழாவிச்சிறு தீயால்மூன்றுநாள் மெதுவுற எரித்து நாலாவது நாள் உதயத்தில் மெழுகுபதங்கண்டு புழுகு சட்டம், கோரோசனம் இவ்விரண்டும்வகை 1-க்குக் களஞ்சி இரண்டாக நிறுத்துப் பொடித்து தூவிய வடிகடத்தில் வடித்து ஆறிய பின்பு வஸ்திரபந்தனஞ் செய்துப் பத்துநாள் தானியபுடம் வைத்தெடுத்து இதில் வேண்டிய அளவு ஒருபாத்திரத்தில் விட்டு இரண்டு

நாசிகளுக்கும் காதுகளுக்கும் இரண்டிரண்டு துளிவிட்டுப் பின்பு தலைக்கு சூடெழும்பாமல் தேய்த்துச் சிகைக்காய் அரைப்பிட்டுக் காய்ந்தாறிய வெந்நீரால் ஸ்நானஞ் செய்வித்து அந்த ஈரம் உலர்த்திய உடன் புளியில்லாத பதார்த்தங்கள் சேர்ந்த சாதம் போடுவிக்கவும், இதனால் சர்வசுர ரோகங்களும் நிவர்த்தியாம்.

---

## ஆகந்துக சுரபேதம்.

### 1-வது பூத சுரலட்சணம்.

இதனால் ஆவேசம், அமிதவார்த்தை, வாந்தி, அரோசகம், மூர்ச்சை, ஏப்பம், தாபம் வாயுலரல், வயிறு மார்பு இவ்விடங்களில் நோதல், உடலை முறித்துக்கொள்ளுதல், தனக்குத்தானே பேசுதல் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 2-வது பசாச சுரலட்சணம்.

இதனால் ஆடல் பாடல் காரணமின்றி நகைத்தல், தேகஞ்சில்லிடல், எரிச்சல், சுவாசம், ரோமச்சிலிர்ப்பு, கொட்டாவி, விக்கல், வாந்தி, ஏப்பம். மனோவியாகூலம், ஈனத்தொனி, வியர்வை, மிகுசுரம் என்னு மிக்குணங்களுண்டாகும்

### 3-வது அபிசார சுர லட்சணம்.

இதனால் சரீர முழுதும் கொப்பளங்களுடன், எரிச்சல், அதிசுரம், மனது பதைத்தல், மூர்ச்சை பிரமை, தாகம், விக்கல் விகார சேஷ்டை என்னு மிக்குணங்களுண்டாகும்.

### 4-வது தாந்திரிக சுரலட்சணம்.

இதனால் முகத்திலும், கண்டத்திலும், வியர்வை, நாடி மெதுவாக நடத்தல், பலவீனம், விக்கல், வாந்தி என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 5-வது தெய்வப்பிரகோப சுரலட்சணம்.

இதனால் தேகமெங்கும் குளிர்ச்சி, தலைப்புரட்டல், உடம்பெங்குங்குத்தல், விக்கல், வாந்தி, ஏப்பம், அரோசகம், வாய் பிதற்றல், என்னு மிக்குணங்களுண்டாகும்.

### 6-வது காந்தர்வ சுரலட்சணம்.

இதனால் தலையிலும் கில்களிலும் நோதல், நெட்டுயிர்ப்பு, புத்தி பிரமித்தல், பலவீனம், பசியின்மை, மூர்ச்சை, க்ஷீணதாது, நீர்

இறங்கல், தேகஞ் சுற்றிவருவதுபோ லிருத்தல் என்னுமிக்குணங்கள் உண்டாகும்.

## ஆகந்துக சுரபேதசிகிச்சை விபரம்.

மேற்சொல்லிய ஆறுவகை சுரங்களும், சந்நிபாத சுரசிகிச்சையில், அல்லது இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற கலிக்கத்தையாவது கண்களுக்குத் திட்டிப் பூதநாசப்புகை கொடுத்து வெருகந்தைலம் சந்தனாதித்தைலம் இவைகளில் இசைந்த ஒன்றை உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசித் துவாலை செய்து பத்திய மறு பத்தியங் கழித்தபின்பு பூதிகாதைலம், சந்தனாதித்தைலம், விஷமுஷ்டித்தைலம் இவைகளில் எதையாவது ஒன்றைக்கொண்டு ஸ்நானஞ் செய்வித்துவரில் நிவர்த்தியாகும்.

மேற்சொல்லிய கலிக்கமுதல் தைலம் வரையிலும் உள்ள அவுஷதங்களுக்கு விவரம் இதனடியிற் காண்க.

## பூத கலிக்க விபரம்.

ரசம் பலம் ஒன்று, கெந்தகம் பலம் மூன்று, வெள்ளைச்சாரணைவேர், நேர்வாளம், இவ்விரண்டும் வகை ஒன்றுக்கு பலம் நாலாக நிறுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழ ரசத்தினால் அரைத்து, மான் கொம்புச் சிமிழில் வைத்துக்கொண்டு இதில் குன்றி இடை பழ ரசம் விட்டுக் குழைத்துக் கண்களில் கலிக்கமிடவும்.

## பூதநாசப்புகை விபரம்.

பன்றியின் குளம்பு, தேவதாரு காஷ்டம், வெண்குன்றிவிரை, பசுவின் கொம்பு, வெள்ளைப்பூண்டு, தகரை விரை, கருங்குன்றி விரை வால் மிளகு இவைகளைச் சமமாகச் சேர்த்து இடித்து வைத்துக் கொண்டு கொஞ்சம் எடுத்து நெருப்பிலிட்டு புகை பிடிக்கவும்.

## வெருகந் தைல விபரம்.

எருக்கம்வேர், சிற்றாமுட்டிவேர், சிறுகாஞ் சொறிவேர், அவுரிவேர், சீதேவி செங்கழுநீர்க்கிழங்கு துளசிவேர் நொச்சில் வேர், பெருங்கரந்தைவேர், என்னும் வேர்கிழங்கு வகைகள் எட்டும் வகைஒன்றுக்குப் பலம் பத்தாக நிறுத்து இடித்துப் பாண்டத்தில் கொட்டி ஆற்றுஜலம் ஆறுகுறுணி பக்காப்படி நாற்பத்தெட்டுப்படி ஜலம் அளந்து விட்டு எட்டில் ஒன்றாக வடித்த கஷாயத்தையும், கொம்பரக்குப் பலம் ஒன்று நிறுத்து நாழி ஜலத்திற்

போட்டு ஒரு படியாக வடித்த கஷாயத்தையும் எள்ளினது நெய் படி இரண்டு, பசுவின்மோர் இருகுறுணியும், ஒரு தைலப்பாத்திரத்தில் விட்டு அதில் அரத்தை அதிமதுரம், கோரைக்கிழங்கு, வெட்பாலை அரிசி, கோஷ்டம், வாய்விளங்கம், வால்மஞ்சள், சுக்கு, திப்பிலி, மிளகு, சித்திரமூலவேர், மரமஞ்சள், கருவேம்புவேர், கடகரோகணி, சந்தனம், மஞ்சிஷ்டி, சதகுப்பை, கஸ்தூரிமஞ்சள், லவங்கப்பட்டை, கடுகு செவ்வியம், தக்கோலப்பொட்டு, வெள்ளுள்ளி, திப்பிலிமூலம், தடுகுபுகையூரல் என்னும் கற்கதிரவியம். இச்சரக்கு இருபத்தைந்து வகையொன்றுக்குப் பலம் கால் விழுக்காடு நிறுத்துமேற்படி மோர்விட்டு அரைத்துக் கரைத்து எல்லாம்ஒன்றுபடக் கலந்து நாலுநாள் மெதுவுற எரித்து ஐந்தாவதுநாள் உதயத்தில் வடித்து வைத்துக் கொண்டு இதில் வேளைக்கு ஒவ்வொரு களஞ்சிவீதம் உள்ளுக்குக் கொடுத்துப் புளிபில்லாத பத்தியம் வைத்து மறுபத்தியங் கழித்தவுடன் ஸ்நானமும் செய்யவும்.

## வேறொருவிதத் தைல விபரம்.

வெள்ளெருக்குச் சமூலம், சிற்றுமுட்டிவேர், பேராமுட்டிவேர், விஷ்ணுகாந்திவேர், வில்வவேர், அமுக்கிராவேர், சிந்தில்வேர், சாரணைவேர், சிந்திற்றண்டு, இவ்வொன்பதில் ஆதிச்சரக்காகிய வெள்ளெருக்குச் சமூலம், துலாம் ஒன்றும், மற்றவைகள் தினுசு ஒன்றுக்குப் பலம் அஞ்சுமாக நிறுத்து இடித்துக் குடிநீர்ப் பாண்டத்திற் சேர்த்து ஆற்றுஜலம் தூணிவிட்டு குறுணி கஷாயமாக வடித்து, அத்துடன் குறுணி நல்லெண்ணெய்யும், புளித்ததயிர் ஜலம் படிநாலும் விட்டு ஒரு தைலப் பாத்திரத்திலூற்றி அதில் வெட்டிவேர், அதிமதுரம், சந்தனக்கட்டை, தேவதாருகட்டை, கோரைக்கிழங்கு, குங்கிலியம், திராய்வேர், குக்கில், சிற்றுமுட்டிவேர், சுக்கு, திப்பிலி, மிளகு, என்னும் கற்கதிரவியம் பன்னிரண்டும், வகையொன்றுக்குப் பலம் ஒன்று விழுக்காடுநிறுத்துமேற்படி மோர்ஜலம் விட்டுப் பதமாக அரைத்துக் கரைத்து மூன்று நாள் மெதுவுற எரித்து வடித்து வைத்துக்கொண்டு இதில் வேளைக்கு ஒவ்வொரு களஞ்சி (அதாவது ஒன்றேகால் விராகனிடை) வீதம் உள்ளுக்குக்கொடுத்து வரவும் இதற்கு மேற்சொல்லிய பத்தியமே.

### சந்தனாதித் தைல விபரம்.

ஒருபடி சுத்தஜலமும், நாழிபசுவினது நெய்யும், அளந்து ஒரு தைலப்பாத்திரத்தில் விட்டுச் சந்தனக்கட்டை, வெள்ளிலோத்திரப் பிசின், அதிமதுரம், கொடிமுந்திரிப்பழம் என்னும் இந்நான்கையும் வகையொன்றுக்குமும்மூன்று களஞ்சாகநிறுத்துப்பசுவின் பாலால் பதமாக அரைத்துக் கரைத்து மெழுகுபதத்தில் வடித்து வைத்துக் கொண்டு இதில் ஒரு காசிடை வீதம் உள்ளுக்குக் கொடுத்து ஸ்நானமுஞ் செய்வித்து வரவும்.

### பூதிகா தைல விபரம்.

ஆயில்பட்டை, ஆகாசகருடன் கிழங்கு, ஆடுதின்னாப்பாளை வேர், மிளகரணைவேர், வெள்ளைப்பூண்டு, வட்டத்திருப்பி, படிகாரம், சவுக்காரம், வலம்புரிக்காய், தான்றிக்காய் என்னும் கற்க திரவியம் பத்தில் கடைசியிற் சொல்லிய காய்களிரண்டும் வகையொன்றுக்கு விராகனிடை ஆறேநாலும் மற்றவை வகையொன்றுக்கு விராகனிடை ஒன்றேநாலும், ஆக நிறுத்து வெள்ளாட்டுப் பாலாலரைத்து அரைப்படி நல்லெண்ணெயிற் கரைத்து மெழுகுபதத்தில் வடித்து ஆறவைத்து ஸ்நானஞ் செய்விக்கவும்.

---

## அபிகாத சுரபேதம்.

### 1-வது அநித்திரை சுரலட்சணம்.

இதனால் நித்திரையின்மை, பலவீனம், கண்கள் சிவத்தல், கண் குழிவிழுதல், சுரம் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 2-வது கொட்டாவிச் சுரலட்சணம்.

இதனால் அடிக்கடி கொட்டாவி யிருவதுமன்றி நாளாவர்த்தியில் சுரகுணங்களெல்லாம் உண்டாகும்.

### 3-வது வியர்வைச் சுரலட்சணம்.

இதனால் வியர்வை அதிகமாகப் பெருகல், நாக்குமுள்ளுப்போலிருத்தல், அற்பப்பசி, சுரம், என்னுமிவைகளுண்டாகும்.

### 4-வது கம்பச் சுரலட்சணம்.

இதனால் தேகம் அடிக்கடி நடுக்குவதுடன் நாளாவர்த்தியில் சுரகுணங்கள் யாவும் பிறக்கும்.

### 5-வது தாண்டுகால் சுரலட்சணம்.

இதனால் காலைத் தாண்டித்தாண்டி வைத்தலுடன் சுரகுணங்களும் பிறக்கும்.

### 6-வது ஈனத்தொனி சுரலட்சணம்.

இதனால் சரீரம் சில்லிடல், மாறுகுரலாகப்பேசுதல், வியர்வை, எரிச்சல், நுரைநுரையான வாந்தி, வாய்கசத்தல், சுரம் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 7-வது அக்கினிமந்தச் சுரலட்சணம்.

இதனால் தீக்ஷணுக்கினி மந்தப்பட்டு பசி நீங்குவதுடன் சுர குணங்கள் யாவும் பிறக்கும்.

### 8-வது மாந்த சுரலட்சணம்.

இதனால் உட்காய்ச்சல், தேகம்வெளுத்தல், நடுக்கல் நாக்கு வரண்டு தடித்தல், இருமல், சுரம் என்னுமிக்குணங்களுண்டாகும்.

### 9-வது வெட்டைச் சுரலட்சணம்.

இதனால் தேகம் எப்போதும் கனகனப்பாகவிருத்தல், தேகம் நாளுக்குநாள் இளைத்தல், அரோசகம், சிரசில் சொற்பநோய் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 10-வது சீத சுரலட்சணம்.

இதனால் மெய்நடுக்கல், அதிகுளிர், வாய்பிதற்றல், மிகு சுரம் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 11-வது உட் சுரலட்சணம்.

இதனால் உள்ளுக்குள்ளே தானே சுரம் காய்வதுமன்றி நாளுக்குநாள் தேகம் வற்றி வெளுத்து துரும்பாக இளைக்கும்.

### 12-வது தாபச் சுரலட்சணம்.

இதனால் தேகமுற்றிலும் எரிச்சல் எவ்வளவு ஜலம் குடித்தாலும் தாகந்தீராமை, மிகுசீதளம் என்னுமிக்குணங்கள் உண்டாகும்.

### 13-வது சோஷை சுரலட்சணம்.

இதனால் சோஷை சரீரம் பதைத்தல், குளிர் கண்களில் ஜலம் வடிதலுடன் புகைகம்மியது போலிருத்தல் அடிக்கடி நீர் அதிகமாக இறங்கல் என்னுமிக் குணங்களுண்டாகும்.

## 14-வது ஆமச் சுரலட்சணம்.

இதனால் சீதமும் ரத்தமும் வீழ்தல், வயிற்றுநோய், ஆசனங் கடுக்குதல், தலைதிருப்பல், கால்கை அசதி, சுரம் என்னுமிக்குணங் களுண்டாகும்.

## 15-வது நிராமச் சுரலட்சணம்.

இதனால் அஜீர்ணம், அதிஉஷ்ணம், மிகுதாகம், நெட்டுயிர்ப்பு, பேதி, சுரம், மனோவியாகூலம் என்னுமிக் குணங்களுண்டாகும்.

## 16-வது ஏப்பச் சுரலட்சணம்.

இதனால் அடிக்கடி ஏப்பமுண்டாவதுடன் நாளாவர்த்தியில் சுரகுணங்கள் யாவும் பிறக்கும்.

## 17-வது சீராப்புச் சுரலட்சணம்.

இதனால் அடிக்கடி சர்ப்பம்போலச் சீறுதலுண்டாவதுமன்றி சுரகுணங்களும், உண்டாகும்.

## 18-வது தளை சுரலட்சணம்.

இதனால் தேகமுற்றிலும் தளைகளால் பந்தித்ததுபோ லிருத்தலுடன் சுரகுணங்களும் பிறக்கும்.

## 19-வது நெரிகட்டுச் சுரலட்சணம்.

இதனால் அரையில் நெரிகட்டிக் கொள்ளுவதுடன் சுரகுணங்களும் பிறக்கும்

## 20-வது நளி சுரலட்சணம்.

இதனால் தேகம் நாளுக்குநாள் நலிதலுடன் சுரகுணங்கள் யாவும் பிறக்கும். இதற்குத்தாளிசபத்திரி வடகம் நன்மை செய்யும்.

## 21-வது முடக்குக்கால் சுரலட்சணம்.

இதனால் காலை முடக்கவும், நீட்டவும், ஒட்டாமல் செய்வதுமன்றி வாதபித்த சுர குணங்களையும் பெற்றிருக்கும்.

இதற்கு வாதபித்த சுர கஷாயம் பொருந்தும்.

## 22-வது விகட சுரலட்சணம்.

இதனால் அகடவிகடமாக வார்த்தைசொல்வதுடன் சுரகுணங்கள் யாவும் பிறக்கும்,

இதற்கு வியர்வை சுர கஷாயம் பொருந்தும்

## 23-வது ஈளை சுரலட்சணம்.

இதனால் தேகம் ஈளைபிடித்து விர்த்தி யடையாதிருப்பதுமன்றி சுரகுணங்களுண்டாகும்.

இதற்கு சுரபேதி மாத்திரை நன்மை செய்யும்.

---

## அபிகாத சுர சிகிச்சை விபரம்.

மேற் சொல்லிய இருபத்துமூன்று வித சுரங்களுக்கும், தனித் தனியே விதித்திருக்கிற கஷாயம் முதலானவைகளில் அதன் பின்பு சொல்லப்பட்டிருக்கிற துத்தமாத்திரையையிழைத்து திரிகடுகுதூள் வெருசடி தூவி தேன் ஒரு காசிடைவிட்டுக் கலந்து காலையிலும், மாலையிலும் கொடுத்து நோயின் பலாபலங்களுக்குத் தக்கபடி புளி யில்லாத பத்தியமாவது இச்சா பத்தியமாவது வைத்து மறுபத்தி யங் கழித்தவுடன், அததற்கு அல்லது சர்வ சுரங்களுக்கும்பொருந் திய தைலத்தினால் ஸ்நானஞ் செய்வித்து வரில் நிவர்த்தியாம்.

## அநித்திரைச் சுரக்கஷாய விபரம்.

கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், இருவேலிவேர், விலா மிச்சவேர், தாமரைக்கொடி, வீழிப்பட்டை, இவ்வேழையும் சமமா கச் சேர்த்து இடித்துச் சுத்தஜலத்திற் போட்டு எட்டில் ஒன்றாக வடித்துக் கொடுக்கத் தீரும்.

## கொட்டாவி சுரகஷாய விபரம்.

சிறுதேக்கு, வாய்விளங்கம், வால்மிளகு, கடகரோகணி, சுக்கு, ஏலம், லவங்கம், திப்பிலி தக்கோலம், பொஸ்தக்காய், என் னும் பத்தும் சமமாகச்சேர்த்து ஜலத்திலிட்டு முன்போலக் காய்ச் சிக் கொடுக்கத் தீரும்.

## வியர்வைச் சுரகஷாய விபரம்.

கொடித்தூவிவேர், நன்னாரிவேர், கோரைக்கிழங்கு, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், இருவேலிவேர், விலாமிச்சம்வேர், வீழிப்பட்டை, தாமரைக்கொடி என்னும் இவை பத்தும் சமமாகச் சேர்த்து இடித்து ஜலத்திலிட்டு மேற்சொல்லியபடி காய்ச்சிக் கொடுக்கவும்.

## கம்பச் சுரகஷாய விபரம்.

கொத்துமல்லிவிரை, சுக்கு, திப்பிலி, மிளகு, பேராமுட்டிவேர், தக்கோலப்பொட்டு என்னுந் தினுசுகள் ஆறும் சமமாகச் சேர்த்து

இடித்து ஜலத்திலிட்டு முன்போலக் காய்ச்சிக்காலையில் மாத்திரம் கொடுக்கவும்.

### தாண்டுகால் சுரக்கஷாய விபரம்.

ஒருபலம் மிளகைச்சட்டியிலிட்டு வறுத்துக் கடைந்து ஒருபடி ஜலம் விட்டு முன்போலக் காய்ச்சி இரண்டு வேளையுங் கொடுக்கவும்.

### ஈனத்தொனி சுரக்கஷாய விபரம்.

கோரைக்கிழங்கு, கொடித்தூவி, கோஷ்டம். செவ்வியம், கொத்துமல்லிவிரை, தூதுவளை, விஷ்ணுகாந்தி, விலாமிச்சவேர், அதிமதுரம், சுக்கு லவங்கம், பேய்ப்புடல், முள்ளிவேர், பற்படகம், ஏலம், திப்பிலி, திப்பிலிமூலம், கண்டங்கத்திரிவேர், ஆடாதோடை யிலை, நன்னாரிவேர், சிந்தில்தண்டு, என்னுந்தினுசுகள் இருபத்தொன்றும் சமமாக நிறுத்து இடித்து உலர்த்திப்பொடிசெய்து ஜலத்திலிட்டு முன்போலக் காய்ச்சிக் கொடுக்கவும்.

### அக்கினிமந்த சுரக்கஷாய விபரம்.

தேசாவரம், சுக்கு, கொத்துமல்லிவிரை, இம்மூன்றையுஞ் சமமாகச்சேர்த்து ஜலத்திலிட்டுமுன்போலக்காய்ச்சிக்கொடுக்கவும்.

வெந்தயம் பலம் $\frac{1}{4}$ சட்டியிலிட்டு வெடித்தடங்கிய பின் மிளகு பலம் $\frac{1}{8}$ இட்டு வறுத்து ஜலம்விட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

### மந்த சுரக்கஷாய விபரம்.

திப்பிலிக்கட்டை, சுக்கு, முசுமுசுக்கைவேர் இம் மூன்றையும் சமமாகச் சேர்த்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

சிறுதேக்கு, ஆடாதோடை கஞ்சாங்கோரை, அம்மையார் கூந்தல், சிறு குறட்டை, சிறுகாஞ்சொறி, முள்ளிசாரணை, நீர்முள்ளி, முடக்காவேளை, வக்கணை, புங்கு, இவைகளின் வேர், சிந்தில்தண்டு, நன்னாரிவேர், கொத்தமல்லி, சுக்கு, கோரைக்கிழங்கு இவைகளை மேற்சொல்லியபடி சேர்த்து இடித்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

கோரைக்கிழங்கு, விஷ்ணுகாந்தி, கண்டங்காரிவேர், பற்படகம், வசம்பு இவை ஐந்தும் சமமாகச் சேர்த்து இடித்து ஜலத்திலிட்டு, முன்போலக் காய்ச்சிக் கொடுக்கவும்.

## வெட்டை சுரக்கஷாய விபரம்.

பரங்கிச்சக்கை பலம் ½ இடித்து சட்டியிலிட்டு அதில் அரைப் பலம் பனைவெல்லத்தைச் சேர்த்து ஒரு கோலினல் கிளறிக்கொண் டிருந்தால் புகைவரும். அப்போது ஒருபடி ஜலம்விட்டு ஆழாக் காய்ச் சுண்டவைத்துக் கொடுக்கவும்.

## சீத சுரக்கஷாய விபரம்.

சிற்றரா த்தை,சுக்கு, எருக்கம்வேர், நொச்சிக்கொழுந்து, இவைக ளைச் சமமாகச் சேர்த்து இடித்து ஜலத்திலிட்டு, முன்போலக்காய்ச் சிக் கொடுக்கவும்.

ஆடாதோடைவேர், நன்னரிவேர், சிறுவழுதலேவேர், அகிற் கட்டை, பற்படகம், பங்கம்பாளே, சுக்கு, சிந்தில்தண்டு, சந்தனக் கட்டை இவ் ஒன்பதையும் சமமாகச் சேர்த்து ஜலத்திலிட்டுக்காய்ச் சிக் கொடுக்கவும்.

## உட்சுர கஷாய விபரம்,

வெந்தயம் காற்பலம் சட்டியிலிட்டு ஒருபடி ஜலம்விட்டு காய்ச் சிக் கொடுக்கவும்.

கற்றாழைமடல், நெல்லிக்காய், முசுமுசுக்கை இவைகளின் ரசங் கள் ஆவின்பால் வகை ஒன்றுக்குப் படி அரைக்காலும் நல்லெண் ணெய் நாழி இரண்டும் அளந்து ஒரு பாத்திரத்தில் விட்டு அதில் அதிமதுரம் பலம் ஒன்று அரைத்துக் கரைத்துக் காய்ச்சிக் கொடுக்கவும்.

## தாபச் சுரகஷாய விபரம்.

கொஞ்சிப்பட்டை, நுணப்பட்டை, ஆதொண்டைப்பட்டை, விசிறிப்பட்டை, நொச்சிப்பட்டை இவ்வைந்தையும், இடித்து ஜலத் திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

ஏலம், அதிமதுரம், செங்கழுநீர்க்கிழங்கு, கோஷ்டம், விலா மிச்சம்வேர், வெட்டிவேர், சுக்கு, சந்தனம், நன்னரிவேர், கோரைக் கிழங்கு, பற்படகம், இப்பதினொன்றும், சமமாயெடுத்து இடித்து ஜலத்தில் சேர்த்து முன்போலக் காய்ச்சிக் கொடுக்கவும்.

## சோஷை சுரகஷாய விபரம்.

வரப்புலாவேர், வில்வவேர், சிற்றாமுட்டிவேர், விஷ்ணுகாந்தி, சமூலம் நன்னரிவேர், இவ்வைந்தும் சமமாகச் சேர்த்து இடித்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்,

## ஆமச் சுரத்துக்குக் கடுக்காய்ச் சூரணம்.

கடுக்காய்ப்பிஞ்சு பலம் $\frac{3}{8}$ நிறுத்துப் பாக்குவெட்டியால் பில்லை பில்லையாக நறுக்கி கரண்டியிலிட்டு சிற்றுமணக்கு நெய் கொஞ்சம் தெறித்துப்பொரியும்படி வறுத்து தூள்செய்துவாயில் கொட்டிவெந்நீர்விட்டு காலையில் மாத்திரம் ஒரு நாளைக்கு விழுங்கச் சொல்லில் நல்ல பேதியாகும். பின்பு ரசமும் சாதமும் போட்டு மறுநாள் முதல் மாங்கொட்டைக் குழம்பு முதலான கட்டுவாதி பதார்த்தங்களைச் சேர்த்து இச்சாபத்தியமாய்ச் சாப்பிடச் சொல்லவும்.

கடுக்காய்ப்பூ, லவங்கம், லவங்கப்பட்டை இம்மூன்றையும் சமமாகச்சேர்த்து இடித்து வடி கட்டிய பொடியும் சக்கரையும், வகை 1-க்கு வெருகடிப் பரிமாணம் வெண்ணெயிலிட்டுக் குழைத்துக் காலையில் மாத்திரம் மூன்றுநாள் கொடுக்கவும்.

## நிராமச் சுரகஷாய விபரம்.

சிந்தில்வேர், விலாமிச்சம்வேர், சிறுநாஞ்சொறிவேர், பற்படகம், கோரைக்கிழங்கு, கொத்துமல்லிவிரை, சுக்கு, உள்ளிப்பருப்பு நிலவேம்பு இவைபத்தும் இடித்து ஜலத்திற் சேர்த்துக் கஷாயமிட்டுக் கொடுக்கத் தீரும்.

## ஏப்பச்சுர கஷாய விபரம்.

விலாமிச்சவேர், அதிமதூரம், ஏலக்காய்த்தோல், கொத்துமல்லி விரை, வில்வவேர், சந்தனத்தூள், நெற்பொரி, இவ்வேழும் சமமாகச் சேர்த்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

## சீராப்புச் சுரசஷாய விபரம்.

பேய்புடல், பற்படகம், பேராமுட்டிவேர், சுக்கு, மிளகு, விஷ்ணுகாந்தி, நாரத்தைப்பட்டை இவ்வேழும் சமமாகச் சேர்த்து, ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

## தளைசுர கஷாய விபரம்,

சுக்கு, ஒமம், வெள்ளுள்ளி, சீரகம், கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், கிராம்பு, லவங்கம், கடுகரோகணி என்னும் தினுசுகள் ஒன்பதும், வகை ஒன்றுக்கு வராகனிடை ஒன்றேகாலாக நிறுத்து இடித்து மூன்று பங்குகளாகச் செய்து பங்கு ஒன்றுக்கு இருநாழி ஜலம் வீதம் விட்டு, அதில் சாதிக்காய், கிராம்பு, சாதிபத்திரி, தும்பராஷ்

டம், வகை 1-க்கு களஞ்சி (கால்) ஆக நிறுத்து இடித்து சீலையில் முடிந்து போட்டு அஷ்டபாகமாக வடித்துப்பின்பு மேற்படி முடிச்சிலுள்ள மருந்தை அரைத்து மேற்மடி கஷாயத்தில் கரைத்துக் குடிக்கத் தீரும்.

## நெரிகட்டு சுரசிகிச்சை.

இதற்கு மிளகை முதல்நாள் ஒன்றும் மறுநாள் இரண்டும் மூன்றுநாள் மூன்றுமாகப் பிரதிதினமும் இரட்டித்துக் கொண்டே நாற்பது நாள்வரையில் விடாமல் சாப்பிட்டு வரில் நிவர்த்தியாம்.

## துத்த மாத்திரை விபரம்.

துத்தம், துருசு, அரிதாரம், ரசம், கெந்தகம், மனோசிலை என்னும் இவ்வாறு சரக்குகளையும் வகை 1க்குப்பலம் ஒன்றாக நிறுத்து சுத்திசெய்து கல்வத்திலிட்டு மைபோலரைத்துச் சட்டியிலிட்டு சாரணை இலையை இடித்துப்பிழிந்து ரசம் படி காலை அளந்து மேற்படி சட்டியில்விட்டு வெண்கலக் கிண்ணியால் பொருந்த மூடி சீலைமண் செய்து ஒரு அகல் சட்டிக்கு அடியில் பணம்போலத் துவாரமிட்டு அத்துவாரத்தைச்சிறிய ஒட்டால் மூடி அதன்மேல் மணலைக் கொட்டி அதில் மேற்படி சீலைமண் செய்து கலசத்தைப் புதைத்து ஒரு ஜாமம் தீபாக்கினியால் எரித்து ஆறவைத்து மூசைபிரித்து மேற்படி மருந்தை கல்வத்திலிட்டு, தக்காளி, மணத்தக்காளி இவ்விரண்டின் இலை ரசங்களையும் சமமாகச் சேர்த்துவிட்டு அரைத்து வழித்து உளுந்துப் பிரமாணமான மாத்திரைசெய்து வேளைக்குஒரு மாத்திரை வீதம் சிகிச்சையிற் சொல்லியபடி கஷாயங்களில் இழைத்துக் கொடுக்கச் சர்வ சுரங்களும் தீரும்.

---

## அபிஷங்க சுரபேதம்.

### 1-வது காமச் சுரலட்சணம்:

இதனால் அதிசுரம், சந்தோஷம், மோகம், தாகம், சம்போகத்திலிச்சை, வாய்பிதற்றல், நித்திரையின்மை, வெட்கமில்லாமை, தயிரியமில்லாமை புன்சிரிப்பாக நகைத்தல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

### 2-வது பயசுரலட்சணம்.

இதனால் பற்கடித்தல், அழுதல், எரிச்சல், கண்கள் சிவத்தல், அடிக்கடி திடுக்கெனப்பயப்படல், என்னுமிக்குணங்களுண்டாகும்.

### 3-வது கோபச்சுரலட்சணம்.

இதனால் மிகுசுரம், தலைசுற்றல், அதிபித்தம், கோபம், வாய் பிதற்றல், வாந்தி, அரோசகம் என்னு மிக்குணங்க ளுண்டாகும்.

### 4-வது பிரலாப சுரலட்சணம்.

இதனால் அடிக்கடி அழுதல், மனோ வியாகூலம், மூச்சுத்திணறல், கண்கள் சிவத்தலுடன் நீர்வடிதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

### 5-வது விஷசுரலட்சணம்.

இதனால் ஒருபுறங் குளிர்தல், ஒருபுறங் காய்தல், தேகத்தில் விஷம் ஏறுவதுபோலத் தோற்றல், தலைநோய், சுரமென்னும் இக் குணங்க ளுண்டாகும்.

### 6-வது அவுஷத கந்தசுரலட்சணம்.

இது ரசகெந்தக பாஷாணாதி விஷத்திரவியங்களை முகருவதினாலும், தின்பதினாலும், தேகத்திற் பூசுவதினாலும், பிறந்து வீக்கம், கால், கை, முடக்கு, சூலையாதல், சுரம், அன்னத்துவேஷம் ஆகிய இவைகளை யுண்டாக்கும்.

### 7-வது ஆதப சுரலட்சணம்.

இதனால் முகம் கத்தரிக்காய் கன்றியதுபோலச் சிவத்தல், பேதி, வாயுலரல், மிகுநித்திரை, சரீரவெரிச்சல் என்னு மிக்குணங்கள் உண்டாகும்.

### 8-வது நீராவிச் சுரலட்சணம்.

இது வெந்நீர், ரசம், குழம்பு முதலிய நீர்வகைகள் எண்ணெய் யாதிநெய்வகைகள் காயும்போதும் கொதிக்கும்போதும் கைதவறித் தேகத்தில் ஊற்றுண்டு ஆவிபடுதலால் விரணம்பிறந்து சுரத்தையும் சிரமத்தையும் உண்டாக்கும்.

### 9-வது அங்கச்சேத சுரலட்சணம்.

இதனால் கற்கள், கட்டைகள் முதலியவைகளில் அங்க உறுப்புகள் படுவதினாலும் இருட்டுக் காலத்திலும் பலவீனமான காலத்திலும் இடறி விழுவதினாலும் காயம்பட்டு தேகவேதனை, தலைநோய், அரோசகம், வாந்தி, சோஷை என்னு மிக்குணங்க ளுண்டாகும்.

## 10-வது மாரிச்சுரலட்சணம்.

இது மழை காற்று இவைகளில் விசேஷமாகத் திரிவதினாலும், மலைகளிலும், காடுகளிலும், வசிப்பதிலும், சுரம் பிறந்து குளிர் சுரம், சீதசுரம் இவைகளில் குணங்களைப் பெற்றிருக்கும்.

## அபிஷங்க சுரபேதசிகிச்சை விபரம்.

மேற்சொல்லிய சுரங்கள் பத்துக்கும், இதனடியில் தனித்தனி யே அவுஷதங்களைக் கொடுத்துவருகையில் ஒன்று முதல் மூன்று வரையிலுள்ள சுரங்களுக்குப் பத்திய மில்லாமலும், நாலு முதல் ஐந்துவரையிலுமுள்ள சுரங்களுக்கு உப்பில்லாப் பத்தியமும் ஆறு முதல் ஒன்பது வரையிலுமுள்ள சுரங்களுக்கு மோர், பயத்தம் பருப்பு, கடுகு. நல்லெண்ணெய் இன்னம் சீழ்பிடிக்கத் தக்க பதார்த் தங்கள் சேராத பத்தியமும், மாரிச்சுரத்திற்குப் புளியில்லாத பத்தி யமும் கொடுத்து நிவர்த்திக்க வேண்டும். இனிமேற்சொல்லிய மரு மருந்துகளுக்கு விபரம் இதனடியிற் காண்க.

## காமச்சுரத்திற்கு விலாமிச்சவேர் குழம்பு.

விலாமிச்சவேர், சந்தனக்கட்டை, இவைகளில் தேவையான ஒன்றைச்சந்தனக் கல்லிலிட்டுப்பன்னீர்விட்டு இழைத்து அதில் பச் சைக் கருப்பூரம், குங்குமப்பூ, கோரோசனம் இவைகளைச்சேர்த்துக் கலந்து தேகத்திற் பூசிக்கொள்ளச் சொல்லி, தாமரையிலையாற் கட் டிய விசிறியாலும் வெட்டிவேர் விசிறியாலும், விசிறி சயித்தியோப சாரம் செய்வதுமன்றி, ஷை தாமரைக்கிழங்கையும் தின்னக்கொடுக்க வேண்டும். அதுவுமல்லாமல் ஷை நோயின் உற்பத்திக்குக் காரண மான ஸ்திரீ போகமும் செய்விக்க வேண்டும்.

பயசுரம், கோபச்சுரம் இவ்விரண்டிற்கும் அரோசகரோக சிகிச்சையிற் சொல்லப்பட்டிருக்கிற பருத்திப் பருப்புச் சூரணத்தை எலுமிச்சம்பழ ரசத்தில் சருக்கரை சேர்த்து வடிகட்டி யதிலிட்டு இழைத்துக் கொடுத்துவரில் தீரும். அன்றியும் பித்தசுரக் கஷா யங்களைக் கொடுத்தாலும் நிவர்த்தியாம். அதுவுமல்லாமல் இவைக ளின் உற்பத்திக்குக் காரணமான கோபமும் பயமுந் தணியும்படி இதமான வார்த்தைகளைச் சொல்லவேண்டும்.

## பிரலாபசுர கஷாய விபரம்.

பேய்ப்புடல், ஆடாதோடையிலை, செம்முள்ளிவேர், முப்புரத்தை எரித்தான்வேர் என்னு மிவ்வைந்தும் சமமாகச் சேர்த்து, இடித்து ஜலத்திலிட்டு எட்டில்ஒன்றுக வடித்துக் கொடுக்கவும்.

## விஷசுர கஷாய விபரம்.

நெல்லிக்காய், தானிக்காய், வேப்பீர்க்கு, சீந்தில்தண்டு, இவைகளை வகையொன்றுக்குப் பலம் (கால்) விழுக்காடு நிறுத்து ஒருபடி ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

சிறுவழுதலைவேர், சீந்தில்தண்டு, தாமரைக்கொடி, கோரைக்கிழங்கு, நல்வேளை இவைகளை முன்போல நிறுத்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

மலைதாங்கிவேர், சுக்கு, மிளகு, திப்பிலி. புங்கப்பட்டை, இவைகளை முன்போலக் கஷாயமிட்டுக் கொடுக்கவும்.

சுக்கு, கடுக்காய்த்தோல், நிலவேம்பு, ஆடாதோடையிலை, சீந்தில்தண்டு, பேய்ப்புடல் இவைகளையும் முன்போலக் கஷாயமிட்டுக் கொடுக்கத்தீரும்.

## அவுஷத கந்தசுர கஷாய விபரம்.

அகத்தி மிதிப்பாகல் இவ்விரண்டின் இலைகளையும் சமமாகச் சேர்த்து சட்டியிலிட்டு ஜலம்விட்டுக்காய்ச்சிக் கொடுக்கவும், அலறியும், அவுரி, கத்திரி இவ்விரண்டின் வேர்களுடன், தாமரைக்கிழங்கு மிளகு இவைகளையும் சமமாகச் சேர்த்து இடித்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக்கொடுக்க ஷை விஷமருந்துகள் முறிந்து சுரந்தீரும்.

## ஆதபசுர கஷாய விபரம்.

கொன்றைத்தோல், கொத்துமல்லிவிரை, கற்றுழஞ்சருகு, கடுக்காய்த்தோல், கடகரோகணி இவைகளைச் சமமாகச் சேர்த்து இடித்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கத்தீரும்.

## நீராவிச்சுர சிகிச்சை விபரம்.

இலுப்பமரக்கிளையை சிறுதுண்டாகச் சந்தனக்கட்டைபோல் தறித்து மேற்படி கல்லிலிட்டு மோர்விட்டு இழைத்துப் பூசத்தீரும். தேங்காய் நெய்யைத் தடவி வரினும் உலரும்.

## அங்கச்சேதசுர சிகிச்சை விபரம்.

காசுக்கட்டியை ஜலத்திலிழைத்துக்காயத்தின்மேல்பூசத்தீரும். அன்றியும் மருந்து ஷாப்புகளில் விற்கிற டின்சர்மற் என்கிற திராவகத்தைப் பஞ்சில் நுவைத்து மேற்படி காயத்தின்மேல் வைத்துக் கட்டத்தீரும்.

## மாரிச்சுர கஷாய விபரம்

பாதிரி, பெருங்குமிழ், முன்னை, கோரை இவைகளின்வேர் பற்படகம். சிறுதேக்கு, கண்டங்காரிவேர், சிற்றுமல்லிவேர், கடுக்காய்த்தோல், சிறுவழுதலைவேர், வில்வவேர், நெருஞ்சில்வேர், இவைகளைச் சமமாகச் சேர்த்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

---

## தாதுகத சுரபேதம்.

சிற்சில ரோகங்களின் விஷமத்தால் நெடுநாளாய் உள்ளுக்குள்ளே விஷமித்தசுரமான்துமும்மூன்றுநாட் கொவ்வொரு தாதுவைப்பற்றி அஸ்திதாது, ரத்ததாது, மாம்ஸதாது, மேதோதாது, ரசதாது. மச்சதாது, சுக்கிலதாது என்னும் எழுவித தாதுகத சுர ரோகங்கள் உண்டாகும்.

அவைகளை முறையே இதனடியிற் காண்க.

### 1-வது அஸ்திதாதுகத சுரலட்சணம்.

இதனால் மிகுதாகம், தேகம்வெளுத்தல், குளிர்ச்சி, ஒவ்வொரு வேளையில் மாத்திரம் சுரம் அதிகமாகக் காய்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 2-வது ரத்ததாதுகத சுரலட்சணம்.

இதனால் அதிகசுரம், தாகம், இளைப்பு, வியர்வை, மூர்ச்சை, சித்தப்பிரமை, உடம்புநோவு என்னுமிக்குணங்களுண்டாகும்.

### 3-வது மாம்சதாதுகத சுரலட்சணம்.

இதனால் அதிசுரம், சுவாசம், தேகமெங்கும் நமைச்சல், நோவு ஆயாசம், மூர்ச்சை, மயிர்க்கூச்செறிதல், என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

## தாதுகத சுரபேத சிகிச்சை விபரம்.

மேற்சொல்லியமூன்றுவிதச்சுரங்களுக்கும் அதுநீங்கலாயுள்ள மற்றையநான்குவிதச்சுரங்களுக்கும், ஆக-சேர்ந்த ஏழுவிதத் தாதுகத சுரங்களுக்கும் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற கஷாயங்களில் இசைந்த எதிலாவது ஒன்றில் அபிஷங்கசுர சிகிச்சையிலுள்ள துத்த மாத்திரையைச்சேர்த்து இழைத்துக் கொடுத்தவரில் நிவர்த்தியாம். இதற்கு இச்சா பத்தியமும், புளியில்லாத பத்தியமும் ஸ்நானத்திற்கு அரக்குத் தயிலமும் உதவும்.

## மேதோதாது கதசுர கஷாய விபரம்.

சுரைத் தண்டை அல்லது இலையைத் துண்டு துண்டுகளாகச் சிறுக நறுக்கிச் சட்டியிலிட்டு அத்துடன் மிளகு, வெள்ளைப்பூண்டு இவ்விரண்டையும் வகையொன்றுக்கு வராகனிடை ஒன்றேகாலாக நிறுத்துச் சேர்த்துக் கழுநீர் படி ஒன்று விட்டுக்காய்ச்சிக் கொடுத்து வந்தால் தீரும்.

## ரசதாது கதசுர கஷாய விபரம்.

நீர்முள்ளிவேர், சிறுபீளைவேர், விலாமிச்சவேர், நன்னாரிவேர், பெருங்குமிழ்வேர், அமுக்கிராவேர், சிந்தில்வேர், முன்னைவேர், பாதிரிவேர், நெருஞ்சில்வேர், குருந்தட்டிவேர், சன்ன லவங்கம், வீழிப்பட்டை, தாமரைக்கொடி, கோரைக்கிழங்கு, கற்றாழைச் சருகு இவைகளையும் மேற்சொல்லியபடி நிறுத்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

## மச்சதாது கதசுர கஷாய விபரம்.

கொடித்தூவிவேர், பலம் கால் நிறுத்து இடித்துப் பாண்டத்திற் கிழிகட்டித் தொங்கவிட்டு அதில் பசுவின்பால் வெள்ளாட்டுப் பால் சுத்தஜலம் இம்மூன்றையும் சமமாகச்சேர்த்துவிட்டுக் காய்ச்சிக் கொடுத்து வரில் தீரும்.

காட்டுச்சீரகம் வராகனிடை ஒன்றேகால் நிறுத்துப் பாண்டத்திலிட்டுப் படி ஜலம் விட்டு ஆழாக்காய்க் காய்ச்சிக் கொடுத்து வரத் தீரும்.

## சுக்கிலதாது கதசுர கஷாய விபரம்.

சுக்கு, ஓமம், வெள்ளுள்ளி, சீரகம், கிராம்பு, கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், லவங்கம், கடகரோகணி இவைகள் வகையொன்

றுக்கு விராகனிடை ஒன்றேகாலாக நிறுத்து மூன்று பங்குகளாகச் செய்து ஒரு பங்குக்கு நாழி ஜலவீதம் விட்டுக் காய்ச்சிக்கொடுக்கச் சுக்கிலதாதுகத சுரம் தீரும்.

### அஸ்திதாது கதசுர கஷாய விபரம்.

பேய்ப்புடல், நோரைக்கிழங்கு, பற்படகம், படர்ஆவரை, கடகரோகணி, சுக்கு, பேய்பாற்சொறி இவைகளை வகையொன்றுக்குப் பலம் கால் வீதம் இடித்து ஒரு படி ஜலத்திற் சேர்த்துக் காய்ச்சிய கஷாயத்தைக் கொடுத்துவரத் தீரும்.

### ரத்ததாது கதசுர கஷாய விபரம்.

தாமரைக்கொடி, அமுக்கிராங்கிழங்கு, சித்திரமூலம், பேராமுட்டிவேர், வசம்பு, சுக்கு, இவைகளை முன்போல நிறுத்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்,

### மாம்ஸதாது கதசுர கஷாய விபரம்.

பேராமுட்டிவேர், நாகமல்லிவேர், சுக்கு, கடுக்காய்த்தோல், நெல்லிக்காய், தானிக்காய், கடகரோகணி, மருட்கிழங்கு, சிற்றுமுட்டிவேர், பாலைவேர், பேய்பாற்சொறி இவைகளை மேற்சொல்லியபடி சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்கவும்.

---

## சன்னிபாத சுர பேதம்.

---

### 1-வது சன்னிபாத சுரலட்சணம்.

இதனால் தேசம், எப்போதுப்போலிருத்தல், சூலைகாணல், சரீரம் பளபளப்பாக விருத்தல், உடம்பு நோதல், தாகம், இருமல், தியக்கம் என்னு மிக்குணங்க ளுண்டாகும்.

### 2-வது சித்த விப்பிரம சன்னிபாத சுரலட்சணம்.

இதனால் தேகமுழுதும் மிகுந்து நோதல், வாத பித்தங்கள் அதிக்கிரமித்தல், சித்தப்பிரமை யுண்டாதல், அருகிலிருப்பவர்களை மருண்டுபார்த்தல், புருவநெரித்தல், ஆடல்பாடல், புத்தி தடுமாறல் வாய்பிதற்றல் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 3-வது தாந்திரிக சன்னிபாத சுர லட்சணம்.

இதனால் பிரலாபித்தல், தவித்தல், நாக்கு மிகவுங் கறுத்து முள்ளுப்போலிருத்தல், தாபம், அதிசாரபேதி, சுவாசம், தினவு, கண்கள் பருத்தலுடன் நீர்ப்பாய்ச்சல், சுரம் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 4-வது கர்நிக சன்னிபாத சுரலட்சணம்.

இதனால் கனவுகாணல், நாக்கு வெடித்தல், விக்கல், இருமல், நடுக்கல், கழுத்தின்கீழ் வீக்கம், காது மந்தம், அடிக்கடி எழுந்திருத்தல் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 5-வது பிரலாப சன்னிபாத சுரலட்சணம்.

இதனால் சரீரம் நடுக்கல், கனவுகாணல், தாகம், சரீரநோய், இருமல், விக்கல், அடிக்கடி எழுந்திருத்தல், அதிக சுரம் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 6-வது ஜிக்வாக சன்னிபாத சுரலட்சணம்.

இதனால் சுவாசம், தாபம், இருமல் நாக்குக் கறுத்து முள்ளுப் போலிருத்தல், வாய்திறக்கக் கூடாதிருத்தல், காது கேளாதிருத்தல், ஜாட்டியங் கடினமாகக் காணல் இக் குணங்களுண்டாகும்.

### 7-வது அந்தக சன்னிபாத சுரலட்சணம்.

இதனால் தாகம், பிரமை, தாபம், தலை நடுக்கல், கனவுகாணல், வாந்தி, விக்கல், சுரம், என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 8-வது ருக்த்தாக சன்னிபாத சுர லட்சணம்.

இதனால் தாபம், கனவு, சித்தவிப்பிரமை, நெஞ்சுநோய், கிறுகிறுப்பு, தாகம், உதடுலர்தல், இருமல், தேகமெங்குங் குத்தல், நடுக்கல், வியர்வை, கூச்சலிடுதல், கழுத்திலும், நெற்றியிலும், வியர்வை என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 9-வது சீதாங்க சன்னிபாத சுரலட்சணம்.

இதனால் தேகமெங்குங் குளிர்ச்சி, இருமல், தாகம், விக்கல், தேக நோய், வாந்தி, தாபம், மூர்ச்சை, அதிசாரபேதி, சரீர நடுக்கல் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 10-வது கண்டகுப்ஜ சன்னிபாத சுரலட்சணம்.

இதனால் பிரமை, தாபம், தலைசுற்றல், கழுத்து நரம்புகள் வில்லைப்போல வளைந்து இழுத்தல், புலம்பல், பயப்படுதல், எழுந்திருத்தல், மூர்ச்சை, தேகவேதனை, இருமல், விக்கல், ஈனத்தொனி, தலைநோய் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 11-வது பகன்நேத்திர சன்னிபாத சுரலட்சணம்.

இதனால் கண்கள் பருத்தலுடன் கண்ணீர் பெருக்கல், பார்வை தெரியாதிருத்தல், கனவுகாணல், பிரமை, நடுக்கல், என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 12-வது ரக்தேஷ்டி சன்னிபாத சுரலட்சணம்.

இதனால் நாவின் நடுவில் வெடித்தல், உதடு வெடித்து ரத்தங் காணல், உலரல், தீவிரசுரம், அசதி, மூர்ச்சை, விக்கல், அதிசாரம் கனவு இருமல், தலைதிருப்பல், நடுக்கல், நாக்குக் கறுத்து முள்ளுப் போலிருத்தல் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 13-வது அபின்னியாச சன்னிபாத சுரலட்சணம்.

இதனால் வாதபித்த சிலேஷ்மங்கள் தொந்தித்துச் சுரம், சுவாசம், முகத்தில் பளபளப்பு, நாவில் கருமை நிறம், மிகு நித்திரை சரீரமெங்கும் நோதல், தாபம், அசதி, தாகம், வியர்வை என்னுமிக் குணங்களுண்டாகும்.

இவ்வேழும் அசாத்திய சன்னிபாத சுரங்களெனப்படும்.

### சன்னிபாத சுரசிகிச்சை விபரம்.

மேற்சொல்லிய சன்னிபாத சுரங்கள் பதிமூன்றுக்கும், தாளத்தக்க தேகமானால், முதல் நாள் தொடங்கி ஒன்பது நாளைக்கு மேற்படாமல் லங்கனம் போடுவித்துப் பின்பு இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற மாத்திரைகளில் இசைந்த எதையாவது ஒன்றைத் தேன், இஞ்சிரசம், பஞ்சமூல கஷாயம், இவைகளில் இழைத்துக் காலையிலும், மாலையிலும் கொடுத்துவரும்போது மாத்திரைகளுக்கு அடியிற் சொல்லப்பட்டிருக்கிற கலிக்கத்தைக் கண்களுக்குத் தீட்டியும், நசியத்தை நாசிக்குப் பிழிந்தும் சிகிச்சை செய்வது மல்லாமல் தைலத்திற் குப்பின் சொல்லப்பட்டிருக்கிற திப்பிலிக் கஞ்சியை முதல்நாள் மாத்திரம் கொடுத்து மறுநாள் முதல் வாதசுர சிகிச்சை

யிற் சொல்லப்பட்டிருக்கிற புனற்பாகக்கஞ்சி முதலாயுள்ள பத்தியங்களைக் கொடுப்பித்து மருபத்தியங் கழிந்தபின்பு தைலஸ்நானஞ் செய்வித்துவரில் நிவர்த்தியாம். இனி மாத்திரை முதல் பத்தியம் வரையில் விபரங்கூறுவாம். அவைகளை முறையே இதனடியிற்காண்க.

## சன்னி வாதாங்குச மாத்திரை விபரம்.

கெந்தகம், ரசம், அரிதாரம், நாபி, பாட்சிகம், பொன்மாட்சிகம், தாம்பிர பஸ்பம், அபிரக பஸ்பம், சத்திச்சாரம், சங்கு பஸ்பம், முடிதாரம், எவாசாரம், கடுக்காய்ப்பூ, பெருங்காயம், வசப்பு, பேய்ப்புடல், பொன் முசுட்டைவேர், கடுக்காய்த் தோல், சுக்கு, கஞ்சா, நிலப்பனங்கிழங்கு, வேப்பம்பிசின் என்னும் தினுசுகள் இருபத்திரண்டும் வகைஒன்றுக்குப் பலம் ஒன்றாகநிறுத்துச் சுத்திசெய்யத் தக்கதுகளைத் தனித்தனியே சுத்திசெய்து கல்வத்திலிட்டு அத்துடன் பஸ்பங்களையும் சேர்த்து மாதுளம்பழம், இலுமிச்சம்பழம் இவ்விரண்டின் ரசங்களையும் தனித்தனியேவிட்டு ஒவ்வொரு நாள் அரைத்துக் சடலைப்பிரமாணமான மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு சிகிச்சையிற் சொல்லியபடி கொடுத்துவரில் நிவர்த்தியாம்.

## பூபதி மாத்திரை விபரம்.

ரசபஸ்பம், தாம்பிரபஸ்பம், நாபி இம் மூன்றும் வகையொன்றுக்குப் பலம் காலும் கெந்தசமும், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த் தோல், நெல்லிக்காய், தானிக்காய் இவ்வேழும் வகையொன்றுக்குப் பலம்அரையாகநிறுத்துச்சுத்திசெய்து கல்வத்திலிட்டுத் தழுதாழை, கண்டங்காரி, நொச்சில், பேய்த்தும்பை, சித்திரமூலம், ஆடுதின்னாப்பாளை என்னும் வேர்வகைகள் ஆறும் சமமாகச்சேர்த்துச் சலத்திலிட்டுக் காய்ச்சிய கஷாயத்தைவிட்டு இருபது நாள் வரையில் அரைத்து, உளுந்துப்பிரமாணமானமாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு சிகிச்சையிற் சொல்லியபடி உபயோகித்துக் கொள்ளவும்.

## உருத்திர விஷக்கலிக்க விபரம்.

குப்பைமேனித்தோல்வராகனிடைமூன்றுவெந்ததலைமண்டை ஓடு வராகனிடை ஒன்றேகால் தாப்பரத்தூள் வராகனிடை ஒன்றுக நிறுத்து கல்வத்திலிட்டுப் புளியிலை ரசம்விட்டு அரைத்துப் பயறுப்

பிரமாணமான மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு ஜன்னிகளுக்கு அகத்திப் பழுப்புச் சாற்றிலும் விஷங்களுக்குச்சா!ணையிலரசத்திலும்,பேய்களுக்குக்கரிசலாங்கண்ணிரசத்திலும், மூயல்வலிக்குப் பழச்சாற்றிலும், காமாலைக்கு இளநீரிலும், பயித்தியத்திற்குத் தும்பையிலை ரசத்திலும் இழைத்துக் கண்ணிலிட நிவிர்த்தியாம்.

## பாலசூரியோதய வஞ்சன விபரம்.

சயிந்தவலவணம், மகிழம்வித்து, மிளகு இவைகளைச் சமமாகச் சேர்த்துக்கோமயத்தினலரைத்து மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு சிகிச்சையிற் சொல்லியபடி கோமயத்தினல் இழைத்துக் கண்ணில் தீட்டவும்.

## பயிர வாஞ்சன விபரம்.

காயம், சயிந்தவலவணம், திப்பிலி இவைகளைப் பசு நெய்யினலரைத்து வைத்துக்கொண்டு கண்ணிலிடவும்.

## நசிய விபரம்.

தேத்தான் பிஞ்சுகளை இடித்துப் பிழிந்த ரசத்தில் கந்தைத் துணிகளை நனைத்து உலர்த்தி வைத்துக்கொண்டு வேண்டும்போது அமிர்தப் பாலில் கசக்கி நாசியில் பிழியவும்.

## ஆக்கிராண விபரம்.

சுண்டைவேர், சித்திரமூலம், அழிஞ்சில்வேர், கண்டங்கத்தரி வேர், தூதுளைவேர், மிளகரணைவேர், ஆடாதோடைவேர், குப்பைமேனிவேர், வெள்ளைச்சாரணைவேர், தும்பைவேர் என்னும் வேர் வகைகள் பத்தும், வகையொன்றுக்கு விராகனிடை ஒன்ருகவும், எருக்கிலைச்சுணை, சமுத்திராப்பழம், சுக்கு, அக்கிராகாரம், ஓமம், அதிவிடையம், அரத்தை, காயம், திப்பிலி, திப்பிலிமூலம், தேசாவாரம், கஸ்தூரிமஞ்சள், வால்மிளகு, கடல்நுரை, கடுகு, குராசானி ஓமம், கடகரோகணி, கருஞ்சீரகம், பேரரத்தை, வசம்பு, வெட்பாலைஅரிசி, சாம்பிராணி என்னும் தினுசுகள் இருபத்திரண்டும் வகையொன்றுக்கு விராகனிடை ஒன்ருகவும், நிறுத்து வெய்யிலில் உலர்த்தி வஸ்திரகாயஞ்செய்த தூளை வெள்ளாட்டுப் பாலிலிட்டுப் பிசறி உலர்த்திப்பேய்ச்சுரக்குடுக்கையில்வைத்துக்கொண்டு சுவிக்கமும் நசியமும் செய்து வேண்டியமட்டில் காகிதத்திற் கொட்டிச் சுற்றிக் கொளுத்தி அவித்துப் புகை பிடிக்கச் சொல்லவும்.

## அரக்கு சந்தனாதித்தைல விபரம்.

அமுக்கிராவேர், சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர். கொம்பரக்கு என்னும் இந் நான்கையும் இடித்த பொடிகள் வகையொன்றுக்கு நாழியாக அளந்து பதக்கு ஜலத்திலிட்டு நாலில் ஒன்றாக வடித்த கஷாயத்துடன் கடைந்து நுரை எடுத்துக் குழம்பு மோர் நாழியும் நல்லெண்ணெய் நாழியும் சேர்த்து அதில் நன்னாரிவேர், அரத்தை, கோஷ்டம், அதிமதுரம், சதகுப்பை, கடகரோகணி, கிச்சிலிக்கிழங்கு, தேவதாரக்கட்டை, கப்புமஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், பெருங்குரும்பை, அமுக்கிராவேர், மஞ்சிஷ்டி, சந்தனக்கட்டை, சிறுநாகப்பூ என்னும் கற்கதிரவியம் பதினாறும் வகையொன்றுக்கு விராகனிடை ஒன்றாக நிறுத்து மேற்படி மோர் விட்டு அரைத்துக் கரைத்து மூன்றுநாள் வரையில் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு ஸ்நானஞ் செய்வித்து மேலுக்குப் பூசத்தீரும்.

## திப்பிலிக்கஞ்சி விபரம்.

திப்பிலி அரிசியுள்ளதாய்ப் பொறுக்கிச் சுத்தஜலம் தெளித்து பிசறி வெய்யிலில் சற்றுநேரம் வைத்து உரலிலிட்டுக்குத்தி அரிசியை வேறுபடுத்தி யந்திரத்திலிட்டு நொய்யாக்கி ஒரு பாத்திரத்தில் கொஞ்சஞ் சேர்த்துச் சலம்விட்டு வேகவைத்துக் கஞ்சிப்பதத்திற் காய்ச்சி உப்பிட்டுக் கொடுக்கவும்.

---

## தோஷ சுரபேதம்.

---

### 1-வது அபத்திய தோஷ லட்சணம்

இதனால் பிதற்றல், அயர்வு, மூர்ச்சை, பிரமை, தாகம், கனவு காணல், மார்பு நோய் என்னுமிக்குணங்களுண்டாகும்.

### 2-வது ஸ்திரீ சங்கம தோஷ லட்சணம்

இதனால் சரீரநோய், நடுக்கல், மார்பிலெரிச்சல், கனவு காணல், அடிக்கடி எழுந்திருத்தல், பிரமை, கால்கை குளிர்ச்சி என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 3-வது விஷமதோஷ லட்சணம்.

இதனால் சுரம், தாபம், தாகம், நாடி குடிலமாக நடத்தல், அதிகதாகம், வியர்வை, மூர்ச்சை என்னுமிக் குணங்களுண்டாகும்.

## 4-வது விஷமசீதள தோஷ லட்சணம்.

இதனால் ஒரு தினத்துக்குள் இரண்டு மூன்று நாலுதரங் குளிர் கண்டு சுரம் பிறந்து தாகம், மோகம், தலைநோய், நாவில் முள்ளுப் போலிருத்தல் என்னுமிக் குணங்களுண்டாகும்.

## 5-வது ரக்தஜிக்வத் தோஷ லட்சணம்.

இதனால் நாக்குச் சிவந்து முள்ளுப்போலிருத்தல், சுரம், தாகம் என்னுமிக் குணங்களுண்டாகும்.

## 6-வது பீதஜிங்வக தோஷ லட்சணம்.

இதனால் நாவறண்டு மஞ்சள் நிறமாகப் பிளந்து திரவமில்லாமல் முள்ளுப்போலிருத்தல் சுரம், பிரமை, வியர்வை, மூர்ச்சை, இருமல், ஈனத்தொனி என்னுமிக் குணங்களுண்டாகும்.

## 7-வது கிருஷ்ணஜிங்வக தோஷ லட்சணம்.

இதனால் நாவு தடித்துக்கறுத்துமுள்ளுப்போலிருத்தல், அடிக்கடி எழுந்திருத்தல், பிரமை, உளறல், சுவாசம், தினவு, வியர்வை தாகம் என்னுமிக் குணங்களுண்டாகும்.

## தோஷ சுர சிகிச்சை விபரம்.

இந்த சப்த தோஷங்களையும் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிறகண்டாவிழ்தங்களில் இசைந்த எதையாவது ஒன்றைக் கொடுத்துவசப்படுத்திக்கொண்ட பின்பு சன்னிபாத சுர சிகிச்சைகள் யாவும் செய்து நிவர்த்திக்க வேண்டும்.

## கண்டாவிழ்த விபரம்.

கஸ்தூரி, குங்குமப்பூ கோரோசனம், என்னும் இம்மூன்றும் வகையொன்றுக்கு வராகனிடை அரைக்காலும், ரசசெந்தூரம், அபிரகசெந்தூரம், ஜாதிலிங்கசெந்தூரம் இம்மூன்றும் வகையொன்றுக்கு வராகனிடை ஒன்றாக நிறுத்துக் கல்வத்திலிட்டு அத்துடன் அதிமதுரம், அக்கிராகாரம், கோஷ்டம், ஏலம், லவங்கம், மிளகு, சுக்கு, திப்பிலி, வாய்விளங்கம் இவ்வொன்பதும் வகையொன்றுக்கு வராகனிடை ஒன்றாக நிறுத்து வறுத்துப் பொடி செய்து வஸ்திரகாயஞ் செய்து பின்பு மயிலிறகு, வசம்பு, பட்டுத்துணி இவற்றைக் கொளுத்தி சாம்பலாக்கிக் கூடச் சேர்த்து எல்லாம் ஒன்றுபடக் கலந்து அரைத்து ருத்திராக்ஷம், மான் கொம்பு, யானைத் தந்தம்

இவைகளை அமுதப்பால்விட்டு இழைத்துத் தேன்விட்டுக் குழைத்து ஜாமத்திற் கொருதரம் நாவில் தடவிவரவும்.

## வேறொருவிதம்.

மயிலிறகு பஸ்பம், குங்குமப்பூ, கோரோசனம், பச்சைக்கருப் பூரம், திரியாபாகு, யானைத்திப்பிலி, அக்கிராகாரப், கோஷ்டம், அதிமதுரம், ஏலம், லவங்கம், முத்து, பவளம், ருத்திராக்ஷம், வெள்ளி, பொன், யானைத்தந்தம், கோரோபாபஸ்பம் இவைகளில் வறுக்கத்தக்க வஸ்துக்களை வறுத்துக் கல்வத்திலிட்டு வறுக்கத் தகாத வஸ்துக்களையும் கூடச்சேர்த்துப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து தேன்விட்டுக் குழைத்து நாவில் தடவிவரவும்.

---

## சன்னிபாத விஷம சுரம்.

---

### 1-வது உதய சுர லட்சணம்.

இதனால் தேகம் துவைத்ததுபோலிருத்தல் கால்கைகள் சில்லி டல் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 2-வது மத்தியான சுர லட்சணம்.

இதனால் மிகு சீதளம் கண்டத்திலும், முகத்திலும், வியர்வை, மிகுபேதி என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 3-வது மாலை சுர லட்சணம்.

இதனால் விக்கல், தாகம், குளிர், வாந்தி, அரோசகம், வாய் கசத்தல் என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 4-வது நிசிசுர லட்சணம்.

இதனால் குளிர் சரீரம் சுற்றுவதுபோலிருத்தல், காதிரைச்சல், நித்திரையின்மை என்னுமிக் குணங்களுண்டாகும்.

### 5-வது திரிகால சுர லட்சணம்.

இதனால் முக்கால் சுரங்களின் குணங்கள் யாவும் பிறக்கும்

### 6-வது ஏகாகிக சுர லட்சணம்.

இதனால் சுரகுணங்கள் யாவும் பிறந்து இரவும் பகலும் இடைவிடாது ஒரு நாள் சுரங்காய்ந்து மறுநாள் முழுதும் விட்டிருந்து மறுபடியும் அப்படியே காயும்.

### 7-வது துவியாகிக சுர லட்சணம்.

இதனால் சுரகுணங்கள் யாவும் பிறந்து இரண்டுநாள் வரையில் விடாமல் காய்ந்து இரண்டு நாள் முழுதும் விட்டிருந்து மறுபடியும் அப்படியே காயும்.

### 8-வது திரியாகிய சுரலட்சணம்.

இதனால் சுரகுணங்கள் யாவும் பிறந்து மூன்று நாள் வரையில் விடாமல் காய்ந்து மூன்றுநாள் முழுதும் விட்டிருந்து மறுபடியும் அப்படியே காயும்.

### 9-வது சதுர்த்திக சுரலட்சணம்.

இதனால் சுரகுணங்கள் யாவும் பிறந்து நாலு நாள் வரையில் விடாமல் காய்ந்து நாலுநாள் விட்டிருந்து மறுபடியும் காயும்.

### 10-வது பஞ்சாகிக சுரலட்சணம்.

இதனால் சுரகுணங்கள் யாவும் பிறந்து ஐந்துநாள் வரையில் விடாமல் காய்ந்து ஐந்துநாள் விட்டிருந்து மறுபடியும் காயும்.

### 11-வது பக்ஷ சுரலட்சணம்.

இதனால் சுரகுணங்கள் யாவும் பிறந்து பக்ஷம் என்கிற பதினைந்துநாள் வரையில் விடாமற் காய்ந்து பதினைந்துநாள் முழுதும் விட்டிருந்து மறுபடியும் அப்படியே காயும்.

### 12-வது மாத சுரலட்சணம்.

இதனால் சுரகுணங்கள் யாவும்பிறந்து மாதம் என்கிற முப்பது நாள் வரையில் விடாமல் காய்ந்து முப்பதுநாள் முழுதும் விட்டிருந்து மறுபடியும் அப்படியே காயும்.

### 13-வது அயன சுரலட்சணம்,

இதனால் சுரகுணங்கள் யாவும்பிறந்து அயனம் என்கிற ஆறு மாதம் வரையில் விடாமல் காய்ந்து ஆறுமாதம் முழுதும் விட்டிருந்து மறுபடியும் அப்படியே காயும்.

## 14-வது வருஷ சுரலட்சணம்.

இதனுல் சுரகுணங்கள் யாவும் பிறந்து வருஷம் என்கிற முந்நூற்றறுபது நாள் வரையில் காயும்.

## 15-வது புராண சுரலட்சணம்.

இதனுல் சுரகுணங்கள் யாவும் பிறந்து நெடுநாள் வரையில் பழமையாகக் காயும்.

## சன்னிபாத விஷம சுரசிகிச்சை விபரம்.

மேற்சொல்லிய சன்னிபாத விஷமசுரங்கள் பதினேந்துக்கும் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற கஷாயம் கிருதம் இவைகளில் அதன்பின் சொல்லப்பட்டிருக்கிற மாத்திரைகளிலிசைந்த எதையாவது ஒன்றை இழைத்துக் காலையிலும், மாலையிலும் கொடுத்துப் புளியில்லாத பத்தியமாவது புனற்பாகமாவது கொடுத்துப் பத்திய மறுபத்தியங் கழித்துக் கடல்நுரை தைலத்தினுல் ஸ்நானஞ் செய்வித்துவரில் நிவர்த்தியாம். இனிமேற் சொல்லிய கஷாயம் கிருதம், மாத்திரை தைலமுதலானவைகளுக்கு விபரம் இதனடியிற் காண்க:-

## உதயசுர கஷாய விபரம்.

வில்வவேர், நன்னுரிவேர், கோரைக்கிழங்கு, சுக்கு, திப்பிலி, மிளகு, கொத்துமல்லிவிரை, செந்தொட்டிவேர், பற்படகம்பேய்ப்புடல் இவை பத்தும் சமமாகச் சேர்த்து இடித்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

## மத்தியான சுரகஷாய விபரம்.

சிந்தில்தண்டு, ஆடாதோடைவேர், கோரைக்கிழங்கு, கண்டங்காரிவேர், செவ்வியம், பேராமுட்டிவேர், பற்படகம், சுக்கு, திப்பிலி, மிளகு, கொத்துமல்லிவிரை, பேய்ப்புடல், திப்பிலிமூலம் என்னுந்தினுசுகள் பதின்மூன்றும் மேற்சொல்லியபடி சேர்த்துக்கஷாயமிட்டுக் கொடுக்கத் தீரும்.

## மாலைசுர கஷாய விபரம்.

மலைதாங்கிவேர், கண்டங்காரிவேர், சிறுவழுதலைவேர், ஆடாதோடைவேர் இவைகளுடன் சுக்கு, திப்பிலி, பேய்ப்புடல் இம்மூன்றையும் சலத்திற் சேர்த்துக் கஷாயமிட்டுக் கொடுக்கத் தீரும்.

## நிசிசுர கஷாய விபரம்.

இலுப்பைப்பூ, கொடிமுந்திரிப்பழம், பெருங்குமிழ்வேர், அதிமதுரம், நன்னாரிவேர், தாமரைக்கொடி, இருவேலிவேர், கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சொறிவேர், சுக்கு, நெல்லிப்பருப்பு இவைகள் பதினொன்றுஞ் சமமாகச்சேர்த்து முன்சொன்னபடி ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

## திரிகாலசுர கஷாய விபரம்.

இதற்குக் காலை மாலை மத்தியானம் ஆகிய முக்கால் சுரங்களுக்கும் சொல்லப்பட்டிருக்கிற கஷாயங்களில் உள்ள தினுசுகளைச் சேர்த்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

## ஏகாகிசுர கஷாய விபரம்.

இதற்குக் காலைமுதல் நிசிவரையிலுள்ள சுர கஷாயங்களிற் சொல்லப்பட்டிருக்கிற தினுசுகளைச் சேர்த்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக்கொடுக்கத் தீரும்.

## துவியாகிகசுர கஷாய விபரம்.

இதற்கு பற்படகம், பேய்ப்புடல், அதிமதுரம், சீந்தில்தண்டு, அதன் வேர், கோவைவேர், கோரைக்கிழங்கு, சுக்கு, திப்பிலி இவைகளைச் சமமாகச்சேர்த்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

## திரியாகிகசுர கஷாய விபரம்.

சீந்தில்தண்டு, கோரைக்கிழங்கு, பேய்ப்புடல், பற்படகம், சுக்கு, இவைகள் ஐந்தும் மேற்சொல்லியபடி ஜலத்திலிட்டுக் காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

## சாதுர்த்திகசுர கஷாய விபரம்.

வேப்பம்பட்டை, சுக்கு, திப்பிலி, சித்தரத்தை இவைகளைச் சமமாகச் சேர்த்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுத்துவரத் தீரும்.

## பஞ்சாகிக சுர கஷாய விபரம்.

இதற்கு மேற்சொல்லிய ஏகாதிகம் முதல் சாதுர்த்திகம் வரையிலுள்ள சுரகஷாயங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிற தினுசுகளைச் சேர்த்து ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுத்துவரத்தீரும்.

## பக்ஷசுர கஷாய விபரம்.

இதற்குப் பித்த சிலேஷ்ம சுரத்திற்குச் சொல்லப்பட்டிக்கிற கஷாயங்களில் விலாமிச்சவேர் கஷாயத்தைக் கொடுக்கத்திரும்.

### மாதசுர கஷாய விபரம்.

வெங்காயம், (வில்வம், ஆவரை, நிலவிளா) இம்மூன்றின் இலைகளையும் சமமாகச் சேர்த்துப் பொடியாக அரிந்து சட்டியிலிட்டுச் சற்று வறுத்து ஜலம்விட்டுக் காய்ச்சிக் கொடுக்கத்திரும்.

### அயனசுரம், வருஷசுரம், புராணசுரம், இவைகளின் கஷாய விபரம்.

புளி, வேம்பு, நாரத்தை, நெல்லி, தகரை இவைகளின் ஈர்க்குகளுடன், வல்லாரை, சிறுபுள்ளடி, மணித்தக்காளி, அகத்தி, அம்மான் பச்சரிசி, சீந்தில்தண்டு, கோரைக்கிழங்கு, பழம்பாசி, வெங்காயம், இவைகளில் அரியத்தக்கவைகளைச் சிறுக அரிந்து சட்டியிலிட்டுச் சற்று வறுத்து மிளகு பலம் (கால்) உடைத்துப்போட்டு ஜலம்விட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

### சுராங்குச மாத்திரை விபரம்,

ரசம், கஞ்சா, வசுவாசு இம்மூன்றையும் சமமாக நிறுத்துச் சுத்திசெய்து கல்வத்திலிட்டுத் தூதுவளையிலைரசம்விட்டு அரைத்துத் துவரைப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து வேளைக்கு ஒவ்வொரு மாத்திரைவீதம் சிகிச்சையிற் சொல்லியபடி கஷாயங்களிலிழைத்து உபயோகிக்கவும்.

### சுர ராமபாண மாத்திரை விபரம்.

ரசம், வெள்ளைப்பாஷாணம், இவ்விரண்டும் வகையொன்றுக்கு விராகனிடை ஒன்றாகவும் மிளகு 1பலம் சேர்த்து நிறுத்துச் சுத்திசெய்து கல்வத்திலிட்டு ரசம்விட்டு எட்டு ஜாமம் அரைத்துச் சிறுபயறு பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு சிகிச்சையிற் சொல்லியபடி கஷாயங்களி லிழைத்து உபயோகித்துக்கொள்ளவும்.

### கடல்நுரைத் தைல விபரம்.

குழம்புமோர் படி ஆறும், நல்லெண்ணெய் படி மூன்றும் ஒரு பாத்திரத்தில் சேர்த்து அதில் கடல்நுரை, கோஷ்டம், மஞ்சள், சந்தனக்கட்டை, பொன்மெழுகு, விலாமிச்சம்வேர், சதகுப்பை, கோரைக்கிழங்கு, மஞ்சிட்டி, இலுப்பைப்பூ, கடகரோகணி, கம்பிப்பிசின், பெருங்குரும்பை, வெட்டிவேர், அவுரிவேர், சுக்கு இவை

பதினாறும், தினுசு ஒன்றுக்கு ஒவ்வொரு காசிடையாக நிறுத்து மேற்படி மோரால் அரைத்துக் கரைத்துக் காய்ச்சி உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூசி வரில் ஷெ சுரங்களும் வறட்சியும் வாய் நீரும் சகல சுரங்களும் தீரும்.

### சீதா செங்கழுநீர் நெய் விபரம்.

சீதாசெங்கழுநீர் கிழங்குச்சாறு நாழியும் நல்லெண்ணெய்நாழியும், சேர்த்து அதில் வெட்டிவேர், கடகரோகணி, சந்தனக்கட்டை, அதிமதுரம் இந்நான்கும் மும்மூன்று களஞ்சாக நிறுத்து மேற்படி ரசத்தினால் அரைத்துக் கரைத்துக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் தடவிவரத் தீரும்.

---

## குழந்தைகளுக்கு.

## காட்டுத்தழைகளும், வீட்டுச்சரக்குகளும்.

### 1. குழந்தைகளுக்குச் சகல தோஷங்கள் சீர்த்தட்டுகளுக்கு.

மஞ்சள், வசம்பு, வெள்ளைப்பூண்டு, அரிசி, சுக்கு, ஓமம் வகைக்குக் கால்துட்டு எடை, இவற்றை இளவறுப்பாய் வறுத்துப் பொடி செய்து, அதோடு சதாப்பிலை, தைவேளைஇலை, கொஞ்சம்சேர்த்துக் குட்டிவிளா (பிள்ளைவிளாத்தி) இலையைச் சிறிது ஜலம்விட்டு இடித்துச் சாறு எடுத்து, அந்தச் சாற்றால் அரைத்து, ஒரே நீண்ட மாத்திரையாய் உருட்டிக் காயவைத்துக் கொண்டு, அதில் மிளகளவு, அமிர்தப் பாலில் உரைத்து ஓர் பாலாடை வீதம் புகட்டிவரச் சகல தோஷங்களும் நீங்கும்.

### 2. பிரளிக்கும், பல்முளைப்பதால் உண்டாகும் வயிற்றோட்டத்துக்கும்.

பெருந்தும்பை, சிறுதும்பை, கவுதும்பை வகைக்கு இலை 7, பிரண்டை இலை 3, வேலிப்பருத்தி இலை 5, இவற்றோடு கொஞ்சம் பொடுதலை இலையையும் சேர்த்துச் சட்டியிலிட்டு வதக்கி, அதில் கால்துட்டு எடை ஓமம் போட்டுப் பொரியும்போது, அரைக்கால் படி ஜலம் விட்டுக் கஷாயஞ் செய்து, அரைமாகாணிப் படியாக

வற்றவைத்துக் கொண்டு, அதில் ஒன்று (அல்லது) பாலடை அளவு கஷாயம் எடுத்து வெந்தயப் பருமன் பெருங்காயம் உரைத்துப் புகட்டவும். காலை மாலை கொடுக்கப் பிரளி, வயிற்றோட்டம் தீரும். வரவும்.

### 3. அடிக்கடி மலங்கழிந்து கைகால் வீக்கங் காண்பதற்கு.

அஞ்சுகிராம்பு எடுத்து கொஞ்சம் ஜலத்திலிட்டுக் கஷாயஞ் செய்து, ஒன்று (அல்லது) இரண்டு பாலடை வீதம் கஷாயத்தைக் கொடுத்து வரவும், மூன்றுவேளை காலை மாலை சுகந்தரும்.

### 4. உளைச்சல், இரத்தக்கடுப்பு, அண்டிதள்ளுதல் கைப்புண்ணுக்கு.

சுத்தமான கோரோசனையை அமிர்தப் பாலில் சிறிது உரைத்துக் கொடுத்துவரக் குணமாகும். அல்லது கொஞ்சம் வில்வப் பழச்சதையோடு கொஞ்சம் ஏலம் சீனி சேர்த்துத் துணியிற் கட்டிப் பிழிந்து ஒரு பாலடை வீதம் புகட்டிவரக் குணமாகும்.

### 5. ஜன்னி, கைகால் இழுப்புக்கு.

கால்துட்டு எடை இஞ்சி, வெள்ளைப்பூண்டு அரிசி 5, வெற்றிலை 5, இவற்றை இடித்துச் சாறு எடுத்து, இரும்புக் கம்பியைச் சுட வைத்த கம்பியில், முன் சொன்னபிரகாரம் சுரசஞ் செய்த மூன்று துளிவேப்பெண்ணெயை மேற்படி சாற்றிற் கலக்கி ஒரு பாலடை புகட்ட இழுப்பு ஜன்னிமாறும்.

### 6. இளநீர்க் கட்டிக்கு.

வசம்பு, சிறுதும்பையிலை, நெருஞ்சில் இலை, ஈருள்ளி இவற்றில் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து, அவற்றோடு சிறுபயறு அளவு உப்புச் சேர்ந்து, நன்றாய் அரைத்து இரண்டு பாலடை அளவு வெந்நீரிற் கலக்கிக் கொடுக்கக் குணமாகும்.

### 7. வாந்திக்கு.

குட்டித்தக்காளி இலையைத் தட்டிச் சாறு எடுத்து, அதைக் காய்ச்சி அதில்தெளிந்தநீரை எடுத்துக் கோரோசனை சிறிதுஉரைத்துக் கொடுக்க வாந்தி அருவருப்பு முதலியன தீரும்.

### 8. வேறுமுறை வாந்திக்கு.

சுக்கு, மல்லி, வில்வவேர், ஏலம், வகைக்குக் கால்துட்டு எடை யாக எடுத்துக் கஷாயமிட்டு ஒரு பாலடையில் இரண்டு துளி சுயம் பான தேன்விட்டுக் கொடுக்கத் தீரும்.

### 9. இருமல் வாய்ப்புண் ணுக்கு.

சுத்தமான சிற்றுமணக்கு எண்ணெயில் ஒரு தேயிலைக் கரண்டி அளவு எடுத்து அதில் சுயம்பானதேன் 3 துளி விட்டுக் கொடுக்க மிகுந்த குணம் கொடுக்கும்.

### 10. கால் கரப்பன் நீர்களுக்கு

முற்றின பூவரசம்பட்டைத் தூளைத் தேங்காய் எண்ணெயிற் கலந்து வெயிலில் வைத்துப் புண்களில் தடவிவர மாறும்.

### 11. கண் அமரத்துக்கு.

கடுக்காய்த் தோட்டைத் தட்டி, ஒரு வெள்ளைத் துணியில் முடிந்து, ஆமணக்கெண்ணெயில் ஊறவைத்துக் கண்களில் துளி விட்டுவரக் குணந்தரும்.

### 12. பிள்ளைகள் களை, வறட்சி, மலச்சிக்கலுக்கு.

ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, வால்மிளகு, வகைக்கு, கால்துட்டு எடை எடுத்து இடித்துத் தூள்செய்து, அந்த எடைக்குச் சீனுக்கற்கண்டு பொடித்து ஷை தூளோடு சேர்த்து அரைக்கால்படி சிற்றுமணக்கு எண்ணெயிற் போட்டு 108 நாழி கை வெயிலில் வைத்து எடுத்துக்கொண்டு பிள்ளைகள் நித்திரைக் குப் போகும்போது ஒரு தேயிலைக் கரண்டி அளவு சாப்பிட்டுவர, வறட்சிநீங்கித் தேகம் தழைக்கும்.

### 13 அக்கிகள் கொப்பளங்களுக்கு.

ஆவரங்கொழுந்து, அல்லி இலை இவற்றைச் சமம் எடுத்து அரிசிகளைந்த மண்டியில் அரைத்துப்பூச மாறும்.

### 14. பிள்ளைகள் சுரங்கண்டிருக்கும்போது உண்டாகிற இளைப்புக்கு.

சுக்கு, பூடு, மிளகு, கருஞ்சீரகம் வகைக்குக் கொஞ்சம் கொஞ் சம் ஓர் நிதானமாய் எடுத்து, ஜலத்தில் கஷாயமிட்டு ஒன்று (அல் லது) இரண்டு பாலடைவீதம் புகட்டிவரத் தீரும்.

## 15. பிள்ளைகள் ஊது வீக்கத்துக்கு.

சித்திரப் பாலாடைச்சாறு ஒரு பாலடை எடுத்து அதில் சங்கைச் சிறிது உரைத்துக் கொடுக்கச் சுகந்தரும்.

---

## பற்பொடி முறை விபரம்.

பல் அசைவு, பல்லரணை, தந்தசூலை, ஈறு தேய்தல், இரத்தம் வடிதல், வாய்நாற்றம், மழுமழுப்பு, வாய் நீர் ஊறல் இவற்றிற்கு

சருவேலம்பட்டை, மருதம்பட்டை, இவற்றைக் காயவைத்து இடித்து வடிகொண்ட தூள் வகைக்கு 4 பலம், கடுக்காய், கிராம்பு, சன்னலவங்கப்பட்டை, பாக்கு இவற்றின் தூள் வகைக்கு கால் பலம், இந்துப்புத்தூள் ஒருதுட்டு எடை, இவற்றையெல்லாம் ஒன்ருகச் சேர்த்து, நன்ருய் விரவி சீசாவில் வைத்துக்கொண்டு பல் தேய்த்துவரக் குணந்தரும்.

## தாதுபுஷ்டி லேகியம்.

தாதுமிகுந்து விருத்தியாகி தேகத்துக்கு மிகுந்த பலத்தையும் உற்சாகத்தையும், இரத்த விருத்தியையும் உண்டாக்கும். வறட்சி நீங்கி தேகந் தழைக்கும்.

ஒருபடி பசுவின் பாலில் 4 பலம் கோதுமைமாவையும், 20 பலம் சீனியையும் சேர்த்துக் காய்ச்சிப், பாகுபதத்தில் நீர்முள்ளி விதை, நிலப்பனைவேர் வகைக்குப் பலம் 4, கருவேலம்பிசின், முருங்கைப் பிசின் வகைக்குப் பலம் 2, சந்தனக்கட்டை, ஜாதிக்காய், கிராம்பு வகைக்கு அரைதுட்டு எடை திப்பிலி அரைப்பலம் இவற்றை எல்லாம் இடித்துத் துணியில் வடிகொண்ட தூளை அந்தப் பாகில்தூவி, நெய் படி அரை, தேன்படி கால் இவற்றைவிட்டுக் கிண்டி, மெழுகு பதத்தில் இறக்கி ஆற்றி, லேகியத்தோடு 4 பலம் பேரிச்சம் பழத்தைச் சேர்த்துப் பிசைந்து வைத்துக்கொண்டு காலை, மாலை கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுக்கொண்டுவரப் பூரணமாய்த்தாதுமிகும்.

---

# அனுபவ வைத்திய முறைகள்.

## 1. தாம்பூலத்தால் மயக்கம் நெஞ்சடைப்பு.

வெற்றிலை பாக்கு இவற்றின் புழுவால் மயக்கமாகி நெஞ் சடைத்தால்; ஈருள்ளி ஒன்றைமென்று தின்கவும், (அல்லது) சாற் றைப்பிழிந்து உள்ளுக்குக் கொடுக்கவும். உடனே மயக்கந் தீரும்.

## 2. சடுதியாய் உண்டாகும் பிராண வாய்வுக்கு.

சுயம்பானமாகாணிப்படி தேனில் மாகாணிப்படி குளிர்ந்த ஜலம் கலந்து உள்ளுக்குக் கொடுக்க, உடனே வாய்வு கலைந்து ஆச் சரியமான பிரகாசமாய்ச் சுகந்தரும். அவசியமானல் பின்னும் ஒரு பொழுது சாப்பிடவும்.

## 3. இரத்தவாந்தி, இரத்தக்காசத்துக்கு.

ஒரு இலுமிச்சம்பழச் சாற்றில், பொரித்த சீனக்காரத்தூள் அரைத்துட்டு எடை கலந்து கொடுக்க, இரத்தவாந்தி நீங்கிச் சுகம் உண்டாகும். இரண்டு அல்லது மூன்று முறை செய்யவும், கார மான வஸ்துக்களை நீக்கவும்.

## 4. இரத்த பேதிக்கு.

அரைத்துட்டு எடை சிறு நாகப்பூவைக் கால்துட்டு எடை ஏலத்தோடு பசுவின்பாலில் அரைத்து காலை மாலை மூன்று பொழுது கொடுக்கவும். அடிவயிற்றில் ஆமணக்கு எண்ணெய்தடவிச் சித்த கத்தியிலையை அவித்து அடிவயிற்றில் ஒத்தணம் கொடுக்கத் தீரும். சவ்வரிசிக்கஞ்சி சாப்பிடுவது உத்தமம்.

## 5. வேறுமுறை இரத்த பேதிக்கு.

வடித்த கஞ்சிநீர் அரைக்கால்படியில், தேன் மாகாணிப்படி கலந்து கொடுக்க இரத்தபேதி நீங்கிச் சுகந்தரும்.

## 6. மலச்சிக்கலுக்கு.

நிலத்தில் படர்ந்திருக்கும் நிலவாகையைச் சமூலமும் நிழலில் உலர்த்தி இடித்துத் துணியில் வடிகொண்டதூள் 2-பலம், கடுக் காய்த்தூள் 1-பலம், முந்திரிகைப்பழவற்றல் 2-பலம், சர்க்கரை 2-பலம் இவற்றை நன்றாய் லேகியம்போல் இடித்துச்சேர்த்துக் கழற் சிக்காய்ப் பருமனாக உண்டைகள் உருட்டி அரைக்கால்படி ஆமணக்

கெண்ணெயில் போட்டுவைத்துக் கொண்டு, இரவில் சாப்பாட்டுக்கு மேல் நித்திரைக்குப் போகும்போது தினமும் ஒவ்வொரு உருண்டை சாப்பிட்டுவர மலச்சிக்கலால் உண்டாகும் சகலவித வாய்வுகள், கொடிய குன்மமூலக்கொதிப்பு, அஜீரணம், ஆசனக் கிருமிகள் மற்றும் வியாதிகளும் தீரும்.

## 7. வேறுமுறை மலச்சிக்கலுக்கு.

நாலுபலம் சிவதைவேர் பசுவின்பாலிற் போட்டுச் சுண்டக் காய்ந்தபின், சிவதைவேரை எடுத்துக் காயவைத்து இடித்துத் துணியில் வடிகொண்டு, அத்துடன் அரைப்பலம் ஏலத்தையும், வறுத்துத் தூள் செய்து சேர்த்து ஒருபலம் சீனியையுங் கலந்து வைத்துக் கொண்டு இருவிரல் கொண்ட (வெருகடி) தூளை வெந்நீரிற் கலந்து சாப்பிட மலபந்தம் நிவர்த்தியாகும்.

## 8, காலரா என்ற வாந்திபேதிக்கு ஓர் அருமையான கஷாயம்.

சட்டியை அடுப்பில் காயவைத்து, ஒருவிரல் நீளமுள்ள மஞ்சளைப் பொடித்து அந்தச் சட்டியில் போட்டுக் கருக்கி, அதைக் கொட்டிவிட்டு, பின்பு அதே சட்டியில் மஞ்சணத்தி இலை ஒரு பிடி அரிந்துபோட்டு அதையும் கருக்கிக் கொட்டிவிடவும். அப்புறம், அதே சட்டியில் 7-மிளகாய் வற்றலைப்போட்டுக் கருக்கிக் கொட்டிவிட்டுச் சுக்கு, மிளகு, ஓமம், காயம்,பூடு, இஞ்சிவகைக்கு ஒரு பலம் எடுத்து, அதேசட்டியில் தனித்தனியாக வறுத்துவைத்துக்கொண்டு மேற்படி சட்டியில் தேன்விட்டு அது பொங்கும்போது, மேற்கண்ட மருந்துகளை ஒன்றுய்ச் சேர்த்து அதிலிட்டு ஒருபடி ஜலம் விட்டு அரைக்கால்படியாக வற்றவைத்து, கஷாயத்தை இரண்டு பாகமாக்கி ஒவ்வொரு பாகத்திற்கும் அரை டிராம் பிராந்தி சேர்த்து இரண்டு வேளை சாப்பிட வாந்தி, வயிற்ரேட்டம், இரைச்சல்,அஜீரணம்முதலியன உடனே நிற்கும். காலராவிஷமும் நீங்கும். சுக்கைத் தட்டியும், இஞ்சியைத் தோல்நீக்கி வில்லை வில்லையாக அரிந்து வறுத்தும் இக்கஷாயத்தில் சேர்த்துக்கொள்ளலாம். பிராந்தி கிடையாவிட்டால் கொஞ்சமாகச் சாராயம் சேர்த்துக் கொள்ளவும்.

## 9. வேறுமுறை காலராவுக்கு.

இரண்டு பலம் சுக்கு எடுத்துப் பாதியில் உப்பை அரைத்துத் தடவியும், பாதியில் மஞ்சளை அரைத்துத் தடவியும், உலரவைத்து அப்புறம் அவற்றைத்தட்டிக் கால்துட்டு எடை ஏலத்தோடுசட்டியி லிட்டு வறுத்து நன்றாய்ப் பொடிசெய்து பின்பு சட்டியில் தேனை விட்டு அது பொங்கி வரும்போது, மேற்படி தூளைப் போட்டுக் கிண்டி லேகியமாக வைத்துக்கொண்டு மணிக்கு ஒருதரம் வியாதி கண்டு, நெல்லிக்காய் அளவு கொடுத்துவர, வாந்திபேதி நின்று சுகம் உண்டாகும்.

## 10. வாந்திபேதியாலுண்டாகும் வயிற்றுவலி தாகம், கைகால் இழுப்புக்கு.

சற்றுப் புளித்த கால்படி நீராகாரத்தில் கொஞ்சம் சிவப்புக் காவிக்கட்டி உரைத்துக் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க உடனே தாகம், நின்று இழுப்பு, வயிற்றுவலி மாறிவிடும். நம்பிக்கையோடு தைரியமாய்ச் செய்யவும். இவ்விதம் உபயோகித்ததில் மிகுந்த நன்மை உண்டானது உண்மை. நீரும் பிரியச் சுகந்தரும்.

## 11, வேறுமுறை தாகம், நாவறட்சி வயிற்றுவலிக்கு.

ஒருபடி இளநீரைக் கால்படியாக வற்றவைத்து, அதில் கோரங் கிழங்கு, கொத்தமல்லி, சீரகம், குளவிக்கூட்டுமண் வகைக்கு ஒரு பலம் அதிமதுரம் கால் பலம் இவற்றைச் சட்டியிலிட்டு வறுத்துப் பொடிசெய்துமேற்கண்ட இளநீரை இருபாகமாக்கி, அதில் மூவிரல் கொண்ட தூளை மேற் பொடியாகப் போட்டுச் சீனி சிறிது சேர்த்துக் கலக்கிச் சாப்பிடக் குணமாகும்.

## 12. கண்டிதமான வெள்ளை மேகத்துக்கு.

பழம்பாசி இலை கொஞ்சம், சுருள்ளி 2, இவற்றை இலுமிச்சங் காயளவு அரைத்துச் சுத்தஜலம் மாகாணிப்படியில் கரைத்து, அத்துடன் அரைமாகாணிப்படி எள்ளெண்ணெய் கலந்து காலை மாலை 3-நாள் சாப்பிட நோய் தீரும். புளி, கார வஸ்து நீக்கவும்.

## 13. வேறுமுறை மேகத்துக்கு.

மூன்று முட்டையை உடைத்து. ஒரு சீஷாவில்விட்டு, உடைத்த ஒரு முட்டையினளவு எள்ளெண்ணெயையும் அதோடு

விட்டு நன்ருய்க் குலுக்கி இவ்விதம் மூன்றுநாள் காலை காலை சாப்பிடச் சுகம் உண்டாகும். மேற்கண்டபடி புளி, காரமான பதார்த்தங்கள் முதலியன நீக்கவும்.

### 14. மேகக் கடுப்புக்கு.

துத்திவேர் பலம் மூன்று, திராக்ஷப்பழவற்றல் பலம் ஒன்றரை, இவற்றைக் கஷாயமிட்டுக் காலை மாலை அரைக்கால்படி வீதம் சாப்பிட்டுவரத் தீரும்.

### 15. இரத்தமேகத்துக்கு.

மூன்றுபலம் வெண்டை வேரைக் கால்படி ஜலத்தில் இரவில் ஊறவைத்து, மறுநாள் காலை அதைப் பிசைந்து, தெளிவு அரைக்கால்படி எடுத்து, அதில் அரைப்பலம் சீனுக் கற்கண்டு பொடி செய்து போட்டுச் சாப்பிட இரத்தமேகம் நிற்கும்.

### 16. வேறுமுறை இரத்த மேகத்துக்கு.

பருத்திக்காய் இளம்பிஞ்சு 5, அதன் இளம் இலை ஒருபிடி ஒன்ருய்ச் சேர்த்து அரைத்து, கால்படி பசுவின் பாலிற் கலக்கிக் கொடுக்கச் சுகத்துக்கு வரும்.

### 17. நீர் அடைப்பு.

அதிமதுரம் ஏலம் வகைக்கு அரைத்துட்டு எடை, அதோடு வெள்ளரி விரை பலம் கால் சேர்த்துக் கஷாயமிட்டு மாகாணிப்படி கஷாயத்தில் ஒரு இளநீர் விட்டுச் சாப்பிட உடனே நீர் அடைப்பு நீங்கும். சுரம் (அல்லது) மற்றும் வியாதிகளில் நீர் அடைத்தால் வெண்காரத்தைப் பொரித்து, அதில் ஒரு கடலைப்பருமன் எடுத்துப் பசு வெண்ணெயிற் குழப்பிக் கொடுக்கத் தீரும்.

### 18. வேறுமுறை நீர் அடைப்புக்கு.

சீனக்காரம், நவச்சாரம், பொரிகாரம், வெடியுப்பு, பனங்கதிர், நாயுருவியிலை, கதலித்தண்டு வகைக்கு அரைத்துட்டு எடை எடுத்துக் கஷாயமிட்டு அரைக்கால்படி வீதம் காலை காலை சாப்பிட்டுவரச்சுகம்.

### 19. நீர்பிரிய மேற்பூச்சு.

வெடியுப்பை அமிர்தப்பாலில் கலக்கி அரைத்து மெழுகுபதமாக அடி வயிற்றில் பூச நீர் இறங்கிச் சுகம் உண்டாகும்.

## 20. நீர்த்துவாரத்தில் கல்லடைப்புக்கு.

கதலிவாழைத் தண்டை இடித்துப் பிழிந்த சாறு அரைக்கால் படியில், பொரித்த பொரிகாரம் அரைத்துட்டு எடை கலந்து சாப்பிடக் கல்லடைப்பு நீங்கிக் குணந்தரும்.

## 21. அதிமூத்திரத்துக்கு.

பருத்திக்கொட்டைப் பருப்பு, இலுமிச்சங்காய்ப் பருமன் அரைத்து அரைக்கால்படி பசுவின்பாலிற் கலந்து காலைகாலை 3-வேளை சாப்பிடக் குணம் உண்டாகும்.

## 22. நீரழிவுக்கு,

ஒரு வில்வப்பழச் சதையோடு காயம் தென்னம்பூவுரி வகைக்கு அரைத்துட்டு எடையும் அபின் கால்துட்டு எடையும் சேர்த்து எள்ளெண்ணெய்விட்டு நன்றாய் அரைத்து வைத்துக்கொண்டு கடலைப் பருமன் காலை மாலை சாப்பிட்டுவர நற்குணந்தரும்.

## 23. தாதுபுஷ்டி (அல்லது) இந்திரியக் கழிவுக்கு.

வட்டத்துத்தி வேர்ப்பட்டையை அரைத்து இலுமிச்சங்காய் அளவு எடுத்துக் கால்படி பசுவின் பாலில் கலக்கி வைத்துக்கொண்டு நீர் முள்ளிவிரை அரைச்சிரங்கை வாயிற்போட்டு மென்று தின்று மேற்கண்ட பாலைச் சாப்பிடவும். மூன்று நாள் காலை காலை இவ்விதம் உபயோகிக்கத் தாது நஷ்டம் தீரும்.

## 24. வேறுமுறை இந்திரியக்கழிவு. விந்து உடைந்து நாற்றம் எடுப்பதற்கு

ஒரு மஞ்சாடி சூடத்தை ஒரு பாசிப்பயறு அளவு அபினில் சேர்த்துக் குழைத்து உருட்டி நித்திரைக்குப் போகும் போது சாப்பிட்டு வரவும்.

## 25. இந்திரியக் கழிவுக்கு,

நாற்பது நாள் காலை மாலை மூன்று வில்வ இலை (பச்சை) யைச் சாப்பிட்டுவர விந்துகட்டும். தாது புஷ்டியாகும்

## 26. இளைப்பு, ஈழை, இருமலுக்கு,

போதுமான நிலப்பூச்சியை ஏழுதரம் ஜலம் விட்டுக் கழுவி, சிரட்டையிலிட்டு அதில் பாக்களவு இந்துப்பைப் பொடித்துப்

போட அதிலிருந்து நீர் இறங்கும். அந்த நீர் கால்மாகாணிப் படியோடு கால்மாகாணிப்படி வேப்பெண்ணெயைக் கலந்து மூன்று வெள்ளைப்பூண்டு தட்டித் தைலம் எடுத்து, அதோடு சேர்த்துக்குடிக்கத் தீரும். வாரத்துக்கு ஒரு முறை உபயோகித்துவர இளைப்பு முற்றிலும் நீங்கும். புளி, எண்ணெய் நீக்க.

## 27. ஓயாதபுகைச்சல் இருமலுக்கு.

குப்பைமேனியிலை ஒருபிடியோடு வெள்ளைப்பூண்டு ஒன்று உரித்துச் சேர்த்து அரைத்து, பசுவின் வெண்ணெயில் வேகவைத்துச் சாப்பிடத் தீரும்.

## 28. வேறுமுறை இருமல், சளிக்கு.

சுக்கு ஒருதட்டெடை, மிளகு, அரைத்தட்டெடை, அக்கராக்காரம், சித்தரத்தை, கடுக்காய்த்தோடு வகைக்குக் கால்துட்டு எடை; இவற்றை அரைப்படி ஜலத்தில் கஷாயமிட்டு மாகாணிப் படியாக வற்றவைத்து, அரைக்கால்படி பசுவின்பாலை அதில் சேர்த்துப் பனங்கற்கண்டு கூட்டிக் காலை காலை சாப்பிட்டுவர இருமல் மூலஉஷ்ணம் யாவுந் தீரும்.

## 29. பித்தவாயுவினால் உண்டாகும் பசியின்மை வாந்தி, கிறுகிறுப்பு, நெஞ்செரிவு, புளித்தேப்பம், வாய்நீர் ஊறல், நெஞ்சில்பலவித வாய்வுஏற்றம், வாய் கசப்பு அரோசிகம் முதலிய வற்றிற்கு.

மூன்றுபலம் இஞ்சி, மூன்று இலுமிச்சம்பழம். இவற்றின் சாறுஎடுத்து ஒருபலம் சீரகத்தை இளநீரில் ஊறவைத்து மேற்படி சாற்றில் அரைத்துக் கலக்கிச் சக்கரை இரண்டுபலம் அதோடு தட்டிப் போட்டுக் கிண்டி வேகும்போது மாகாணிப்படி தேனும் கொஞ்சம் பசுவின் நெய்யும் விட்டு, மெழுகுப் பருவத்தில் இறக்கி வைத்துக்கொண்டு, சுண்டக்காய்ப் பருமன் காலை மாலை சாப்பிட்டு வரப் பித்த வாய்வு யாவும் நீங்கும்.

## 30. பாரிச வாய்வுக்கு.

சுடலி ஆவரை இலையை அரைத்துக் கழற்சிக்காய்ப் பருமன் உள்ளுக்குக்கொடுக்கச் சுகந்தரும். மூன்றுநாள் காலை காலை சாப்பிடவும். பத்தியம் புளி எண்ணெய் இவை நீக்கவும்.

### 31. ஷ பாரிசவாய்வுக்குப் பூச்சு. (விரைவீக்கம்.)

கொஞ்சம் அபினைச் சுயம்பான தேனில் உரசிப்போட வேதனை நீங்கும். வீக்கமும் மூன்று வேளையில் நீங்கும்.

### 32. அண்ட வாய்வுக்கு.

அரைமுறித் தேங்காயைத் திருகிப் பால் எடுத்து அதில் அரைத்துட்டு எடை இலுப்பைப் புண்ணாக்கைச் சுட்டுத் தூள் செய்து போட்டுச் சாப்பிடத் தீரும்.

### 33. அண்டவாய்வுக்கும் பாரிசவாய்வுக்கும் ஒரேமுறை.

கொழுஞ்சிசமூலத்தைச் சிறிது ஜலம் விட்டு இடித்துப் பிழிந்து வடிகட்டி அரைக்கால்படி வைத்துக்கொள்ளவும். சட்டியைக் காயவைத்து அதில் நாலுபலம் வெள்ளைப்பூண்டை உரித்துப் போட்டு வறுக்க அது பொன்னிறமாகும்போது ஷ சாற்றை விட்டுக் கிண்டிக்கொண்டு வரச் சிறிது வற்றினபின் ஆமணக் கெண்ணெய் மாகாணிப்படி அதில் விட்டு ஒன்றரைப்பலம் பனை வெல்லமும் தட்டிப்போட்டுக் கடைந்து குழம்புப் பருவத்தில் இறக்கி வைத்துக்கொண்டு ஏழு பொழுது மூன்றரைநாள் சாப்பிடவும். புளி, எண்ணெய் நீக்கவும்.

### 34. சூதகவாய்வு, சூதகச்சிக்கல் அதனாலுண்டாகும் வயிற்றுவலிக்கு.

சூதகம் ஆன அன்று காலை ஸ்நானஞ்செய்தபின், பெருந் தும்பையிலை கொஞ்சமும், அரைத்துட்டௌடை காயமும் சேர்த்து நன்றாய் இடித்து நெல்லிக்காய் பருமன் செந்தவிட்டில் உருட்டி சிறுசிறு உருண்டையாக விழுங்கி, உடனே வெந்நீர் சுடச்சுடக் கொஞ்சம் சாப்பிட நிற்கும். இரண்டு தினங்களுக்கு அப்படியே சாப்பிடவும். புளி எண்ணெய் நீக்கவும்.

### 35. கெர்ப்பப்பிணி நீங்கிக் கெர்ப்பம் உண்டாக.

சூதகம் ஆன தினத்தின் காலை ஸ்நானஞ் செய்து, கொஞ்சம் பெருந்தும்பையிலையுடன் 3 வெள்ளைப்பூண்டை உரித்து ஒன்றாய்ச் சேர்த்து இடித்துச் சாறு எடுத்து அதில் மாகாணிப்படி சாப்பிடவும். மறுதினமும் அப்படியே இவ்விதம் பின்வரும் மூன்று சூதக தினங்களில் தவறாமல் சாப்பிட்டுவரப் பிணி நீங்கிக் கெர்ப்பம் உண்டாகும். பத்தியம் புளி எண்ணெய் நீக்கவும்.

### 36. வயிற்றுவலி வாய்வுக்குத் துக்கு.

ஒருதுட்டெளடை மிளகை அரைப்படி ஜலத்தில் கஷாயமிட்டு மாகாணிப்படியாக்கிச் சாப்பிட உடனே வலிகுத்து நீங்கும்.

### 37. நெஞ்சுவலிக்கு.

குருந்தொட்டிவேர், வில்வவேர், வகைக்குக் கால்பலம் எடுத்துக் கஷாயமிட்டு மாகாணிப்படியாக்கி, காய்ச்சிய பசுவின்பால் அரைக்கால்படி அதில் சேர்த்து காலை காலை மூன்றுநாள் சாப்பிடக் குணமாகும்.

### 38. சூலைவாய்வு, பிராணவாய்வுக்கு.

சினிமிளகாய், பச்சைச்சாரணைவேர்த்தொலி இரண்டையும் சமஎடையாய்ப் போதுமானது எடுத்துப் பொடியாய் அரிந்து நன்றாய்க் காயவைத்து, அந்த எடைக்குச் சுக்குசேர்த்து எல்லாம் ஒன்றாக இடித்துத் துணியில் வடிகொண்டு, அந்தத் தூளில் இரு விரல்கொண்ட அளவு எடுத்து குளிர்ந்த ஜலத்திற் போட்டுச் சாப்பிட்டு வரச்சூலைவாய்வு நீங்கும்.

### 39. வயிற்றழைச்சல், மூலக்கடுப்பு, மூலக்கொதிப்புக்கு.

கடுக்காய்ப்பூ ஒருபலம் எடுத்து, சட்டியில் ஆமணக்கெண்ணெய் கொஞ்சம் விட்டு, வறுத்துப் பொடிசெய்து, அந்தத் தூளில் அரைத்துட்டு எடை எடுத்து தேனில் குழைத்துச் சாப்பிட்டுவரச் சுகம் கிடைக்கும். இதேமுறை பிள்ளைகள் வயிற்றழைச்சலுக்கும் அளவு குறைத்துக் கொடுக்கலாம்.

### 40, வேறுமுறை வயிற்றழைச்சலுக்கு

கொஞ்சம் ஆமணக்கு எண்ணெயை வெற்றிலையில்விட்டு அதில் சேலம் சீனிசேர்த்துக் குழப்பிச் சாப்பிட மூல அழல் நின்று சுகம் கிடைக்கும். இதேமுறை பிள்ளைகளுக்கும் கொடுக்கலாம். சவ்வரிசிக் கஞ்சி சாப்பிடவும்.

### 41. மூலத்துக்கு.

மூக்கரைச்சாரணையிலை ஒரு பிடி, புழுங்கல்அரிசி ஒரு சிறங்கை இரண்டையும் சேர்த்து அரைத்து அடைதட்டி, நெய்யில் வேக வைத்துச் சாப்பிட, சகல மூல ரோகங்களும் நீங்கும்.

## 42. வயிற்றிரைச்சல், கழிச்சலுக்கு.

நாலுபலம் மிளகை ஒருகோப்பை அல்லது மண் கலயத்தி லிட்டு மிளகுமுழுங்க வேலிப்பருத்திச் சாறுவிட்டு வெயிலில்வைத்து சாறு நன்றாய் உண்டபின் மிளகை எடுத்துக் காயவைத்து இடித் துத் துணியில் வடிகொண்ட தூளில் இரண்டுவிரல்கொண்ட அளவு தூளைத் தேனில் குழைத்துச் சாப்பிட்டுவர நல்ல சுகம் கிடைக்கும், ஓயாத கழிச்சலுக்கு விளாம்பிசினைப் பொடித்து எருமைத் தயிரிற் கலந்து கொடுக்கத் தீரும். கஞ்சி சாப்பிடவும்.

## 43. கிராணிக்கு.

மாதளம் பிஞ்சைக் குடைந்து, அதனுள் கால்துட்டு எடை அபினை வைத்து, உமிக்காந்தலில் சுட்டு, பின்பு அதை எடுத்து அரைத்து மூன்றுபோது காலை காலை உருட்டிக்கொடுக்கத் தீரும். சவ்வரிசிக் கஞ்சி சாப்பிடவும்.

## 44. பைத்தியத்துக்கு.

முள்ளுமுருங்கையிலையை இலுமிச்சங்காயளவு அரைத்துப் பசுவின்பாலில் கலக்கி மூன்றுநாள் காலை காலை கொடுத்துவரத் தீரும். புளி எண்ணெய் நீக்கவும்.

## 45. பைத்தியத்துக்குத் தப்பளம்,

நாப்பாவல் இலைச்சாறு, இலுமிச்சம்பளச் சாறு, இஞ்சியின் தனிச்சாறு, இவற்றை ஒன்றாய்க் கலந்து சுடவைத்து, அதிகாலை சிரசில் தப்பளமிட்டு, சாயங்காலம் குடங்குடமாய்க் குளிர்ந்த ஜலம் சிரசில் வார்த்து ஸ்நானஞ் செய்விக்கவும் குணந்தரும்,

## 46 வேறுமுறை பைத்தியத்துக்குத் தப்பளம்

நெல்லிக்காய்ச்சாறு, மாகாணிப்படியில் சந்தனக்கட்டை, பாசிப்பயறு, முந்திரிப்பழ வற்றல் வகைக்குப் பலம் அரை எடுத்து மேற்படி சாற்றில் அரைத்து அதிற்கலக்கிக் கொதிக்கவைத்துக் காலையில் தப்பளமிட்டு மதியம் 11-மணிக்கு வெந்நீர் ஸ்நானம் செய்விக்க இவ்விதம் 3-நாள்செய்துவரக் குணந்தரும்,

## 47. பிரசவமானபின் பயித்தியமாய்ப் புலம்புவதற்கு.

சுக்கு, சடாமாஞ்சில் வகைக்கு அரைப்பலம் எடுத்து கால் படி ஜலத்தில் கஷாயமிட்டு மாகாணிப்படியாக்கி அதில் புளியமுத்

தளவு பெருங்காயத்தை உரசிக்கொடுக்க, இவ்விதம் காலை காலை 3-வேளை கொடுக்கப் புலப்பங் தீரும். பித்த மபக்கமுள்ள பிள்ளைகளுக்கும் இதை உபயோகிக்கலாம். புளி எண்ணெய் நீக்கவும்.

## 48, பித்தப் படபடப்புக்கு.

கொத்தமல்லி, வில்வவேர், குறுந்தொட்டிவேர், நெற்பொரி, சுக்கு, கோரங்கிழங்கு, இவை வகைக்கு அரைப்பலம் எடுத்துக் கஷாயஞ்செய்து மூன்றுபோது காலை மாலை சாப்பிடத் தீரும்.

## 49. வேறுமுறை பித்தம் மயக்கம், தலை கிறுகிறுப்புக்கு

பேப்புடல் மொசுமொசுக்கை, பாசிப்பயறு, வில்வவேர், சுக்கு இவற்றைச் சமன் கூட்டிக் கஷாயஞ் செய்து சிறிது சீனிசேர்த்து காலை மாலை மூன்று வேளை சாப்பிடக் குணந்தரும்.

## 50. பயங்கரமான விக்கலுடன் வரும் சத்திப்புக்கு.

மாதளம்பழத்தோடு, நெற்பொரி, சர்க்கரை, இவற்றை ஓர் அளவாக எடுத்துச்சுயம்பான தேன்விட்டு நன்றாய் அரைத்து ஒரு மணிக்கு ஒருதடவை கழற்சிக்காய்ப் பருமன் கொடுத்துக்கொண்டு வர விக்கல் சத்திப்பு ஒடும்.

## 51. வேறுமுறை விக்கல் சத்திப்புக்கு,

வல்லாரைச்சாற்றைத் தேனில் கலந்துகொடுக்கத் தீரும்.

## 52. வாந்திக்கு.

சுக்கு அரைத்துட்டு எடை, கிராம்பு கால்துட்டு எடை, எடுத்துச் சுக்கைத் தட்டிக் கிராம்போடு சேர்த்து ஒருபடி ஜலத்தில் கஷாயமிட்டு மாகாணிப்படியாக்கிச் சாப்பிட்டுவரக் குணமாகும்.

## 53. வேறு முறை வாந்தி அரோசியம் வாய்நீர் ஊறல் வாய் மழுமழுப்பு.

ஒரு சிறங்கை சம்பா நெற்பொரியுடன் கிராம்பு 10, ஏலம்-20 ஒரு துண்டு சர்க்கரை இவைகளைச் சேர்த்து அரைப்படி ஜலத்தில் கஷாயமிட்டு மகாணிப்படியாக்கி இவ்விதம் காலை மாலை மூன்று பொழுதுசாப்பிட்டுவரச் சுகம் உண்டாகும்.

## 54. உஷ்ணத்தினுலும் கணையினுலும் வரும் வாய்ப் புண்ணுக்கு.

வல்லாரை இலை ஒரு பிடி எடுத்து அதோடு வேறு ஈருள்ளி அறிந்துபோட்டு, வதக்கி, ஜலம்விட்டுக் கஷாயஞ் செய்து மாகாணிப்படி விதம் காலை மாலை சாப்பிட்டு வர மூல அழல் தீர்ந்து தேகம் தழைக்கும்

## 55. மஞ்சள் காமாலைக்கு.

வெள்ளைக் காணம் வேர்த் தொலியை நெல்லிக்காயளவு அரைத்து பசுவின் பாலிற் கொடுக்கவும். காலை மாலை 3-நாள் சாப்பிடக் குணம் உண்டாகும். புளி எண்ணெய் நீக்கவும்.

## 56. வேறுமுறை மஞ்சள் காமாலைக்கு.

சிற்ருமணக்கு இலையின் கொழுந்தை சிறுநெல்லிக்காய்ப் பருமன் அரைத்து எருமைத் தயிரில் கலக்கி 3-நாள் காலை காலை கொடுக்கத் தீரும்.

## ஊதுசோகை வீக்கத்துக்கு

கீழ்வாய்நெல்லிச்சமூலமும், மூன்று ஈருள்ளியும் சேர்த்து தனிச்சாறு மாகாணிப்படி எடுத்து காலை காலை மூன்றுநாள் சாப்பிட்டுவரச் சோகை நீங்கும். பிள்ளைகளுக்கு அளவு குறைத்துக் கொடுக்கத் தீரும். புளி ஒண்ணெய் நீக்கவும்.

## 58. வேறுமுறை நீர்ச்சோகைக்கு.

வெற்றிலைக்கொடியும், கொஞ்சம் மிளகும் சேர்த்துக் கஷாயமிட்டு மாகாணிப்படியில், வெண்காரம்பொரித்துக் கடலைப்பருமன் போட்டு காலை மாலை மூன்று பொழுது சொடுக்கத் தீரும். பிள்ளைகளுககு அளவு குறைத்துக் கொடுக்கலாம்.

## 59. துவாலை இறைப்புக்கு.

நன்ருய் முத்தின மொந்தன் வாழைக்காய் ஒன்றை வாகம் வைக்கோல்கொண்டு தோல் கருக்ச் சுட்டு, வெந்தபின் அதை எடுத்து மாகாணிப்படி சுயம்பான எண்ணெய்விட்டு நன்ருய்ப் பிசைந்து காலைகாலை இந்த முறை மூன்றுநாள் கொடுத்துவரவும்.

## 60. வேறுமுறை துவாலை பெரும்பாட்டிற்கு.

இருபத்தொரு வால்மிளகை இரண்டொன்றாய்ப் பொடித்து ஒரு டிராம் சாராயத்திற்போட்டு ஒருநாள் ஊறவைத்துப் பின்பு அதை இரண்டு நாள் இரவில் சாப்பாட்டிற்கு மேல் குடிக்கத்தீரும். அவவாறே மேலும் இரண்டுநாள் சாப்பிடலாம். பத்தியம் கரப்பான் பதார்த்தம் சாரமான வஸ்துக்களை நீக்கவும்.

## 61. வாதக் கடுப்பு உளைச்சலுக்கு.

கொடிவேலிவேர், கருநொச்சிவேர், மிளகு, சாரணைவேர், இம்மூன்றையும், சமனெடையாய்ப் போதுமானது எடுத்து, வெயிலில் உலர்த்தி இடித்துத் துணியில் வடிகொண்டு, மூவிரல்கொண்ட பிரமாணம் தூளை, சீனிசேராமல், காலை மாலை சாப்பிட்டுக்கொண்டு வரச்சகல வாதமும் தீரும். புளி எண்ணெய் நீக்கவும்.

## 62. வாத உளைச்சல், வாதக்கடுப்புக்கு ஒத்தணம்.

நன்றாய் முத்தின பூவரசம் பட்டையை நிழலில் உலர்த்தி இடித்த தூளோடு ஒரு தேங்காயைப் பூத்திருகிச் சேர்த்து, துணியில் பொட்டணம் கட்டி, வேப்பெண்ணெயைச் சுடவைத்து அதில் அந்தப் பொட்டணத்தை வைத்து எடுத்துச் சிறு சூட்டோடு ஒத்தணம் கொடுக்கவும் உளைச்சல் தீரும்

## 63. கை கால்களில் உண்டாகும் முடக்குச் சூலைக்கு.

குருட்டுக் கொருஞ்சியை, வெந்நீர்விட்டு இடித்து வடிகட்டிப் பிழிந்தசாறு மர்காணிப்படி அரை மாகாணிப்படி வேப்பெண்ணெய்யும், அரைடிராம் சாராயமும் சேர்த்துக் காலை காலை மூன்று நாள் சாப்பிட முடக்குவிடும். புளி, எண்ணெய் நீக்கவும்.

## 64. தேகம் முழுவதிலும் அல்லது கைகால்களில் நீர் ஓடிக் குத்தல் குடைச்சலுக்கு.

குருந்தோட்டிவேர், சுக்கு வகைக்கு ஒரு துட்டு எடை எடுத்துக் கஷாயம் செய்து காலை மாலை சாப்பிட்டுக்கொண்டுவரத் தீரும்.

## 65. பாதத்தில் எரிவு, உளைச்சல், வெடிப்புக்கு.

அறுக்கம்வேர் ஏழுபலம், மிளகு கால்பலம் இவற்றை ஒருபடி ஜலத்தில் கஷாயமிட்டு, அரைக்கால்படி கஷாயத்தில், பசுவெண்ணெய் நெல்லிக்காய்ப் பருமன் போட்டுக் காலை மாலை ஏழுபொழுது

சாப்பிடக் குணந்தரும். கஷாயமிட்ட மருந்துகளோடு ஒவ்வொரு நேரத்துக்கும் புதிதாய் முன்சொல்லிய பிரகாரம் மருந்துகளைச் சேர்த்துக் கஷாயம் செய்துவரவும். புளி, எண்ணெய் நீக்கவும்.

## 66. இடுப்பு உளைச்சலுக்கு.

சுக்கு, வெள்ளைப்பூண்டு, மூக்கரச்சாரணைவேர், வேலிப்பருத்தி வேர் வகைக்கு ஒருதுட்டு எடை எடுத்து அரைப்படி ஜலத்தில் கஷாயமிட்டு, மாகாணிப்படிவீதம் காலை மாலை மூன்று பொழுது சாப்பிட்டுவரக் குணந்தரும்.

## 67. பிரசவமானபின் உண்டாகும் இளம்பிள்ளை வாதத்துக்கு.

சிறு கொம்மட்டிக்காய் அஞ்சு, வசம்பு அரைப்பலம், காயை நன்றாய் நொறுக்கி, வசம்பைத்தட்டி ஒன்றாய்ச் சேர்த்து, கால்படி புன்னைக்காய் எண்ணெயிற் போட்டுக் காய்ச்சி, காய் முறுகும் பருவத்தில் இறக்கி, உளைச்சலுள்ள இடங்களில், தைலத்தைப் பூசிவர, வாதந்தீரும்; குணமுண்டாகும்.

## 68. கை, கால், இடுப்பு பிடரி இவற்றில் உண்டாகும் வாத உழைச்சல், வாதக் கடுப்பு, நெஞ்சில் அடி, நெஞ்சுவலி, இவற்றிற்கு மேற்பூச்சு.

சுக்கு, குக்கல், கடுகு, கேழ்வரகு, இவற்றை அளவாக எடுத்துக் கருங்கத்தாழையை வாட்டிப்பிழிந்த சாற்றால் அரைத்துச் சிறிதுசுட வைத்துப் பூச உளைச்சல் வலியாவும் தீரும்.

## 69. வில்வாதம் முதலிய சகல ஜன்னிக்கும் நசியம்.

வெள்ளைப்பூண்டுத்தைலத்தை நாசிக்குஊதி காதுகளில் துணி அடைக்க வில்வாதம் முதலிய சகல ஜன்னியும் நீங்கும்.

## 70. 6-ஜன்னிக்கு.

எருக்கலம் பழுப்பு ஒன்று, அதன் கொழுந்து மூன்று, இவற்றைச் சேர்த்துக் கசக்கி சுரசஞ்செய்த இஞ்சிச் சாற்றில் மூன்று துளி விட்டுக் கொடுக்க உடனே ஜன்னி மாறும்.

### 71. வாந்திபேதியால் உண்டாகும் ஜன்னி. கைகால் இழுப்பு, வில்வாதம், கொண்டவாதம். முதலிய பயங்கரமான சகல ஜன்னிகளுக்கும் ஒத்தணம்.

முற்றின தேங்காயைப் பூத்திருகி, அந்தப்பூவில், சீரகம் வசம்பு, வெள்ளைப்பூண்டு சேர்த்துத் தட்டிப் போட்டு துணியில் பொட்டணங்கட்டி காய்ச்சிய வேப்பெண்ணெயிற் சிறிது நேரம் வைத்து வைத்துச் சூடு நிதானம் பார்த்து ஒத்தணங் கொடுக்க ஜன்னிகள் கை, கால் இழுப்பு முதலியன விலகும்.

### 72. சுரங்கண்டிருக்கும்போது சடுதியாய்க் கைகால் குளிர்ந்துபோவதற்கு.

இஞ்சி, முருங்கப்பட்டை, மாவிலிங்குப்பட்டை, தைவேளை வேர், குப்பைமேனிவேர், வெள்ளைப்பூண்டு இவற்றை ஓர் அளவாக எடுத்து ஜலம் சிறிது விட்டு இடித்துப் பிழிந்து வடிகொண்டு சுடுசட்டியில் விட்டுச் சுற்றி ஆற்றிக் கொடுக்கக் குளிர் நீங்கிச் சிறிது சிறிதாய்ச் சூடு உண்டாகும்.

### 73, குளிர்சுரம், நடுக்கல்சுரத்துக்கு.

குளிர் வரும்போது நாயுருவி இலை 13, மிளகு 11 இவற்றை ஒன்றாய்ச் சேர்த்துத்தட்டிச் சவைத்துத்தின்னும்படி கொடுக்கவும். உடனே பிணி நீங்கிச் சுகங்கிடைக்கும்.

### 74. வேறுமுறை. நடுக்கல் சுரத்துக்கு.

குளிர்வரும்போது சிறுதும்பைஇலையும் பூவுமாகப் பலம்கால், சேர்த்து அதோடு 11 மிளகும் அரைத்துச் சாப்பிடத் தீரும்.

### 75. முறை சுரத்துக்கு.

வெள்ளைப்பூண்டு, மிளகு, சிறுதும்பைஇலை இவற்றை ஓர் அளவாகக் கொஞ்சம் எடுத்து அரைத்து, கழற்சிக்காயளவு சுரம் வரும் நாளைக் கவனித்துக் காலையில் சாப்பிடத் தீரும்.

### 76. கணைச்சூடு, உஷ்ணம், கொதிப்பு இவற்றினால் மாலை, இரவுகளில் உண்டாகும் சுரத்துக்கு.

நிலவேம்பு அரைத்துட்டு எடை, சுக்கு ஒருதுட்டு எடை இவற்றைக் கஷாயஞ்செய்து, மகாணிப்படி வீதம் காலை மாலை சாப்பிட்டுக்கொண்டுவரப் பிணி தீர்ந்து குணந்தரும்.

### 77. நீடித்த முறைசுரம், குளிர்சுரங்களுக்கு.

சுக்கு, மிளகு, விஷ்ணுக்கிராந்தி இவற்றை ஓர் அளவாக எடுத்துக் கஷாயமிட்டு, மாகாணிப்படி கஷாயத்தில் சொஞ்சம் கொய்னு சேர்த்துக் கொடுக்கவும், மூன்றுவேளை காலை மாலை இப்படிக் கொடுத்துவரச் சுரம் நீங்கிவிடும்.

### 78. சுரம் கண்டிருக்கும்போது உண்டாகும் தலையிடி. தலைக்கனம், மயக்கம், பிடரிவலி இவற்றிற்கு.

கோஷ்டம், பால்சாம்பிராணி, மிளகு இவற்றை அமிர்தப் பாலில் அரைத்து ஷை பாலிற் கலக்கிச் சுடவைத்து, உச்சி, பிடரி, பொறுத்துக்களில் தேய்க்கக் குணந்தரும்.

### 79. சுரத்தில் உண்டாகும் கபம், நெஞ்சடைப்பு, மூர்ச்சை இவற்றிற்கு.

ஆடாதோடைவேர், பற்படாகம் வகைக்கு ஒருபலம், கொத்த மல்லி, சுக்கு, மிளகு, சனிநாயிறு வகைக்கு அரைப்பலம்; இவற் றைச் சேர்த்துக் காய்ச்சிக் கஷாயமிட்டு மாகாணிப்படி வீதம் காலை மாலைசாப்பிட்டுவரத் தீரும்.

### 80. வைசூரி இறங்கியும் சுரம் விடாமலிருப்பதற்கு.

அரைப்பலம் பெருஞ்சீரகத்தை அரைப்படி ஜலம் விட்டுக் கஷாயஞ் செய்து, மாகாணிப்படியாக்கி, இவ்விதம் இரண்டுவேளை சாப்பிட உடனே சுரம் நிற்கும்.

### 81. அக்கினி மந்தத்தினு லுண்டாகும் அன்னத் துவேஷம் பசியில்லாமைக்கு.

சுக்கு, சீரகம் வகைக்கு அரைப்பலம் கஷாயமிட்டு, மாகா ணிப்படி வீதம் சீனி சேர்க்காமல்] காலை மாலை 5 பொழுது சாப் பிட்டுவர அதிசயமான குணந் தோன்றும்.

### 82. பிரசவ வேதனைக்கு.

அரைத்துட்டெடை சுயம்பான உயர்ந்த குங்குமப்பூவோடு அரைத்துட்டு எடை பெருஞ்சீரகத்தைச் சேர்த்துக் கஷாயமிட்டு மாகாணிப்படி கொடுக்கவும். உடனே குழந்தை வெளியாகும்.

## 83. நஞ்சுக்கொடி விழ.

வேலிப்பருத்திவேரின் தொலியை அரைத்துச் சுண்டக்காய்ப் பருமன் உள்ளுக்குக் கொடுக்க உடனே வெளியாகும்.

## 84. பால் சுரக்க.

தைவேளை வேர்த்தொலி, பருத்திச்செடியின் வேர்த்தொலி இவற்றைச் சமம் எடுத்து அரைத்து, அதில் நெல்லிக்காய்ப் பருமன் பசுவின் பாலில் கலக்கி மூன்றுநாள் காலை காலை சாப்பிட்டு வரப் பால் சுரக்கும்.

## 85. கெர்ப்பஸ்திரீகளுக்குத் தூவாலைகாண்பதற்கு.

எள் இலைச் சாறு படி மாகாணியோடு, நல்லெண்ணெய் அரைமாகாணிப்படி சேர்த்துக் கலக்கிக் கொடுக்கவும், சுகம் உண்டாகும்.

## 86. பல்லரணை, வீக்கம், புழு இவற்றிற்கு.

இருப்புக் கரண்டியில் அரைமாகாணிப்படி எள்ளெண்ணெய் விட்டு, அதில் அரைத்துட்டு எடை நிலப்பனைக் கிழங்கைத் தட்டிப் போட்டுக் காய்ச்சிச் சிறு சூட்டில் வீக்கங்கொண்ட பாகத்தில் உள்ளும் புறம்புமாய்ப் பஞ்சில் தொட்டு ஒத்தணமிடக் குணந்தரும்.

## 87. பல் அசைவுக்கு.

சீனக்காரம், அரக்கு, துத்தம், தான்றிக்காய், கடுக்காய், மாயக்காய் இவற்றைச் சமம் எடுத்துப் பொடிசெய்து நாற்பது நாள் பல் விளக்கிவர அசைவு நீங்கி இறுகும்.

## 88. தந்த சூலைக்கு.

சந்தனக்கட்டை, கிராம்பு வகைக்கு அரைப்பலம் எடுத்துப் பொடிசெய்து நெய்விட்டு வறுத்து நெய்யில் அரைத்து வீக்கங்களில் பற்றுப்பூசத் தந்த சூலை நோய் தீரும்.

## 89. புழுவெட்டுக்கு.

யானைத் தந்தத்தைச் சுட்டுப் பொடித்துத் தேனில் குழைத்து 8-நாள் அலது 10நாள் பூசப் புழுவெட்டு நீங்கி ரோமம் முளைக்கும்.

## 90. காது ரணம், கட்டி, சீழ் வேதனைக்கு.

இந்துப்பு, சுக்கு, வகைக்கு அரைத்துட்டு எடை எடுத்து, மாகாணிப்படி எள்ளெண்ணெயிலிட்டுக் காய்ச்சிக் காதில் இரண்டு துளி விட்டுப் பஞ்சடைத்து வரச் சுகந்தரும்.

## 91. காது இரைச்சலுக்கு.

தைவேளைச்சாறும், எள்ளெண்ணெயும் சமமாய்க் கலந்து காய்ச்சிக் காதில் இரண்டு துளிகள் விட்டுவர இரைச்சல் நிற்கும்.

## 92. குதிங்கால் வெடிப்புக்கு.

ஆற்றுநண்டை இடித்து, வில்லை வில்லையாகத்தட்டிச் சுட்டசாம்பலைத்தேனுடன் கலந்து பூசிவரத் தீரும்.

## 93. வேறுமுறை குதிங்கால் வெடிப்புக்கு.

அத்திமரத்தின் அடியில் பால்தட்டி பிளவுகளின் போதுமானது எடுத்துப்போட, இரண்டு அல்லது மூன்று பொழுதில் அல்லது ஒரு வாரத்தில் புண் ஆறிவிடும்.

## 94. எச்சில் தழும்புகள், படர்தாமரை, விஷகடிப் பத்துகளுக்கு.

நாகமல்லி இலையை இலுமிச்சம்பழச் சாறு விட்டு அரைத்துப் போடப் பத்துகள் மாறிப்போகும்.

## 95. வேறுமுறை பத்துகளுக்கும், சிரங்குகளுக்கும்.

புரசம்வித்தை, இலுமிச்சம்பழச் சாற்றில் உரைத்துப்போட்டு வரப்பத்து சொறி சிரங்கு முதலிய குணமாகும்.

## 96 தீராத சொறி சிரங்குகளுக்கு.

நன்றாய் முற்றின பூவரச மரத்தின் பட்டையை இடித்துத் தூள்செய்து, தேங்காய் எண்ணெயில் போட்டு வெயிலில்வைத்துச் சிரங்குகளுக்குப் போட்டுவர உதிர்ந்துவிடும்.

## 97. கட்டிகள் பழுக்கவும் பழுத்தும் உடையக் கஷ்டப்படுவதற்கும்.

முள் உள்ள சப்பாத்துக் கள்ளிப்பூவை அரைத்துக் கட்டியின் மேல் திண்ணமாய்ப்பூசி லேசாய்த் துணிகொண்டு கட்டவும்,

## 98. ஆருத புண்ணுக்கு.

ஊமத்திலைச் சாற்றில் இரும்பும் செம்பும் கலந்து உரசிப் போட்டுவர ஆருதபுண்களும் ஆறித் தழும்பாகிவிடும்.

## 99. வேறுமுறை ஆருத இரணங்களுக்கு.

தொட்டால்சுருங்கி என்னும் பச்சிலையின் சாற்றைப் பூசிவரப் பத்துநாளில் இரணங்கள் ஆறும்.

## 100. தேகம் முழுவதும் தினவு நமைச்சல் ஊருதலுக்கு

கசகசா, கஸ்தூரி மஞ்சள், பாசிப்பயறு, உழுந்து இவற்றை ஓர் அளவாக எடுத்து, இலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து, மேல் தேய்த்து ஸ்நானம் செய்து வரத் தினவுதீரும். தேக ஆரோக்கியமும் பளபளப்பும் உண்டாகும்.

## 101. அரையாப்பு, தொடைவாழைப்புண், கட்டிகளுக்கு மேற்பூச்சு.

அமுக்கரா, கெருடக்கொடி, வசம்பு, சுக்கு, மிளகு, கருஞ்சீரகம், ஓமம், சவிநாயிறு இவற்றைக் குப்பைமேனிச் சாறுவிட்டு இடித்து விழுதுபட அரைத்துச் சுடவைத்துத் திண்ணமாய் இரண்டு (அல்லது) மூன்று தடவை பூச, கட்டிகள் அமுங்கும். ஆரம்பத்திலேயே செய்தால் மிகவும் குணமாகும்.

## 102. கண்வலி, கண்சிவப்புக்கு.

சீரகம் ஒருதுட்டு எடை, கிராம்பு, 2. வால்மிளகு, 2. பழம்புளி சிறுநெல்லிக்காப் பருமன், ஈருள்ளி சீனக்காரம், ஒருதுட்டு எடை, இவற்றோடு கொஞ்சம் நற்றுளசி இலை சேர்த்துத் தட்டித் துணியில் கட்டி, அமிர்தப்பாலில் ஊறவைத்து. 2 (அல்லது) 3 துளிகள் அடிக்கடி கண்களில் பிழியவும். பொட்டணத்தைக் கண்களில் ஒத்திக்கொள்ளவும். ஒரு தினத்தில் சுகங்கிடைக்கும்.

## 103. கண்ணில் உண்டாகும் விழி விழுங்கிக்கு.

மாயக்காய், கிராம்பு, சீனக்காரம் இவைகளைச் சிறிது சிறிது ஜலத்தில் உரைத்துக் கண்களில் காலைமாலை இட்டுவரக் குணமாகும்.

## 104. கண்ணில் சதை வளர்தலுக்கு.

ஈருள்ளியையும், குரிஞ்சாஇலையையும், இடித்துச்சாறு எடுத்து, கண்களில் துளிவிட்டுவரச் சதைவளர்த்தி நீங்கும்.

## 105. கண்பூவுக்கு.

தேள்கொடுக்கு இலையையும், நந்தியாவட்டைப்பூவையும் கசக்கிக் கண்களில் துளிவிட ஒரு வாரத்தில் பூ நீங்கும்.

## 106. கண்சிவப்புக்கு,

கொஞ்சம் சந்தனத்தை உரைத்து, சற்றுக் காயவைத்து, ஓர் சருள்ளியைத்தட்டி அந்தச் சந்தனத்துக்குள் வைத்துத் துணியிற் கட்டிக் கண்களில் பிழியச் சிவப்பு மாறும்.

## 107. கண் ஒளி மங்குதலுக்கு.

கோரோசனையை அமிர்தப்பாலில் உரசிக் கண்ணில் இட்டுக் கொண்டுவரக் கண்தெளிவாகும்.

## 108. மேகநீரால் கண்ணில்கொடிபடர்தல், ஒளிமங்கல், நீர் வடிதல் தலைக் கனத்துக்கு.

சுயம்பான தேன், வெற்றிலைச்சாறு வகைக்கு இரண்டு தேபிலைக்கரண்டி எடுத்து, ஒன்றாய்க் கலக்கி அதோடு கால்துட்டு எடை பச்சைக் கற்பூரம் சேர்த்து அரைத்துச் சீசாவில்வைத்துக்கொண்டு அஞ்சனமாகக் கண்ணில் தடவிவர மேற்கண்ட வியாதிகள் தீரும்.

## 109. மாலைக் கண்ணுக்கு.

கருந்துளசி இலையைத் தட்டிச் சாறு எடுத்துக் காலை மாலை கண்களில் 2-துளிவிட்டுவரக் குணமாகும்.

## 110. கண்கூச்சம், கண்ணிலிருந்து நீர்வடிதல், கண்சிவப்புக்குப் பத்து.

ஒருகோழிமுட்டையின் வெண்கருவைச் சுத்தமான ஒருகோப்பை அல்லது கிளாசில்விட்டு ஆமணக்கு இலைகளை நீக்கிய தண்டுகள் இரண்டு எடுத்து, அதைக்கொண்டு நன்றாய்ப் பொங்கும் வரை அடித்து நன்றாய்ப்பொடி செய்த சீனக்காரத்துள் அரைத்துட்டு எடை எடுத்து, அதிற்போட்டு மறுபடியும் அடித்து, அது வெண்ணெய்போல் திரண்டுவரும்போது கண்களில் ஊற்றவும். கண்கள் திறந்திருக்கவேண்டும். காலை மாலை இரண்டு (அல்லது) மூன்று வேளை இவ்விதம்செய்ய நல்ல சுகங்கிடைக்கும்.

## 111. மூக்குப்பீனிசம், சராய்ப்பீனிசம் ஓயாத நாசியடைப்புக்கு.

ஆமணக்கு எண்ணெய் கால்படியில் கால்பலம் வசம்பையும், ஒரு சிறு துண்டு மஞ்சளையுந் தட்டிப்போட்டுக் காய்ச்சிச் சிரசில் வைத்து முழுகிவரத் தீரும். வெந்நீர் ஸ்நானம் அவசியம். சீயக் காய்த் தேய்த்து முழுகவும்.

## 112 தேள் கடிக்கு.

இரும்புக்கரண்டியில் வேப்பெண்ணெய் மாகாணிப்படி விட்டு, அடுப்பில் வைத்து அது நன்றாய்க் காய்ந்து வரும்போது, கரண்டியை எடுத்துக் கடிவாய்க்குநேரே கீழேவைத்துக் கொண்டு, சிறுநீர் அரைக்கால்படியைக் கரண்டியில் இரண்டுதடவையாக ஊற்றவேண்டும். புகை கடிவாயில்படவே விஷம் இறங்கிவிடும்.

## 113. எலி கடிக்கு.

சித்திரைப் பாலாடை (பச்சிலையோடு) ஒரு புளியமுத்தளவு காயம் வைத்தரைத்து இலுமிச்சங்காய்ப் பருமன் அதைப் பசுவின் பால் அரைக்காற்படியிற் கலக்கிக்கொடுக்கத் தீரும். அமாவாசை காலங்களில் செய்துவரவும்.

## 114. பேய்நாய்க் கடிக்கு.

எக்கடுகு இலையை நெல்லிக்காய்ப் பிரமாணம் பசுவின் பால் அரைக்கால்படியில் கலக்கி 3 வேளை காலை காலை கொடுக்கவும். பத்தியம் புளி எள்ளெண்ணெய் நீக்கவும். கடித்த உடனே செய்வது உத்தமம்.

## 115. சகல சில் விஷங்கள், வண்டுகடிகள் அவற்றால் உண்டாகும் பத்துகள் தடிப்புகளுக்கு.

கோடகசாலை (பச்சிலை) யையும், கால்துட்டு எடை மிளகையும், ஒன்றாய்ச் சேர்த்து அரைத்துக் கழர்ச்சிக்காய்ப் பிரமாணம் காலை காலை 7-நாள் சாப்பிட்டுவரத் தீரும். பத்தியம் எள்ளெண்ணெய் நீக்கவும்.

## 116. நரம்புச் சிலந்திக்கு.

தலைசுருளிவேர் அரைப்பலம் எடுத்து, அதோடு 13-கருமொச்சைப் பயிறுசேர்த்து, அரைப்படி ஜலத்தில் போட்டுப் பயிறு அவிந்தபின் பயிற்றைத் தின்று கஷாயத்தைச் சாப்பிடவும். ஒரு பொழுதில் சுகம் உண்டாகும்.

அவிழ்தஞ் செய்யச் சுத்தியே பிரதானம்
அதை இங்ஙனங் கூறுவோமாக.

## இலிங்க சுத்தி 1-வது முறை.

உலாந்தாலிங்கம் ஒரு கட்டியாக வாங்கி உயர்ந்த கொம்புத் தேனில் ஒருநாள், அமிர்தப்பாலில் ஒருநாள் ஊறவைத்துக்கொண்டு, மறுநாள் எடுத்து எலுமிச்சம்பழரசம், குப்பைமேனிரசம், அமிர்தப் பால் சமமாய்க் கலந்து அடுப்பின்மேல் சட்டியை ஏற்றி அதில் ஷை லிங்கத்தை வைத்துப் புகையாமல் 4-ஜாமம் சுருக்குக்கொடுக்கவும், சுத்தியாம். இதற்கு லிங்கக்கட்டென்று பெயர்.

## ஷை 2-வது முறை.

ஜாதிலிங்கத்தை அமுதப்பாலில் பேதமற மூன்றுநாளூற வைத்துப் பின் ஷை பாலால் நாலுஜாமம் சுருக்குக் கொடுத்துப் பின்னும், கொட்டான் கரந்தைச் சாற்றில் நாலு ஜாமம் சுருக்குக் கொடுக்கச் சுத்தியாகும்.

## சவ்வீரம் சுத்தி.

சவ்வீரம் எவ்வளவு தேவையோ அவ்வளவு கடையில் வாங்கி வந்து பவ்விதமாக அந்த எடைக்கு அதிகமாக மூன்று பங்கு மிளகை நிறுத்து, வடிகஞ்சி நீரை வார்த்து அரைத்து மெழுகுப் பதத்திலெ டுத்துச் சவ்வீரத்துக்கு அங்கிபூட்டிச் சீலையில் முடிந்து, இளநீர், படிந்துவிடாமல் தொலாந்திரமாகக் கட்டி இரண்டு ஜாமம் எரிக்கச் சவ்வீரம் சுத்தியாகும்.

## பூரம் சுத்தி.

பூரத்தைக் காரமுள்ள மிளகும், சாரமுள்ள வெற்றிலையுங் கூட் டிச் சுத்த ஜலம் சட்டியில்விட்டுக் கஷாயமிட்டு, அதில் கிழிக்கட்டி மூன்றுநாள் ஊறவைத்துப் பின்பு அமிர்தப்பாலில் நாலுஜாமம் சுருக்குக் கொடுத்து எடுத்துக் கொள்ளப் பூரம் சுத்தியாம்.

## ரசம் சுத்தி.

ஆதிரசமாகிய சூதத்தை அருக்கன்பாலில் பொருக்க ஒரு நாள் ஊறப்போட்டு, மறுநாள் செங்கல் தூள், புகையிரல் தூள், மஞ்சள் தூள், சக்கரை இதுகளில் அரைத்தெடுத்துக் கொண்டு பின்பு வெள் ளைப்பூண்டை உரித்துக் கல்வத்திற்போட்டு ஷை ரசத்தைச் சேர்த் தரைக்க ரசம் சுத்தியாகும்

## பாதரச சுத்தி.

சித்திபெற்ற ரசத்தை, மனமொத்த பலம்வாங்கிச் சத்திபூசை செய்து சுத்தமான குழி அம்மியில் விட்டு மஞ்சள் தூளைக் கொஞ்சம் போட்டு இரண்டு நாழிகை பிரண்டுவர மத்தித்துப் பிறகு ஒட்டரை யைக்கலந்து வெட்டவெளியில் சுட்ட வெயிலில் நாலு நாழிகை மேலாக வைத்திருந்து பிறகு மெல்லிய சல்லாச் சீலையில் வைத்துப் பிழிந்து கொண்டு, சந்தனச்சாறு, தேவதாரச்சாறு, முருங்கப்பட் டைச்சாறு, வெற்றிலைச்சாறு, பாகல்இலைச்சாறு, வேலிப்பருத் திச்சாறு, நிலப்பனங்கிழங்கின்சாறு, புரசம்பட்டைச்சாறு, கொடி வேலிச்சாறு, ஊமத்த இலையின்சாறு, கையாந்தகரைச்சாறு, சார ணையிலையின்சாறு, இதுகளிலே தனித்தனி இரண்டிரண்டு நாழிகை புரண்டுருளமத்தித்து அரைத்தெடுக்க ரசசுத்தியாகும்.

## ரசசெந்தூர சுத்தி.

அமிர்தப்பாலில் முப்பது நாழிகை ஊறவைத்தெடுக்க ரசசெந் தூரம் சுத்தியாகும்.

## கற்பூர சுத்தி.

துங்கமான கற்பூரத்தைச் செங்கழுநீர்ப்பூ விதழின் சாற்றில் தங்க ஒருநாழிகை ஊறவைத்துச் செங்கதிரோன் வெயிலில்மங்காம லுலர்த்தி எடுக்கக் கற்பூரம் சுத்தியாகும்.

## காந்தம் சுத்தி.

ஊசிக்காந்தத்தைத் தேசிப்பழச் சாற்றிலும், ஆவின் மோரி லும், மாசில்லாக் காடியின் நீரிலும், கொதிக்கவைத் தெடுத்துப் பிறகு, சாணியை யெடுத்துப் பாணியிற் கலக்கிய சாணப்பாலிலும் ஏழுதரம் காய்ச்சிக் காய்ச்சித் துவைக்கக் காந்தம் சுத்தியாகும். வரகு வைக்கோலில் காந்தத்தை வைத்தெரிக்கச் சுத்தியாகும்.

## கெந்தகச் சுத்தி.

ஒரு சட்டிக்குள் கரு ஆட்டுப்பாலாகிய வெள்ளாட்டுப்பாலை விட்டுச் சட்டியின் மேலே கெட்டித் துணியால் வேடுகட்டிக் கெந்த கத்தைக் கொட்டிப் பரப்பி, அதன் மேல் கவுசட்டி போட்டு மூடி, பிட்டவித்ததுபோல அடுப்பேற்றி அவிக்கக்கெந்தகம் யாவும், அந் தச் சட்டிக்குள் உருகிப் பாலில் விழும். இப்படி ஏழுதரம் எடுத் தெடுத்துச் செய்யக்கெந்தகம்சுத்தியாகும். (வாண கெந்தகம் மருந் துவகைக்கு ஆகாது என்பதை வைத்தியர்கள் அறிக.)

நெல்லிக்காய் கெந்தகத்தைக் காணம் வெந்நீர், காடிநீர், கருத் தலெண்ணெய், எருக்கன்பால், ஆவின்பால், ஆடாதோடைச்சாறு, புளியிலைச்சாறு, கோமூத்திரம், இதுகளிலே தனித்தனியே உருக் கிச் சாய்க்கவும். பின்பு திப்பிலிக் கஷாயத்திலும், கொடிவேலிவேர் சாற்றிலும், ஒவ்வொரு ஜாமம் ஊறப்போட்டு வெயிலில் காயவைக் கக் கெந்தகம் சுத்தியாம். வாணக்கேந்தகம், குழாய்க்கேந்தகம், நெல்லிக்காய்க் கேந்தகம், முதலியதிருப்பதால் பார்த்துச்செய்யவும்.

## தாளகம் சுத்தி.

கரடில்லாத் தாளகத்தைப் பணம்போலே வெட்டித் துணியிற் கட்டி, அப்பொட்டணத்தைக் கோமூத்திரத்தில் ஒரு நாளும், காடி யில் ஒருநாளும் வேகவிட்டு எடுத்துப் பின்னும் பசுவின் பாலிலும், சுண்ணும்பு நீரிலும், * கலியாணப் பூசணிக்காய் நீரிலும், இவைக ளில் ஒவ்வொரு நீரிலும் ஒவ்வொரு ஜாமம் தொலாந்திரமாக வேக வைத்து எடுத்துக்கொண்டபின், அரசம்பட்டைக் கஷாயத்தில் மூன்றுநா ளூறப்போடத் தாளகம் சுத்தியாகும். இவ்விதம் மூன்று விதச் சுத்தியான பின் சகல அவிழ்தத்துடன் பிரயோகிக்கலாம். பொன்னரிதாரத்தை மேற்சொன்ன வண்ணஞ் சுத்திசெய்யலாம்.

## அரிதாரச் சுத்தி, (கௌரிலலிதம்.)

பாத்திரமாகிய மண் சட்டியில் நீத்தாத சுண்ணும்புக்குள் கௌரிலலிதமாகிய அரிதாரத்தை வைத்துக் கழுதை மூத்திரம் விட்டு எழுதரம் தாளித்து எடுத்துச் சுன்னநீர், காணம் வெந்நீர், காடிநீர், பூசணிக்காய்நீர் அகத்திக்கீரைத் தைலம், தயிர் இவைகள் சமபாகமாகக்கூட்டி இரண்டு ஜாமம் சுருக்குக்கொடுக்க அரிதாரம் சுத்தியாம். பிறகு சகல அவிழ்தத்துக்கும் உபயோகப்படுத்தலாம். சிவந்த அரிதாரம் மடலரிதாரம் இவைகளை இதுபோற் சுத்தி செய்யலாம்.

அரிதாரம், பொன்னரிதாரம், மடலரிதாரம், வைப்பரிதாரம், கரட்டரிதாரம், தகட்டரிதாரம், கட்டி அரிதாரம், கனத்தி அரிதா ரம் இவ்வெட்டுஅரிதாரத்துக்கும் பொதுப்பெயர் தாளகம் என்பர்.

---

* கலியாணப் பூசணிப்பழத்தை மேலே கீறி மூன்று விராகனெடை இந்துப்புப்போட்டு அடியில் எழுத்தாணியால் துவாரஞ் செய்து மேலே தூக்கிக்கட்டி அடியில் பீங்கான் வைத்து வைக்க அதில் இறங்கும் நீர் பூச ணிக்காய் நீர். எடுத்துக்கொள்ளவும்.

சவுரியப்போற் கவுரியைக் கொண்டுவந்து கவனமாய் மிளகுக் கஷாயத்தில் தோலாந்திரங்கட்டி அடுப்பேற்றித் தொடுப்பாய் ஒரு நாழிகை வரை யெரித்தெடுத்து ஆறிய பின் பன்றிப் பாலில் நன்ருய்க் கிளிக்கட்டி அக்கினியில் வைத்து அவித்தெடுப்பதே கௌரி பாஷாணம் சுத்தியாம்.

## தொட்டிப் பாஷாண சுத்தி.

தொட்டிப் பாஷாணத்தைத் தொட்டு நொருக்கிச் சட்டியி லிட்டு அதில் நெய்யைவிட்டு எட்டுநா ளூறவைத்துப் பின்பு ஆற வைத்துக் காணச்சாற்றில் தோணப் போட்டுக் காய்ச்சி எடுக்கத் தொட்டிப் பாஷாணம் சுத்தியாம்.

## செம்புத் தொட்டிப்பாஷாண சுத்தி.

கன்றை யீன்ற காராவின் பால், நன்ருமதன் சாணிப்பால், பன்றிப்பால், குன்றை நிகர்த்த நன்றியளிக்கும் மங்கையர் பால், வெள்ளாட்டுப் பால், இவைகளில் தனித்தனி பத்து நாழிகை ஊறவைத்து வேரு யெடுத்துக் கண்டங் கண்டமாய்த் துண்டந் துண்டமாய் நறுக்கிக் கிளிக் கட்டி நெல்லில் அவித்தெடுக்கத் துல்லியமான செம்புத் தொட்டிப் பாஷாணம் சுத்தியாம்.

அவித்த நெல்லைப் பள்ளம் வெட்டிக் கவித்துக்கொட்டிச் சுத் திக்கு வித்து மண் போட்டு மெத்தி விடவும்.

## அயத் தொட்டிப் பாஷாண சுத்தி.

அயத் தொட்டிப் பாஷாணத்தைச் சுயமான ஆவின் பாலில் நயமாக நான்கு ஜாமமும், நறுநெய், கொம்புத்தேன் இவைகளில் எட்டு நாளும் ஊறவைத்து ஊறின பின்னெடுக்க அயத் தொட்டிப் பாஷாணம் சுத்தியாம்.

## குதிரைப் பல் பாஷாண சுத்தி.

குதிரைப்பல் பாஷாணத்தைக் கொண்டு வந்து, உமிழ் நீர் வாங்கி அதில் ஊறப்போட்டுப் பின்பு நல்ல தண்ணீர் விட்டுக்சழுவி வெயிலிற் காயவைத்து எடுக்கக் குதிரைப் பல் பாஷாணம் சுத்தி.

10

## எலிப் பல் பாஷாண சுத்தி.

எலிப் பல் பாஷாணத்தைச் சலிப்பில்லாக் கொம்புத்தேனிற் போட்டுக் காய்ச்சி யெடுத்தால் எலிப் பல் பாஷாண சுத்தியாம்.

## சங்குப் பாஷாண சுத்தி.

சங்குப் பாஷாணத்தைப் பொங்குங் கற் சுண்ணும்புக்குள் வைத்து, அங்கம் பங்கமில்லாத அருமைச் சிறுவர்கள் நீரால் ஏழு விசை தானித்துப் பின் ஒரு பானையில் யானை மூத்திரத்தை விட்டு அதில் ஷெ பாஷாணத்தைப் போட்டு மேல் மூடி நாற்பது நாள் சமாதியில் வைத்தெடுக்கச் சங்குப் பாஷாணம் சுத்தியாம்.

## அறுபத்து நான்கு பாஷாணத்துக்கும் பொதுச் சுத்தி.

அறுபத்து நான்கு பாஷாணங்களில் எந்தப் பாஷாணமாயிருந்தாலும், அந்தப் பாஷாணத்தைச் சுத்தி செய்ய வேண்டில்; கற்றாழஞ் சாறு, வெற்றிலைச் சாறு, குப்பைமேனிச் சாறு, எலுமிச்சம்பழச் சாறு, செம்பருத்திச் சாறு, சிறுநீர், (வகைக்குப் படி ௧.) முலைப்பால் படி ௨. படிகாரம், நவச்சாரம், (வகைக்குப் பலம் ௨.) தூள் செய்து கலந்து கிளிக் கட்டியிட்டு நிழலாகக் காற்றில்லா விடத்தில் பதினைந்து நாள் வைத்தெடுத்துக் காடியில் ஊற வைத்து எடுத்துக்கொள்ளச் சுத்தியாம்.

மேனிச் சாறு, ஊமத்தஞ் சாறு, தக்காளிச் சாறு, பழச் சாறு, காடி, சிறுநீர், இவைகளைச் சம்மாகக் கலந்து இதில் உப்பு, வெடியுப்பு, நவச்சாரம், சீனக்காரம், (சுன்னம் வகைக்குப் பலம் ௧) தூள் செய்து கலந்து சரக்குகளைக் கிளியாகக் கட்டி மண்டலமிட்டெடுத்து உலர்த்திக் கொள்ள எட்டெட்டுப் பாஷாண சுத்தியாம்.

## நாவி சுத்தி.

வெள்ளித்திச் சாறு, கோமியம், இவைகளில், இரண்டு சாமம் தனித்தனி ஊறப்போட்டு, ஏரண்ட இலையிற் சாரண்டப் பொதிந்து சுத்திக்கொண்டு திருப்பித் திருப்பி நெருப்பில் வாட்டவும். நாவி சுத்தியாம்.

## நாவிக்கிழங்கின் சுத்தி.

நாவிக்கிழங்கைப் பருத்தியிலைச் சாற்றில் ஊறின பின்னெடுத்து ஆமணக்கு முத்திலைக்குள் தாமதமின்றி வைத்துச் சுத்திக் குப்

பிபிற் சொருகி ஒரு நாழிகை பொறுத் தெடுத்துச் சீந்தில் கியாழத்தில்தொலாந்திரங் கட்டி எரித்துப் பிறகு எருக்கன் பாலில் இருக்க இரு நாழிகை ஊறவைத்துப் பின்பெடுத்து எருமைக் கோமியத்தில் அருமையாய்க் கழுவி யெடுக்கவும், நாபிக்கிழங்கு சுத்தியாம்.

## இருவி சுத்தி.

ஒருவித நாபியாகிய இருவியைத் தருவித்துச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கோவின் கோமியத்தில் மூன்று நாள் ஊறப்போட்டு நாலா நாள் கோமியத்தைத் தாமியாது வடித்துப் பின்னும் மூன்று நாள் சிறுவர் சிறு நீரில்போட்டு ஊறினதை யெடுத்துப் பூமியில் வெயிலோன் வெயிலில் உலர்த்தியெடுக்க இருவி சுத்தியாம்.

## நேர்வாளம் சுத்தி.

அருமையான நேர்வாளத்தை எருமைச்சாணத்திற் பெருமை பெற்ற காடியைவிட்டுச் சிறுமையிலாது கரைத்துக் கொதிக்க வைத்தெடுத்துக் கற்றாழைச் சோற்றுச்குள் வைத்துப் புடமிட்டு அதன் நஞ்சை அஞ்சாது நீக்கிப் பழரசம் ஆவின்மோர். காடியிற் கலந்து அதிற் கொதிக்கவைத்தெடுக்க நேர்வாளஞ் சுத்தியாம்.

## கஞ்சா விதையின் சுத்தி.

கஞ்சாவைக் காம்பு முதலியவற்றைப் போக்கிக் கொஞ்சம் உப்புடன் நல்ல ஜலத்தைத் தாக்கி ஒருநாள் ஊறவைத்து மறுநாள் ஏழு முறை மீளமீளப் பிசைந்து பிசைந்து கழுவி வலுவான கெட்டிச் சீலையில் வைத்துப் பிழிந்து பின்பெடுத்து உதிரியாக உதிர்த்து உதயோன் வெயிலில் உலர்த்தி யெடுக்கச் சுத்தியாம்.

## ஊமத்தை விதையின் சுத்தி.

ஊமத்தை விதையை ஒரு ஜாமத்துவரை, பழரசத்திலும் பசு கோமியத்திலும் தனித்தனி ஊறவைத்து நிழலில உலர்த்தி யெடுக்க ஊமத்தைவிதை சுத்தியாம். இப்படியே மருளூமத்தை விதையையும் சுத்தி செய்யவும்.

## புகையிலையின் சுத்தி.

பொதிகை முனியின் பத்திரமாகிய அகத்திக்கீரை யின் மத்தியில் பிரமபத்திரமாகிய புகையிலையைச் சுருட்டிக் கட்டிச் சட்டிக்குள்

வைத்து, தண்ணீரை விட்டு அடுப்பிலேற்றி எரித்துக் கீரை வெந்தபின் சாற்றை, வடித்துப் புகையிலையை எடுத்து, எல்லோன் வெயிலில் நல்லாயுலர்த்தி யெடுக்கப் புகையிலை சுத்தியாம்.

## அபினியின் சுத்தி.

வெங்காயத்தினகத்திற் றுவாரஞ் செய்து அதில் அபினியைத் தங்கவைத்துச் சீலமண் செய்து வெங்காயம் வெந்து கரியாமல் அவிபுடமாக வைத்தெடுக்க அபினி சுத்தியாம்.

ஆவின் நெய்யில் அபினியைச் சேர்த்து மேவி மத்தித்து, வெற்றிலையிற்றடவி, சற்றே நெருப்பனலில் விருப்பமாய் வெதுப்பி யெடுக்க அபினி சுத்தியாம்.

## கபரி சுத்தி.

சுரபி மூத்திரத்திலும், சுவான மூத்திரத்திலும், கபரியைப் பொடி செய்து சீலையில் முடிந்து தனித்தனி ஏழு ஜாமம் எரித்தெடுக்கக் கபரி சுத்தியாம். செவ்வையான கல் கபரியை இவ்வண்ணமே சுத்தி செய்யலாம்.

## பாதரச சுத்தி.

சித்தி பெற்ற ரசத்தை, மனமொத்த பலம் வாங்கிச் சந்தி பூசை செய்து சுத்தமானகுழி அம்மியில் விட்டு மஞ்சள் தூளைக் கொஞ்சம் போட்டு இரண்டு நாழிகை பிரண்டுவர மத்தித்து, பிறகு ஒட்டரையைக் கலந்து வெட்ட வெளியில் சுட்ட வெயிலில் நாலு நாழிகை மேலாக வைத்திருந்து பிறகு மெல்லிய சல்லாச் சீலையில் வைத்துப் பிழிந்து கொண்டு, சந்தனச் சாறு, தேவதாரச் சாறு, வேலிப்பருத்திச் சாறு, கிலப்பனங்கிழங்கின் சாறு, புரசம் பட்டைச் சாறு, கொடிவேலிச்சாறு, ஊமத்தையிலையின் சாறு, கையாந்தகரைச் சாறு, சாரணையிலையின் சாறு, இவைகளிலே தனித்தனி இரண்டிரண்டு நாழிகை புரண்டுருளமத்தித்து அரைத்தெடுக்க பாதரச சுத்தியாம்.

## ரச செந்தூர சுத்தி.

முலைப்பாலில் முப்பது நாழிகை ஊறவைத்தெடுக்க ரச செந்தூரம் சுத்தியாம்.

## மனோசிலை சுத்தி.

குணம் பெற்ற மனோசிலையைப் பணம்போல வட்டமாக வெட்டிப் பழஞ் சீலையிற் பொட்டணங்கட்டி நிணமூற்ற வெள்ளாட்டு நீரிலே மூன்று நாள் தோலாந்திரங்கட்டி அடுப்புத் திருவிளக்குப் போலே எரிக்கவும். அதன் பின் பசுவின் பாலிலும், உளுந்து நீரிலும், தோலாந்திரமாக எரித்தெடுக்கவும். மனோசிலை சுத்தியாம். அவிழ்தங்களிற் சேர்த்துக் கொடுக்க அதிக குணமாம்.

## அன்ன பேதி சுத்தி.

அன்ன பேதியைப் பின்னமில்லாப் புது ஓட்டில் வன்னஞ் சிவக்க வறுத்தெடுக்க அன்னபேதி சுத்தியாம்.

## சகஸ்திரவேதி சுத்தி.

சிறொத்த சகஸ்திரவேதியை நாரத்தங்காய் ரசத்தில் நாலு ஜாமம் ஊறப்போட்டு உலர்த்தியெடுக்கச் சகஸ்திரவேதி சுத்தியாம். சிலைக்கெந்தி யென்றும் சாஸ்திரவேதியென்றும் இதைச் சொல்வர்.

## கல்நார் சுத்தி.

எல்லோர்க்குதவும் கல்நார் தன்னை, புல்லர் சொல்லுக்குதவும் கழுதை மூத்திரத்தில் மூன்று நாழிகை ஊறப்போட்டுக் கழுவி யானை மூத்திரத்தில் கொதிக்கவைத் தெடுக்கக் கல்நார் சுத்தியாம். கோங்கிலவம் பட்டைச் சாற்றில் நீங்காதொரு ஜாமம் ஊறப்போட்டெடுக்கக் கல்நார் சுத்தியாம்.

## கருப்புக் கல்நார் சுத்தி.

எருமைக் கொம்பு கல்நாரை எருமை மூத்திரத்தில் மூன்று நாளூறப்போட்டுப் பின்பு அலம்பிக் குஞ்சரத்தின் சிறு நீரில் கொதிக்கவைத்தெடுத்து அதை நன்றாய்க் கழுவி, இளநீரிலும், எலுமிச்சம் பழச் சாற்றிலும் தனித்தனி ஒருநாள் அறுபது நாழிகை ஊறின பின் அலம்பிக் காயவைக்கக் கருப்புக் கல்நார் சுத்தியாம்.

## காவிக்கல் சுத்தி.

காவிக்கல்லைத் தேவிற்குதவும் இளநீரில் அரைத்து அகலப் பீங்கானிற் கரைத்து வடித்து வெயிலிற் காயவைத்தெடுக்கச் சுத்தி.

## அஞ்சனக்கல் சுத்தி.

கருமிளை யாகிய அஞ்சனக்கல்லைப் பெருமை பெற்ற புளியா ரைச் சாற்றில், ஒருநா ளூறினபின் எடுக்க அஞ்சனக்கல் சுத்தியாம்.

## பொன் நிமிளை சுத்தி.

பொன் நிமிளையை முன்னம் காடியில் மூன்றுநா ளூறப்போட் டுப் பின்பெடுத்துக் கிருஷ்ண அப்ரேக்குத்தூள் ஒரு பிடி யெடுத்து மூன்றுபடி பசுவின் கோமியத்தில் வேகவைத்தெடுத்து உலர்த்தி நெல்லுடன் சேர்த்துக் கிளிக்கட்டிக் காடியில் தோய்த்து இறங்குந் தெளிவை நீக்கி உலர்த்திக் கொள்ளச் சுத்தியாம். வெள்ளிநிமிளை, வெண்கலநிமிளை, காக்கைநிமிளை இவைகளும் இதுபோற் சுத்தி செய்யலாம். மேனி சிறந்த பொன் நிமிளையைத் தேனில் மத்தித்து முரட்டுத் துணியை இரட்டை மடிப்பு மடித்துச் சீலையில் முடிந்து காணம்வெந்நீர், கோநீர், காடிநீர், இம்மூன்று நீரினும், தனித்தனி ஒவ்வொரு நாள் கிளிக்கட்டி எரித்தெடுக்கப் பொன்நிமிளை சுத்தி யாம். இதற்குக் கெந்தி யென்றும் பெயர்.

## சிலாசத்து.

உலாசமான சிலாசத்தைத் தேசிப்பழச் சாற்றில் ரேசித்திடப் போட்டுக் கொதுப்பித்து எடுத்து வெள்ளெருக்கன் பாலில் மூன்று ஜாமம் ஊறியபின் கழுவி யெடுக்கச் சுத்தியாம். அல்லிப்பூ ரசத்தில் துல்லிபமாய் ஊறவைத்தெடுக்கலாம். (அல்லது) நலாம்சமான பசுவின் பாலில் தொலாந்திரங்கட்டி எரித்தெடுக்கச் சுத்தியாம்.

## கற்பூர சிலாசத்து சுத்தி.

குணமான கற்பூர சிலாசத்தைப் பணம்போலே வட்டம் வட் டமாக நறுக்கிப் பொட்டணம் சீலையாற் கட்டி, ஒரு சட்டியை அடுப்பிலே வைத்து இந்த மருந்தைத் தொலாந்திரமாகக் கட்டித் தொங்கி நிற்க, அந்தச் சட்டியிலே பொட்டணம் மறையுமட்டும் பசுவின் பால் விட்டுத் தீபம்போல எரிக்கவும். பால் சுவறச்சுவற விடவும். இந்தப்படி காலை முதல் மாலைவரை மேலு மேலும் நாலு ஜாமம் எரிக்கவும். பிறகு இரும்புப் பாத்திரத்தில் விட்டு இரும் பாலே அரைத்து வழித்து உலர்த்தி யெடுக்கக் கற்பூர சிலாசத்துச்

சுத்தியாம். இது சகல அவிழ்தங்களுடனும் சேர்த்துப் பிரயோகஞ் செய்ய அனுப்பானமாக உதவும்.

## வெள்ளை அப்பிரகம் சுத்தி.

உள்ளியோரெவரும் தள்ளாமலேற்கும், வெள்ளை அப்ரேகத்தைக் கொல்லன் உலையிற் பழுக்கக் காய்ச்சி வெள்ளாட்டுப் பாலிற் போட்டு ஆறினபின் மெள்ள இதழ் இதழாகப் பிரித்துச் சிறுகீரைச் சாற்றில் ஆறுஜாமம் ஊறவைத்தெடுக்கச் சுத்தியாம்.

## கிருஷ்ண அப்ரேகம் சுத்தி.

கிருஷ்ண அப்ரேகத்தை வருஷமாகச் சேர்த்து வைத்த காடிவிட்டரைத்துக் கரைத்துத் தெளியவைத்திறுத்துப் பின்பு கழுநீரில் கழுவிப் பத்துக்கொரு பங்கு முத்திய கொடிவேலிவேர் சேர்த்தரைத்து ஓர் குடுவையிலிட்டு வாய்மூடிச்சீலை மண்செய்து பெரும் புடமாகப் போட்டெடுக்கக் கிருஷ்ண அப்பிரேகம் சுத்தியாம்.

## கல்மத சுத்தி.

சொல்லற்கரிய கல்மதத்தைச் செல்வச் சிறுவர் சிறு நீரிலும் நல்ல செங்கழுநீர்க் கிழங்கின் சாற்றிலும், புல்லரை யேசும் கழுதை நீரிலும், தனித்தனி மேலுமேலும் நாலுஜாமம் ஊறப்போட்டு நன்ருய் ஊறியபின் கழுவி யெடுக்கக் கல்மதம் சுத்தியாம்.

## கெருடப் பச்சை சுத்தி.

நயமான கெருடப்பச்சையைப் பயறுபோல் செய்து கிளிக்சட்டிப் பகல் முப்பது நாழிகை ஊறவைத்தெடுக்கச் சுத்தியாம்.

## படிகாரச்சுத்தி. (சீனக்காரம்)

படிகாரத்தைத் தடியான எருமைச் சாணத்திற் சடியக் கிளிக் கட்டி வைத்தெடுக்கப் படிகாரம் சுத்தியாம்.

ஆவின்பால், வெள்ளாட்டின்பால், எலுமிச்சம்பழரசம், இவைகளில் தனித்தனி விட்டரைத்து வில்லை தட்டி உலர்த்தச் சுத்தியாம்.

## சீனக்காரச்சுத்தி. (படிகாரம்)

சீனக்காரத்தை ஊனமில்லாப் பசுவின்பாலில் மூன்று ஜாமம் ஊறவைத்தெடுத்து உலர்த்திக்கொள்ளச் சீனக்காரம் சுத்தியாம். படிகாரமும் சீனக்காரமும் ஒன்றென்பர்.

## சவுக்காரச்சுத்தி.

வட்டமான சட்டியில் திட்டமாகக் கோமியத்தை விட்டபின் வேடுகட்டிப் பிட்டவியலாகச் சவுக்காரத்தை அவித்து வெயிலி லுலர்த்தி யெடுக்கச் சவுக்காரம் சுத்தியாம்.

## வெங்காரச்சுத்தி.

வெங்காரத்தை வங்காரவாசிச் சாற்றில் மூங்க நாலு ஜாமம் ஆட்டிப் புடம்போட்டெடுக்க வெங்காரம் சுத்தியாம்.

எண்ணெய் வெங்காரமாகிய வெங்காரத்தைப் பொரித்து, தண்காரமாகிய காடியிலாவது (அல்லது) பழச்சாற்றிலாவது அரைத்து வில்லைதட்டி உலர்த்தி யெடுக்க வெங்காரம் சுத்தியாம்.

## நவச்சாரச்சுத்தி.

சுரப்புற்ற சுரபியின் கோமியத்தைப் பரப்புற்ற சட்டியில் கிரப் பவிட்டு நவச்சாரத்தைக் கரைத்து அடுப்பிலேற்றி எரிப்பால் சுண் டக் காய்ச்சிப் பின்பு வெயிலிலுலர்த்தி யெடுக்கச் சுத்தியாம்.

## எவாச்சாரச்சுத்தி.

அவாவுள்ளோர்க்காகும் எவாச்சாரத்தைச் சுவாபமான வெள் ளாட்டு மூத்திரத்தில் கரைத்து வடித்திறுத்துத் திவாகரன் வெயி லிற் கவனமாய் உலரவைத்தெடுக்க எவாச்சாரம் சுத்தியாம்.

## சத்திசாரம்.

உள்ள மகிழும் சத்திசாரத்தைத் தெள்ளிமைக் காடி நீரில், மூன்று நாளும், வெள்ளாட்டுமூத்திரத்தில், மூன்று நாளும், ஊறப் போட்டு வெயிலில் நன்றுயுலர்த்தியெடுக்கச் சத்திசாரம் சுத்தியாம்.

## குந்திரிக்கம் சுத்தி.

பூராயமெல்லாம் ஏராளமாய் எடுத்துப் பேசும் சாராயத்தைத் தோரணையாய் ஒரு சட்டியில் விட்டுப் பட்டுப்போல் குந்திருக்கத் தை நுணுக்கிக் கொட்டி ஒருநாளூறவைத்து மறு நாளெடுக்கக் குந்திரிக்கம சுத்தியாம.

## துத்தம் சுத்தி.

இத்தலத்தோர்க்கேற்ற சுத்தமான துத்தத்தைப் பத்துஜாமம் அமுரியில் ஊறப்போட்டு ஊறினபின் மாறவெடுத்துக் கோவின்

கோமியத்தில் இரண்டு ஜாமம் திரண்டுவர எரித்து எடுக்கத் துத்தம் சுத்தியாம்.

## பாற்றுத்தம் சுத்தி.

வெண்டுத்தத்தைச் செண்டுபோற் றிளிக்கட்டித் துண்டரகக் கழுதை மூத்திரத்தைக் கொண்டு வந்து அதில் மூன்று நாளும், சிறுவர் மூத்திரத்தில் ஏழு நாளும், பசுவின் பாலில் இரண்டு ஜாமமும் ஊறவைத் தெடுக்கப் பாற்றுத்தம் சுத்தியாம்.

## மடற்றுத்தம் சுத்தி.

மடற்றுத்தத்தை உடற்பெருத்த எருமை மாட்டின் வெண்ணெய் (அல்லது) நெய், பால், தயிர், கற்றாழைச்சாறு, இவைகளில் தனித்தனியே இரண்டு ஜாமம் ஊறவைத்தெடுக்க மடற்றுத்தம் சுத்தியாம்.

## துரிசு சுத்தி.

பீங்கானிற் றயிரையூற்றிப் பாங்கான துருசைப் போட்டு நீங்காமல் ஒரு ஜாமம் ஊறியபின் ஷை தயிரினாலரைத்து அடைதட்டி ஓடு காயவைத்து அதிற் பிரட்டியெடுக்கத் துருசு சுத்தியாம். பத்து நாள் வெடியுப்புத் திராவகத்திலும் பத்து நாள் பானு வெயிலிலும் தனித்தனி வைத்திருந்து எடுக்கத் துருசு சுத்தியாம்.

## பச்சைத் துரிசு சுத்தி.

ஒச்சமில்லாத பச்சைத் துருசைப் பச்சைப் புல்லுண்ணும் பசுக்கோமியத்தில் அட்சணம் போட்டு அடுப்பிலேற்றி எரித்தெடுக்கப் பச்சைத் துருசு சுத்தியாம்.

## முத்துச் சுத்தி.

இத்தலத்தோர்கள் சித்தமகிழ நத்தி யணியும் முத்தை ஊமத்தங்காச் சாற்றிலும், சங்கம்பழச் சாற்றிலும், புளியம்பழச் சாற்றிலும், தனித்தனி மும்மூன்று நாள் ஊறவைத்தெடுக்க முத்துச் சுத்தியாம்.

## பவளம் சுத்தி.

நவமான படிக பாத்திரத்தில் சிவமான எலுமிச்சம்பழரசம் விட்டு,இவ்வளவுமதிப்பென்றெடுத்துரைக்கும் பவளத்தைப்போட்டு

ஒரு நாளூறவைத்து மறுநாளெடுத்து வெந்நீராற் கழுவி யெடுக்கப் பவளம் சுத்தியாம்.

## பவளக்கொடி சுத்தி.

பவளக் கொடியைப் பழரசத்தில் ஒரு நாள் ஊறப்போட்டு மறுநாள் மார்த்தாண்டன் வெயிலில் மூர்த்தாண்டமாய்க் காய வைத் தெடுக்கப் பவளக்கொடி சுத்தியாம்.

## பவளப்புத்து சுத்தி.

பவளப்புத்தைப் பசுவின் பாலிலும், மோரிலும், கிளிக்கட்டி விட்டு தனித்தனி நாலு நாழிகை எரித்தெடுக்கப் பவளப் புத்து சுத்தியாம்.

## பவளத்துத்தி சுத்தி.

பவளத் துத்தியை நவபாண்டமாகிய ஓர் புதுச் சட்டியிற் சுவம்பட்ட ஆவின் மோரை விட்டுக் கிளிக்கட்டி அதிற்போட்டு மூன்று நாழிகை ஊறினபின் மாறி யெடுத்துச் சூரியன் வெயிலில் உலர்த்தி யெடுக்கப் பவளத்துத்தி சுத்தியாம்.

## வைரம் சுத்தி. (வச்சிரம்)

தைரியமுள்ள கருப்புநிறப் பெட்டைக் குதிரையின் மூத்திரத்தில், வைரத்தை முதல் நாளும், வீரியமுள்ள வெள்ளாட்டு மூத்திரத்தில் இரண்டாம் நாளும், காரியத்துக்கான பூசணிக்காய்ச் சாற்றில் மூன்றும் நாளும், தாரிகடோறும் மீறிப்படரும் பிரண்டையின் சாற்றில் நாலாம் நாளும், தனித்தனி ஒவ்வொரு நாள் ஊறப்போட்டெடுத்து ஐந்தாம் நாள் வெந்நீரிற் கழுவி வெயிலில் உலர்த்தி யெடுக்க வைரம் சுத்தியாம்.

## வைடூரியம் சுத்தி.

அதிரநடக்கும் குதிரை மூத்திரத்தில் மூன்று நாளும், குதிரை முட்டையாகிய கலியாணப் பூசணிக்காய்ச் சாற்றில் மூன்று நாளும், ஊறப்போட்டு ஊறினதை நீராற்கழுவி கதிரவன் வெயிலில் முதிரக்காயவைத் தெடுக்க வைடூரியம் சுத்தியாம்.

## மாணிக்கம் சுத்தி.

நீணிலத்தோர் பேணிக்கொண்டாடும் மாணிக்கத்தைக் குதிரை மூத்திரத்தில் மூன்று நாளூறப்போட்டு வானுலாவும் பானு

வின் வெயிலில் மூன்று நாளும் காயவைத்து ஏழாம் நாள் வெந்நீர் விட்டுக் கழுவி யெடுக்க மாணிக்கம் சுத்தியாம்.

### மரகதம் சுத்தி,

நிலக்குமிழம் வேரைக்கலக்க அரைத்துத் துலக்கமாய் உருண்டை செய்து அதன் மத்தியில் மரகதத்தை வைத்துப் பெலக்கச் சீலை மண் செய்து குக்குடபுடம் அக்கணம் வைத்தெடுக்க மரகதம் சுத்தியாம்.

### புட்பராகம் சுத்தி.

இப்புவியதினிற் செப்புதற்கரிய புட்பராகத்தைப் புளியிலைச் சாற்றிலும், வெள்ளாட்டு நீரிலும், தனித்தனி ஒவ்வொரு நாள் ஊறப்போட்டு மூன்றும் நாள் எடுத்துச் சான்றோன் வெயிலில் காய உலர்த்திக் கொள்ளப் புட்பராகஞ் சுத்தியாம்.

### கோமேதகம் சுத்தி.

பூமேலெங்கும் புகழ்பெற்றிருக்கும், கோமேதகத்தை, நிலக்குமிழம் இலைச்சாற்றிலும், துலக்கமான தும்பைப்பூச் சாற்றிலும், குதிரை நீரிலும், தனித்தனி ஒவ்வொன்றிலும், மும்மூன்று நாள் ஊறவைத் தெடுக்கக் கோமேதகம் சுத்தியாம்.

### நீலம் சுத்தி.

தாலத்திற்பாலரும் கோலரும் சாலவணியும் நீலத்தைக் கழுதை மூத்திரத்தில் மூன்று நாளூறப் போட்டு நாலா நாள் வெயிலிற் காயவைத்து வெந்நீரிற் கழுவி யெடுக்கச் சுத்தியாம்.

நிலக்குமிழம் வேரையரைத்து உருண்டை செய்து அதன் மத்தியில் நீலத்தை வைத்துச் சீலைமண் செய்து கோழிப் புடமிட்டெடுக்க நீலம் சுத்தியாம்.

### படிகம் சுத்தி.

இச்சையான படிகத்தைப் பச்சைப் பசும்பாலில் ஏழு நாள் ஊறவைத்தெடுக்கவும். நாள்தோறும் பழைய பாலை வடித்துப் புதியபாலை விட்டுவரவும்.

### கடல்நுரை சுத்தி.

கடல்நுரையைக்கிளிஞ்சில் சுண்ணத்துடன் தாளித்துக் கழுவி யெடுக்கக் கடல்நுரை சுத்தியாம்.

## கடற்பாசி சுத்தி.

மாசிலாக் கடற்பாசிக்குச் சுத்தி வேண்டுவதில்லை.

## சமுத்திர சோஷிவிதை சுத்தி.

ஓடு நீக்கி உள்ளே இருக்கிற பருப்பை நாடியே எடுத்துக் கொள்ளவே சமுத்திர சோஷிவிதை சுத்தியாம்.

## பலகறை சுத்தி.

பலகறையைத் தலமுறை சென்ற வேம்பின் சாற்றிலும், எலுமிச்சம்பழச் சாற்றிலும், இரு குரங்குச்சாருகிய முசுமுசுக்கைச் சாற்றிலும், தனித்தனி ஒவ்வொரு நாள் ஊறப் போட்டுப் பின் பெயித்து நன்றாய்த் துடைத்து நெருப்பனலில் வெதுப்பி யெடுக்கப் பலகறை சுத்தியாம்.

## ஆமை ஓட்டின் சுத்தி.

நெருப்பனலில் சுட்டெடுக்க ஆமை ஓடு சுத்தியாம்.

## முட்டை ஓட்டின் சுத்தி.

குஞ்சுபொரித்த கோழி முட்டை ஓட்டுடன் பூநீரைக்கூட்டிச் செவ்வையான நீரைவிட்டு ஒரு ஜாமம் எரித்து சவ்வை நீக்கி வெயிலிற் காயவைத்தெடுக்க முட்டை ஓடு சுத்தியாம்,

## கிளிஞ்சில் சுத்தி.

உவந்த உவர் மண்ணில் கவந்தமாகிய தண்ணீரைவிட்டுக் கரைத்து அதிற் கிளிஞ்சிலைப் போட்டு இரண்டு ஜாமம் கொதிக்க வைத்தெடுக்கக் கிளிஞ்சில் சுத்தியாம்,

## முத்துச் சிப்பி.

பூநீராகிய உவருப்பைக் கரைத்து அதில் முத்துச் சிப்பியைப் போட்டு நெருப்பில் கொதிக்க வைத்து நல்ல ஜலம் விட்டுக் கழுவி யெடுக்க முத்துச் சிப்பி சுத்தியாம்.

## ஊது-சங்குச் சுத்தி.

பொங்குங் கடலில் எங்கும் விளங்கும் சங்குகளைக் கொண்டு வந்து பசுவின் மோரைச் சட்டியில் விட்டு ஏழுநாள் தங்கும்படி ஊறவைத்தெடுக்கச் சங்குகள் சுத்தியாம்.

## சோத்துப்புச் சுத்தி. (கறியுப்பு)

உருண்டைச் சட்டியில் இருநாழித் தண்ணீரும் ஒரு நாழி உப்புங்கொட்டி அந்நீரில் தேத்தாவிரையை உரைத்துத் தெளிய வைத்து அடிமண்டியை வடிய இறுத்து, சற்று பொறுத்து ஜலத்தைப் படியக் காய்ச்சினால், பழையபடி ஒருபடி உப்பு வெள்ளிக் காசுபோலிருக்கும். அந்த உப்பை எடுத்து வைத்துக்கொண்டு பத்தியத்துக்கு உபயோகப்படுத்தலாம்.

## உப்புச் சுத்தி. (சோத்துப்பு)

கறியுப்பைத் தேவையானது வாங்கி ஒரு புதுச்சட்டியிற் போட்டு அது அமுங்கும்படியாகத் தைவேளைச்சாறு, குப்பைமேனிச்சாறு இவை தனித்தனிவிட்டு மூன்றுநாள் ஊறினபின் வெயிலில் காயவைத்துலர்த்தி யெடுக்க உப்புச் சுத்தியாம்.

## பாரை உப்புச் சுத்தி.

பாரை உப்பாகிய சிவந்த உப்பைப் பசுவின் கோமியத்தில் ஊறப்போட்டுச் சூரியன் வெயிலிற் காயவைத்தெடுக்கப் பாரை உப்புச் சுத்தியாம்.

## அட்டுப்புச் சுத்தி.

அட்டுப்பு அளவுபடி எவ்வளவோ? அதற்கு நான்கு படி அளவு மோரை விட்டுச் சேரக்கரைத்து வடித்து சுண்டக்காய்ச்சி அண்டயோனி வெயிலிற் காயவைத்தெடுக்க அட்டுப்பு சுத்தியாம். பொட்டிலுப்பையும் இப்படியே சுத்தி செய்யலாம்.

## இந்துப்புச் சுத்தி.

இந்துப்பை முந்தக் காடியில் மூன்று நாள் ஊறப்போட்டுப் பிந்தப் பிங்கலன் வெயிலில் அந்தமா யுலர்த்தியெடுக்க இந்துப்புச் சுத்தியாம்.

## வளையலுப்புச் சுத்தி.

வளையலுப்பைக் கிளிகிளியா யோடும் புளியிலைச்சாறிலும், குளுகுளப்பான காடி நீரிலும், ஊறப்போட்டு ஒளியின் வெயிலிற் கழிவில்லாமற் காயவைத்தெடுக்க வளையலுப்புச் சுத்தியாம்.

## கல்லுப்புச் சுத்தி.

கெட்டியான கல்லுப்பைச் சட்டியிற் கொட்டி அதிற் காடி நீரை விட்டு எட்டு ஜாமம் ஊறப்போட்டுக் கெட்டுவிடாமல் ஈரம் போகத்துடைத்து, மாராமல் வெயிலில் உலர்த்திப் பின் சட்டியிற் கொட்டிக் கெட்டியாய் வறுத்தெடுக்கக் கல்லுப்புச் சுத்தியாம்.

## வெடியுப்புச் சுத்தி.

வெடியுப்பின் அளவுக்கு நாலுமடங்கு சுத்த ஜலத்தை ஒரு பாத்திரத்தில் மெத்தவிட்டுக் காய்ச்சிக் கொதிக்கும்போது மதிப் பாய்ப் புளித்த மோரைக் கொஞ்சம் விட்டுக் கலக்க அழுக்குத் தள்ளும். அவ்வழுக்கை மேலாகச் சல்லிக்கரண்டியாற்றள்ளி அப் புறப்படுத்தி மீண்டுங் காய்ச்சும்போது ஒரு துளி ஓலையின் மீது விட உறையும். அப்பக்குவத்தில் கீழே இறக்கிவைத்து ஓரிரவு ஆறவிடக் கம்பிகளாக உறையும். இவைகளை அகலப் பீங்கான் தட்டுகளிலிட்டு ரவியில் உலர்த்தவும். எடுத்த கம்பிகள்போக மிகுதியுள்ள ஜலத்தோடு பின்னும் நான்கு மடங்கு ஜலம் விட்டு முன்போலக் காய்ச்சி ஆறவிட்டுக் கம்பிகளாக வரும் உப்புகளை, எடுத்துலர்த்தி முன் உப்போடு கூட்டவும். இப்படி உப்புக் கிடைக் கும்வரையிற் காய்ச்சிக் காய்ச்சி எடுப்பதே வெடியுப்புச் சுத்தி யாம். இவ்வண்ணம் செய்த உப்புக்கு ஒரு தீட்சை முடிந்த உப் பென்பர். செவ்வையாய் இப்படி ஏழுமுறை செய்யின் சப்த தீட்சை முடிந்த உயர்தரமான உப்புச்சுத்தி யென்று சித்தர்கள் கொண்டாடுவார்கள்.

## உழமண் உப்புச் சுத்தி.

உழமண்ணுப்பு அளவுக்கு நான்கு மடங்கு ஜலம் விட்டுக் கரைத்து மறுநாள் வரையில் அசையாமல் வைத்து, அதின் தெ ளிவை வடித்துச் சுண்டக்காய்ச்சி வெயிலில் உலர்த்தியெடுக்க உழ மண்ணுப்புச் சுத்தியாம்.

## உவர்மண் சுத்தி.

உவர்மண்ணைச் சுத்த ஜலம் விட்டுக் கரைத்துத் தெளியவைத் திறுக்கச் சுண்டக்காய்ச்சி வெயிலிலுலர்த்தி யெடுக்க உவர்மண் சுத்தியாம்.

## பூநீர் சுத்தி.

பூநீர் அளவுக்கு நான்கு மடங்கு ஜலம் விட்டுக் கரைத்து நாலு மணி நேரம் தெளியவைத்து ஒரு வாயகன்ற பாத்திரத்தில் விட்டுப் பகலோன் வெயிலில் வெகுநேரம் காயவைத்தெடுக்கப் பூநீர் சுத்தியாம்.

## கூடைநீர் சுத்தி.

தாகத்தைப் போகச் செய்யுந் தண்ணீரில் கூகை நீரைப் போட்டுக் கரைத்துத் தெளிந்த பின் வடிகட்டித் திவாகரன் வெயிலில் உலர்த்தி யெடுக்கக் கூகைநீர் சுத்தியாம்.

## நாகணஞ் சுத்தி.

பூநாகமாகிய நாகணத்தைச் சேகரஞ் செய்து ஓர் பாகமாய் வில்லை வில்லையாய் அறுத்து ஒரு சட்டியில் நெய் தடவி அதிற் போட்டு வில்லைகள் வளையும்படி வறுத்தெடுக்க நாகணம் சுத்தி.

## பூநாக சுத்தி.

நாங்கூழ் வென்னும் நாக்குப்பூச்சியைப் பாங்கான பசுவின் பால்விட்டு மூன்று ஜாமம் வைத்திருக்க மண்ணெல்லாம் தன்னாலே கக்கிவிடும். பின்பு நல்ல ஜலம் விட்டலம்பி எடுக்கப் பூநாகம் சுத்தியாம்.

## இந்திரகோபஞ் சுத்தி.

மைந்தர்கள் மகிழ்வாய் எடுத்துவிளையாடும் சுந்தரமான இந்திரகோபப் பூச்சியைத் தைலப்பசை போகாவண்ணம் படிக பாத்திரத்தில் போட்டு உலர்த்தியெடுக்க இந்திரகோபஞ் சுத்தியாம்.

## கருப்புச் சுத்தி.

கரும்பின் மேற்றோலைச்சீவி நீக்கி, திரும்பக்கணுவையும் போக்கித் துண்டந்துண்டமாய்க் கண்டனஞ் செய்து கழித்தெடுக்கக் கரும்பு சுத்தியாம்.

## சர்க்கரை சுத்தி.

சர்க்கரையை வாங்கி அதிலுள்ள கட்டிகளை யெல்லாம் அம்மியிற் கொட்டி தட்டி நொறுக்கிப்ரைத்து முறத்திலெடுத்துக் கொள்ளச் சர்க்கரை சுத்தியாம்.

## தேன்மெழுகு சுத்தி.

தேன்மெழுகைத் தானுருக்கித் தெளியவைத்துப் பான்மாறுத வடிகட்டி யெடுக்கத் தேன்மெழுகு சுத்தியாம். கொசுவின் தேன் மெழுகு மஞ்சள்மெழுகு வெள்ளைமெழுகு இவைகளை இதுபோற் சுத்தி செய்யலாம்.

## தங்கம் சுத்தி.

எங்கும் மதிப்புத்தங்கும் தங்கத்தைத் தகடடித்துச் செங்காவி யென்னும் செம்மண்ணைக் குழம்பக் கரைத்து, இருபுறமும் பூசி விருப்பமாய் நெருப்பில் வைத்து நெருப்புப்போற் காய்ச்சி யெடுக் கத் தங்கஞ் சுத்தியாம்,

## வெள்ளி சுத்தி.

வெள்ளிவய பெல்லிசாய் ஈசலிறகுபோல் தகடுதட்டிச் சிவக் கக்காய்ச்சிப் பழுபாகற்கிழங்குச் சாற்றில் ஏழுதரம் நனைத்தெடுக்க வெள்ளி சுத்தியாம்.

வங்கமாகிய வெள்ளியுடன் கருவங்கமாகிய ஈயத்தைச் சம மாகச் சேர்த்து உருக்கி அந்த ஈயப்போக ஊதி யெடுக்க வெள்ளி சுத்தியாம்.

## செம்புச் சுத்தி.

செப்பைத் தகடு தட்டி, தாரம், சாரம், பழச்சாறு, சிறுவர் நீரும், ஒன்றாய்ச் சேர்த்து அதில் அத்தகடைப் போட்டுப் பத்து நாள் ஊறினபின் நன்றாய்க் கழுவி வெயிலில் வைத்தெடுக்கச் செம்பு சுத்தியாம்.

துட்டை மெல்லிசாய்த் தட்டி வைத்துக்கொண்டு, கொடிக் கள்ளிக் கொழுந்தையும், கொடிவேலிச் சிறு செல்வி சிறு நீரையும் விட்டரைத்துத் தகட்டின் மேலுங்கீழும் திண்ணமாய்ப் பூசி ஓட் டில் வைத்துச் சீலைமண் செய்து, காட்டெருவிற் புடம் போட் டெடுத்துப் பின்னும், மேனிச்சாறும் வெற்றிலைச்சாறும் முன் போல் விட்டு அதுபோற் புடம்போட்டு ஆறினபின்செங்கற்றா ளால் ஒரு புடமிடச் செம்பு சுத்தியாம்.

## தாம்பிர சுத்தி.

குன்றிமணிப்பருப்பு, அன்றெடுத்த காதுக்குரும்பி, குன்றை வில்லிகொடுத்த ரசம், அப்பிரேகம் சினக்காரம், இவை வகைக்கு விராகனெடை (அரை) இவைகளைக் கல்வத்திலிட்டு எருக்கன் பால் விட்டு இருக்கமாய் அரைத்துத் தாம்பிரத் தகட்டுக்குத் தடவிப் பத்து எருவின் மத்தியில் வைத்துப் புடம்போடத் தாம்பிரம் சுத்தியாம்.

தாம்பிரத்தை ஈசலிறகுபோல் தகடு தட்டி வைத்துக்கொண்டு புளித்த மோரிலும், பொன்னாங்காணிச் சாறிலும், காணம் வெந்த நீரிலும், கற்றாழைச்சாறிலும், புளியிலைச் சாற்றிலும் வெவ்வேறு தனித்தனி ஏழுமுறை தகட்டை நெருப்பிற் பழுக்கக் காய்ச்சி, மேலே சொன்ன மோரிலும் நீரிலும் சாறிலும் நனைத்து நனைத்து எடுக்கத் தாம்பிரம் சுத்தியாம்.

கெந்தகத்தைக் கல்வத்திலிட்டு எருக்கன் பாலைவிட்டு நன்று யரைத்து சுத்திசெய்த செம்புத் தகட்டுக்குப் பூசி ஒரு அகலில் வைத்து மேலும் ஒரு அகில் மூடிச் சீலை மண்செய்து கெஜபுடம் போடவும்.

## பித்தளை சுத்தி.

பித்தளையை மெத்த மெலிசாய்ச் சுத்தமாய்த் தகடடித்துச் சிவக்கச் சிவக்கக் காய்ச்சிக் காய்ச்சி அடியிற்கண்ட நீரிலும், சாறிலும், பாலிலும், மூன்றுதரம் தோய்த்துத் தோய்த்து எடுக்கவும்.

## அதன் விபரம் பின்வருமாறு காண்க.

வெள்ளாட்டுப் பாலும், கொள்ளுவெந்த நீரும், மேனியிலை புளியிலைகளின் சாறும், தனித்தனி ஒவ்வொன்றிலும் வெவ்வேறுகக் காய்ச்சித் தோய்க்கப் பித்தளை சுத்தியாம்.

## வெண்கல சுத்தி.

வெண்கலத்தைக் கன்விட்டாடக் காய்ச்சிக் காணம் வெந்த நீரிலும், புளியிலைச் சாறிலும், ஏழுதரம் தனித்தனி தோய்த்தெடுக்க வெண்கலம் சுத்தியாம்.

## வெள்வங்கம் சுத்தி.

வெள்வங்கத்தை எள்ளெண்ணெய், இலுப்பை எண்ணெய் தேங்காய் எண்ணெய், இவைகளைச் சமபாகமாகக் கலந்து நவச் சாரத் தூள் தூவி அதில் ஏழுதரம் உருக்கிச் சாய்க்கவும் (அல்லது) மஞ்சள் நீர், கொள்ளுவெந்த நீர், காடிநீர், எலுமிச்சம்பழச்சார், கோமியம், மோர், இவைகளிலும் தனித்தனி உருக்கிச் சாய்க்க வெள்வங்கம் சுத்தியாம்.

## வெள்வங்கபற்ப செந்தூரம்.

வெள்ளியத்தை நல்லபுதுச் சட்டியிலிட்டு நாயுருவிச் சாம்பல் போட்டு வறுக்கப் பற்பமாம். அந்தப் பற்பத்தை முந்த எடுத்து எலுமிச்சம்பழச் சாறுலரைத்து மூன்று செம்புப் புடம் போடச் செந்தூரமாம்.

## வேறு விதம்.

அரிதாரத்தைப் புரசப்பட்டைச் சாற்றாலரைத்து சரியான வெள்ளியத்தைத் தகடாகத் தட்டி அந்தத் தகட்டிலே ஷை அரி தாரத்தைப் பூசிக் குகையிலிட்டு ஒருபுடம் போடச் செந்தூரமாம்.

## கருவங்கம் சுத்தி.

கருவங்கத்தை, பிரண்டைவேரை யரைத்து வெள்ளாட்டு மூத் திரத்திற்போட்டு எள்ளெண்ணெய் விட்டுக் கலக்கிக்கொண்டு அதில் பத்துத்தரம் உருக்கிச் சாய்க்கக் கருவங்கம் சுத்தியாம்.

## ஷை 2,

காரீயத்தை வீரியமான இலுப்பை எண்ணெய்யிலும், கண் டங்கத்திரிவேர்ச் சாற்றிலே துண்டு துண்டாய் ஏழுதரம் சாய்த் தெடுக்கக் காரீயம் சுத்தியாம்.

சுத்தியான காரீயத்தை மெத்த மெலிசாய் ஈசலிறகுபோல் தகடு தட்டி மனோசிலையைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாய் அரைத்துத் தகடெல்லாம் பூசி உலர்த்தி அந்தத் தகட்டை முந்தச்சட்டியில் வைத்துப் பிந்த ஒரு சட்டிகொண்டு மூடிச் சந்து வாய்க்கோடி மூடி சீலமண் செய்து காய்ந்தபின் பிறகு காட்டெருவில் நூறு எருவு கொள்ளும்படியாகப் பள்ளம் வெட்டிக் கெஜபுடம் போடவும். புடம் பார்த்து திடமாகாவிட் டால் குக்குடபுடம் போடக் காரீயம் செந்தூரமாம். அதைச் சகல வித நோய்களுக்கும் பிரயோகஞ் செய்யலாம்,

## நாகம் சுத்தி.

தாகமான நாகத்தைப் பாகமாய் வாங்கிவந்து வைத்துக் கொண்டு, வெள்ளாட்டு நெய், பிள்ளைகளின் சிறுநீர், பழச்சாறு இவைகளைச் சமமாகக் கூட்டிக் கற்சுன்னத்தில் விட்டுக் கலக்கி அதில் ஷெ நாகத்தைப் பத்துத்தரம் உருக்கிச் சாய்க்க நாகம் சுத்தியாம்.

## நாகம் பற்பம்.

துத்தநாகத்தைத் திரண்டுருண்டையாய்க் கம்பிபோலடித்துப் பணம்போல் வட்டமாய் வெட்டி நறுக்கின பிறகு, ஆடாதோடையிலையின் சாறுபிழிந்து வேறொரு சட்டியில் விட்டு நாகத்தின் துண்டுகளைக் கொட்டி ஷெ ஆடாதோடைக் கொம்பினால் ஒரு ஜாமம் கிண்டிக்கிளறி மத்திக்கப் பற்பமாம். பற்பமாகாவிடில், இப்படியே பின்னையும் ஒரு ஜாமம் முன்போல் அந்தச் சாற்றை விட்டு அந்தக் குச்சியினாற் கிண்டி வறுக்கத் துத்தநாகம் சுத்தமான பற்பமாம்.

## அரபொடி சுத்தி.

அரமாகிய இரும்பு அரத்தை அக்கினி மயமாய்க் காயவைத்துப் பொடியாய் இராவி இந்தப் பொடியை ஊசிக்காந்தத்தாலொட்டி யெடுத்து அதை நல்லெண்ணெய்யிற் கொதிக்கவைத்து நன்றாய்க் கொதித்ததின் பிறகு எடுத்துக்கழுவ அரபொடி சுத்தியாம்.

வேலாம் பட்டைச் சாற்றின் மேலாய் அரபொடியைப் போட்டசட்டியை அடுப்பிலேற்றி ஒரு ஜாமம் வேகவைத்தெடுக்க அரபொடி சுத்தியாம்.

புளியிலைச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு, முருங்கைப்பட்டைச் சாறு, கோமூத்திரம், இவைகளில் தனித்தனியே சாறு நீரு விட்டரைத்துக் கொதிப்பித்துக் காய்ந்ததின் பிறகு பொடி செய்து குகையிலிட்டு மூடிச் சீலைமண் செய்து வாய்மூடிக் கெஜபுடம் போடப் பற்பமாம். இந்தப் பற்பம் அவிழ்தங்களிற் கூட்டலாம்.

## அயச் சுத்தி.

இரும்புப் பொடியை விரும்பும் எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்று நாள் ஊறப்போட்டு நாலாநாள் நல்லெண்ணெய்யில் ஊற

வைத்துப் பின்னெடுத்து, அயச்சட்டியில் அப்பொடியை வறுத்துச் சற்று பொறுத்துக் காடியிற்கழுவி யெடுக்க அயம் சுயமான சுத்தியாம்.

## சந்தனக்கட்டையின் சுத்தி.

சந்தனக் கட்டையிற் றெருங்கித்திருக்கும் வைர பாகத்தைத் தைரியமாய் எடுத்துக்கொண்டு ஏனைய பாகத்தைத் தானேவிடுத்து விடுவதே சந்தனக் கட்டையின் சுத்தியாம்.

செஞ்சந்தனக் கட்டை, கறுப்பு அகிற் கட்டைகளையும் இவ்விதஞ் செய்யச் செவ்வையான சுத்தியாம்.

## தேவதாருவின் சுத்தி.

தேவதாருவுக்காதரவான வைர பாகத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பொன்வறலாக வறுத்து எடுக்கத் தேவதாரு சுத்தியாம்.

## மயிலிறகு சுத்தி.

ஒயிலான மயிலிறகைச் சட்டியிலிட்டுக் கரியாகும்படி எரித்தெடுக்க மயிலிறகு சுத்தியாம்.

## உரோமம் சுத்தி.

சிரைத்த மயிரில் நரைத்த மயிரை நீக்கிக் கருத்த மயிரைச் சியக்காய் நீரிற்போட்டுக் கொதிக்கவைத்துக் கசக்கிப்பின் நல்ல நீரை விட்டு அலம்பி யெடுக்க உரோமம் சுத்தியாகும்.

## பச்சிலைமூலிகைப் பஞ்சாங்கம்.

இச்செகத்தோர் இச்சிக்கும் பச்சிலை மூலிகைகள் எத்தனையோ லெட்சக்கணக்காய் ஏற்பட்டிருக்கின்றன. அதில் எவ்வித பச்சிலைகளாய் இருந்தபோதினும், சுத்திசெய்வதே மெத்த நலமெனச் சித்தாதிகள் சித்தம் தெளிந்து மகிழ்ந்து திருவாய் மலர்ந்திருக்கின்றார்கள். இங்ஙனம் அதை எடுத்துரைப்போமாக.

## 1. இலைகளின் சுத்தி.

எவ்வித இலைகளையும் செவ்வை செய்யவேண்டில் அவ்வியமாகிய அழுகல்-பழுப்பு முதலியவைகளை அகற்றித் திவ்விய வஸ்திரத்தால் துடைத்து வைக்கப் பலவகை இலைகளும் சுத்தியாம்.

## 2. புஷ்பங்களின் சுத்தி.

கப்புங்கவருமுள்ள புட்பச்செடிகளிற் புஷ்பித்திருக்கும் புஷ்பங்களைக் கொய்து, அதன் காம்பும், மகரந்தம் புல்லிதழ்களைத் தள்ளி நல்லிதழ்களை யெடுத்துக் கொள்வதே புஷ்பச் சுத்தியாம்.

## 3. வேர்களின் சுத்தி.

நாற்றிசையோர்க்கும் ஏற்ற மருந்தெனச் சாற்றிடும் வேர்கள் பலவுள. அவைகளை ஆற்றுநீரினாலாற்றிக் கழுவிக்கொள்ளச் சகலவேர்களுஞ் சுத்தியாம்.

## 4. கிழங்குகளின் சுத்தி.

எக்கிழங்குகளையும் பக்குவமாய்க் கழுவி முக்கியமாய் மேற்றோலையும், தக்க உள்நரம்பையும் நீக்கித் துடைத்துக்கொள்வதே சகல கிழங்குகளுஞ் சுத்தியாம்.

## 5. பட்டைகளின் சுத்தி.

வெட்டியெடுத்த பட்டைகளை ரெட்டுத் துணியாற் றுடைத்து மேற்றோலை விட்டுவிடாமற் சிறிய கத்தியால் மிருதுவாய்ச் சீவிக் கொட்டிவைப்பதே பட்டைகளுக்குக் கெட்டியான சுத்தியாம்.

## நிலவாவரையின் சுத்தி.

நிலவாவரையின் சமூலத்தைக் கொண்டுவந்து நிழலில் உலர்த்திப் பொடியா யிடித்துச் சூரணம் செய்து ஒரு மண் பாண்டத்தில் பால்விட்டு வேடுகட்டிச் சூரணத்தை வைத்து மேற்சட்டி மூடி பிட்டவியல் போல் ஒரு ஜாமம் எரித்தெடுக்க நிலவாவரை சுத்தியாம்.

## பிரண்டையின் சுத்தி.

திரண்ட பிரண்டையைக் கணுக்களைத் தரித்து மேற்றோலை உரித்துப் புளிப்பு மோரில் கொஞ்சம் உப்புச் சேர்த்து மூன்று நாள் ஊறவைத்து நாலா நாள் ஞாயிறு வெயிலிற் காயவைத்தெடுக்கப் பிரண்டை சுத்தியாம்.

களிப்பிரண்டை, தீப்பிரண்டை, புளிப்பிரண்டைகளை இவ்விதஞ் சுத்திசெய்யலாம்.

## செவ்வள்ளியின் சுத்தி.

செவ்வள்ளியைக் கொண்டுவந்து செவ்வை செய்து செங்கதிரோன் வெயிலிற்றங்க வைத்தெடுக்கச் செவ்வள்ளி சுத்தியாம்.

## நிலவேம்பின் சுத்தி.

பலம்பெற்ற நிலவேம்பை நல்முற்ற அலரி வெயிலில் உலர வைத்தெடுக்க நிலவேம்பு சுத்தியாம்.

## சிவனார்வேம்பின் சுத்தி.

புவனத்தோர் போற்றும் சிவனார்வேம்பை நவமாகக் கொண்டுவந்து திவாகரன் வெயிலில் அவாவொடு உலர்த்தியெடுக்கச் சிவனார் வேம்பு சுத்தியாம்.

## சீந்திற்கொடியின் சுத்தி.

சீந்திற்கொடியின் மெற்றோலைச் சீவி மீந்ததைச் சாந்தமாய் எடுப்பதே சீந்திற்கொடியின் சுத்தியாம். இதற்கு அமுதவல்லி யென்றும் பெயர்.

## மகரப்பூவின் சுத்தி.

தடிக்காம்பாகிய அடிக்காம்பையும், சோம்பாமல் அதன் நடுவிலிருக்கும் மகரந்தத்தையும் விலக்கிப் பகலோன் வெயிலில் அகலாது காயவைத்தெடுக்க மகரப்பூ சுத்தியாம்.

## காட்டாத்திப் பூவின் சுத்தி.

காம்பாய்ந்த காட்டாத்திப் பூவைச் சோம்பாமற் சூரிய புடத்திற் போட்டாத்தி யெடுக்கக் காட்டாத்திப்பூ சுத்தியாம்.

## சிறு நாகப்பூவின் சுத்தி.

தூசிகளை மாசறப்போக்கி வாசியேழுடைய மார்த்தாண்டன் வெப்பந்தாக்கி யெடுக்கச் சிறு நாகப்பூ சுத்தியாம்.

## குங்குமப்பூவின் சுத்தி.

எங்கும் விளங்கும் குங்குமப்பூவைத் தங்கமான காகிதத்தில் தங்கும்படி பரப்பி அங்கியின் கனலிற் காட்டி அதனங்கம் சொறுங்கும் பதத்தில் எடுக்கக் குங்குமப்பூ சுத்தியாம்.

## இலவங்கப்பூவின் சுத்தி. (கராம்பு)

இலவங்கப்பூவிற் றுலங்குந் தூசியைக் களங்கமறப்போக்கி விளங்கும் வெய்யோன் வெயிலிற்றுக்கி நலங்காமலுலர வைத்தெடுக்க இலவங்கம் சுத்தியாம்.

## மஞ்சள்கிழங்கின் சுத்தி.

மஞ்சட்கிழங்கின் மேற்றோலை மிஞ்சவிடாது சீவி நீக்கிச் சிறு துண்டுகளாக்கிச் செஞ்சுடரோன் வெயிலிற்றுக்கி அஞ்சாதுலர்த்தி யெடுக்க மஞ்சள் கிழங்கு சுத்தியாம்.

மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள் இவைகளை இவ்விதம் சுத்தி செய்யலாம்.

## கிச்சிலிக்கிழங்கின் சுத்தி.

இச்வசயான கிச்சிலிக் கிழங்கை உச்சி வெயிலில் அச்சமற வைச்சுலர்த்தியிடித்துப் பொடித்து எடுத்துக்கொள்வதே கிச்சிலிக் கிழங்கின் சுத்தியாம். (இதைப் பூலாங்கிழங்கென்பர்,)

மஞ்சிட்டியும் இவ்விதம் செவ்வையாய்ச் சுத்தி செய்யலாம்.

## அமுக்கிறுக் கிழங்கின் சுத்தி.

அசுவகந்தியெனும் அமுக்கிறுக் கிழங்கை, அருணன் கிரணம் பட உலர்த்தி உரலில் இடித்துப் பொடித்துச் சூரணஞ் செய்து ஒரு சட்டியில் பசுவின் பாலைக் கொட்டிச் சீலைபால் வேடுகட்டி அதில் இச்சூரணத்தைத் தட்டி மேற் சட்டிகொண்டு மூடி அடுப்பிலேற்றி ஜாமநேரம் ஈமம் வைத்தெரித்துப் பிட்டவியல் அவித்துவிட்டு விடாமற் காயவைத்தெடுக்க அமுக்கிறுக்கிழங்கு சுத்தியாம்.

தலப்பனை யென்னும் நிலப்பனைக் கிழங்கும், நீர்மீட்டான் கிழங்கென்னும் தண்ணீர்மீட்டான் கிழங்கும் இவ்விதமே செவ்வை செய்யச் சுத்தியாம்.

## முத்தக்காசின் சுத்தி.

முத்தக் காசாகிய கோரங்கிழங்கைச் சித்திரபானு வெயிலில் நாலு ஜாமம் வைத்துலர்த்தி யெடுக்க முத்தக்காசு சுத்தியாம்,

## இஞ்சிக் கிழங்கின் சுத்தி.

இஞ்சிக்கிழங்கை மிஞ்சவிடாது மேற்றோலைச் சீவி, அஞ்சுநாளான புளித்த மோரில் ஒருநாளூறப்போட்டு மறுநாள் சுத்த ஜலத்திற் கழுவி யெடுக்க இஞ்சி சுத்தியாம்.

## சித்திரமூலம் சுத்தி. (கொடிவேலி வேர்.)

சித்திரமூலத்தின் மத்தியிலுள்ள நரம்புகளைத் தள்ளி மெள்ள மேற்பட்டையை அள்ளியிடித்துத் தெள்ளிச் சூரணஞ் செய்து ஒரு வாயகன்ற பாத்திரத்தில் இரு நாழி மாத்திரம் பசுவின்பால் விட்டு வேடுகட்டி அதன்மேல் சூரணத்தைப் பூரணமாய்ப் பரப்பி மேலும் சட்டிமூடி நாலு நாழிகை சிறுக எரித்துச் சூரணத்தை எடுத்துலர்த்திப் பின்னும் முன்னம் பக்குவஞ்செய்த அச் சூரணத்தைக் கல்வத்திலிட்டு அரைத்தெடுக்கச் சித்திரமூலம் சுத்தியாம்.

சருப்புச் சித்திர மூலத்தை இதுபோற் சுத்தி செய்யலாம்.

## சிவதைவேர் சுத்தி.

சிவதைவேரின் நடுவிலிருக்கும் அவமாகிய நரம்புகளை எடுத்துவிட்டுப் பசுவின் பாலிற்போட்டுக் கவனமாய் அடிக்காந்தாமல் அவித்துப் பிறகு ஆதவன் வெயிலிற் கோதிலாதுலர்த்தி யெடுக்கச் சிவதை வேர் சுத்தியாம். வெண்சிவதை வேரையும் கருஞ்சிவதை வேரையும் இவ்விதம் செவ்வை செய்யச் சுத்தியாம்.

## வெட்டிவேர் சுத்தி.

மட்டுக்கடங்கா வெட்டிவேரை வெட்டிக் கட்டை கட்டையாய்த் துண்டு துண்டாய் நறுக்கி அலரி வெயிலில் உலரவைத்தெடுக்க வெட்டிவேர் சுத்தியாம். விலாமிச்சவேரையும் இப்படியே சுத்தி செய்யலாம்.

## அதிமதுரம், குன்றிமணிவேர் சுத்தி.

அதிமதுரத்தை நதிநீரா லலம்பி, மேற்றோலை மிருதுவாய்ச் சீவி சிறு துண்டுகளாக நறுக்கிச் சண்டன் வெயிலிற் கண்டபடி பரப்பி உலர்த்தியெடுக்க அதிமதுரம் சுத்தியாம்.

பெரிய வைத்திய அரிச்சுவடி.

முற்றிற்று.

---